Y15
N18

178554

# மாதர் கடமை.

OFFICE OF THE ... 10 SEP ...

ிருகையன்

ிதுபட்டி

ights Reserved.)

# மாதர் கடமை.

10 SEP 1918

1
870
3-1918

இந்தியா அச்சுக்கூடம், சென்னை.

# முன்னுரை.

இந் நூலுக்கு ஒரு முன்னுரை யெழுத நான் விசேஷ தகுதி யுடையவனல்ல என்பது எனக்குத் தெரியும். இந் நூலின் ஆசிரியர்மீது எனக்குள்ள அன்பும், தமிழ் மாதர் மீது எனக்குள்ள அநுதாபமுமே இதனை எழுதுமாறு என்னைத் தூண்டுகின்றன.

இந்நூலுக்கு இதன் ஆசிரியர் "மாதர் கடமை" யென்று பெயரிட்டிருப்பினும் "மாதர் நீதி" யென்பது இதற்கு மிகவும் பொருத்தமான பெயரா யிருக்குமென்று நான் நினைக்கிறேன். இது தமிழ் மாதர்களுக்கு மிகவும் பயனுள்ள ஓர் அரிய நூலென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். இதன் வசன நடை ஒரு சில இடங்களில் சிறிது கடினமாகக் காணப்பட்டாலும் இதன் பொது நடை மிகவும் எளிய நடை. இதன் எளிய நடையும் இனிய தமிழும் வாசிப்பவர்களுக்கு இன்பமளிக்கத் தக்கன. இந்நூல் முழுமையுமே வாசிப்பவர்களை நோக்கி நேரே சொல்வதுபோல, மிகவும் சிறந்த முறையில் எழுதப்பட்டிருக்கிறது. நூலில் கூறப்படும் விஷயங்கள் வாசிப்பவர்களின் உள்ளங்களில் தெளிவாகப் பதிவதற்கு இது நல்ல முறையாகும். இந்நூலைப் படிக்கும் சகோதரிகளுக்கு இதனைப் படிப்பது ஒரு புஸ்தகத்தைப் படிப்பது போல் இருக்காது. இதனைப் படிப்பது, தங்களைவிட வயதிலும் அறிவிலும் முதிர்ந்த தமையன், தாய் தந்தை, பாட்டன் பாட்டி போன்ற ஒரு பந்துவிடமிருந்து அவர்கள் புத்திமதியை நேரே கேட்பதுபோ லிருக்கும். தமிழ் நூல்களில், இது

புதிய முறையாயினும், வாசிப்பவர்களின் நன்மையை நோக்க
இது சிறந்த முறையே யாகும்.

இந்நூலின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் தமிழ் மாத
ருக்கு அவசியமான அரிய விஷயங்கள் அழகாகக் கூறப்பட்
டிருக்கின்றன. இதில் எழுதப்பட்டுள்ள விஷயங்களையெல்
லாம் நான் விரித்து வியாக்யானஞ் செய்ய வேண்டியது அவ
சிய மில்லை. மாதர்களுக்கு அவசியமான அடக்கம், அன்பு,
பணிவு, கற்பு, சுற்றம் தழுவல், மாமன் மாமியரைப் பேணல்
முதலிய இல்லற தர்மங்கள் இந்நூலில் இனிது விளக்கப்பட்
டிருக்கின்றன. இந்நூல் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்
டிருக்கிறது. பாலப் பருவத்தில் உள்ளவர்களுக்காக எழுதப்
பட்டுள்ள முதற்பகுதி மிகவும் எளிய நடையில் அமைந்துள்
ளது. பாலப்பருவம் நீங்கி, யௌவன பருவத்தில், புருட
ரிடம் மனைவிகளாக வாழ்பவர்களுக்காக இரண்டாம் பாகம் எற்
பட்டுள்ளது. இதில் கணவருடன் இல்லற தர்மத்தில் வாழும்
மாதர்களுக்கு அவசியமான அநேக விஷயங்கள் அழகாகவும்,
விரிவாகவும் கூறப்பட்டிருக்கின்றன. மாதர்கள் கர்ப்ப சம
யத்தில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளைப்பற்றி ஒரு
அத்தியாயம் எழுதப்பட்டிருக்கிறது. இதில் கூறப்பட்டுள்ள
விஷயங்கள் மாதர்களால் மிகவும் கவனித்தற் குரியன. ஸ்நா
னம் என்ற அத்தியாயத்திலும் ஆசிரியர் அநேக பயனுள்ள
விஷயங்களை எழுதியிருக்கிறார். மூன்றாவது பாகமான மாமி
யென்ற ஒரே அத்தியாயத்தில் மாமியர் ஸ்தானத்தி லுள்ளவர்
களுக்கு அவசியமான பல நல் விஷயங்கள் சொல்லப்பட்
டிருக்கின்றன.

இந் நூலில், விவாக சம்பந்தமாக ஆசிரியர் கூறும்
கொள்கைகளை மேல்நாட்டு 'நாகரிக' முறையை விரும்பும் நம்ம
வர்களில் பலர் விரும்பார்கள். ஆயினும், தற்காலத்தில் தங்

கள் குமாரத்திகளுக்கு வரன் தேடும் பெற்றோர்களில் பலர்
அவ்விஷயத்தில் தங்கள் சௌகரியத்தையே பெரிதாகக்
கருதித் தங்கள் குமாரத்திகளின் இஷ்டத்தைக் கவனியாது
விட்டுவிடுகின்றனர். அது முற்றிலும் தவறென்பதையும் ஆசி
ரியர் குறிப்பிட்டிருக்கின்றார். இவ்விஷயத்தில் பெற்றோர்கள்
தங்கள் குமாரத்திகளின் விருப்பங்களைக் கூடியவரை பூர்த்தி
செய்யவேண்டியவர்களே யாவர். பணம் ஒன்றையே பெரிதா
கக் கருதிப் பதினாறு வயதுள்ள தங்கள் பெண்களை ஐம்பது வய
துக்கும் அறுபது வயதுக்கும் மேற்பட்ட கிழவர்களுக்கு மனை
வியராக்கும் அறிவீன மிகுந்த பெற்றோர்கள் இன்னும் நமது
நாட்டில் இருந்து வருகிறார்கள். இதனால் ஏற்படும் கேடுகள்
எண்ணிறந்தன. இத்தகைய விவகாரங்களை நாம் அடியோடு
நிறுத்த முயலவேண்டும்.

. தற்காலத்து மாதர்கள் மேன்மை தங்கிய நமது பூர்விக
ஆசாரங்களை ஒவ்வொன்றாய் விட்டுவருவதைப் பற்றியும்
மேல்நாட்டு ஆசாரங்களை ஒவ்வொன்றாய்க் கைப்பற்றி வருவ
தைப் பற்றியும் ஆசிரியர் இந்நூலில் பல இடங்களில் கண்டித்
திருக்கிறார். இதனைத் தமிழ் மாதர்கள் கவனித்து நடப்
பார்க ளென்று நம்புகிறேன். நமது மாதர்கள் நமது பூர்விக
ஆசாரங்களை ஒவ்வொன்றாய்க் கைவிட்டுவருவது மிகவும் விச
னிக்கத்தக்க விஷயம். காலையில் எழுதல், மாலையில் திருவிளக்
கேற்றித் தொழுதல் முதலிய பல நல்ல விஷயங்களை நமது
மாதர்கள் கைவிட்டுவருகின்றனர். நமது முன்னோர்கள் அது
சரித்து வந்த ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் நாம்
விட்டு விடுதல் நியாயமாகாது. அவற்றைப் போற்றி வருவதா
[illegible] நாம் மேன்மை யடையக்கூடும்.

நமது நாட்டிலுள்ள பிரபுக்கள் வீட்டுப் பெண்களில்
சிலர்மட்டுமே சுகவாழ்க்கையில் இருந்து வருகின்றனர். ஆனால்

தமிழ் மாதரில் பெரும்பாலார் சுகவாழ்க்கை இன்னதென்று
அறியாது, பெண் ஜன்மம் "புண் ஜன்மம்" என்று சொல்லக்
கூடிய விதத்தில் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள். அடுப்புப்
புகையில் அவிந்தும், மடைப்பள்ளி வேலையில் மடிந்தும் கிடப்
பதே மாதர்களின் தலைவிதியென்று நினைக்கக்கூடிய விதத்
தில் எனது சகோதரிகளில் பலர் துன்பவாழ்க்கை வாழ்ந்து
வருகிறார்கள். இதனை நினைக்கும் பொழுதெல்லாம் எனது
மனம் பெரிதும் வருந்துகின்றது. தமிழ் மாதர்களில் பலருக்
குச் சுகவாழ்க்கையில்லையென்பது மட்டுமன்று, அவர்களுக்கு
நல்ல காற்றும் ஒளியும்கூட கிடைப்பது அரிதாயிருக்கிறது.
பட்டணங்களில் வசிக்கும் எனது சகோதரிகளிலே பலர் பகற்
காலத்தில் அடுப்புப் புகையையும், இராக்காலத்தில் அத்துடன்
மண்ணெண்ணெய் புகையையுமே சுவாசித்து வாழவேண்டி
யவர்களாக இருக்கிறார்கள்! தற்காலத்தில் 'அதிர்ஷ்ட' முள்ள
சில மருகிகள் மாமியர்மீது 'செங்கோல்' செலுத்தத் தொட
ங்கிவிட்டனர். ஆயினும், மருகிகளின் மீது மாமன் மாமியர்
கள் செலுத்தும் கொடுங்கோல் நமது நாட்டில் இன்னும்
நடந்தேவருகிறது. ருஷியா தேசத்தில் ஸார் சக்ரவர்த்தி
யின் கொடுங்கோல் முடிவடைந்தும், நமது நாட்டில் மாமன்
மாமியரின் கொடுங்கோல் இன்னும் முடிவடையவில்லை. நமது
மாதர்கள் வாயில்லாப் பிராணிகள்போலப் பலவித கஷ்டங்
களை மௌனமாக அனுபவித்து வருகிறார்கள். நமது மாதர்
களுக்காக இரங்குவார் இல்லை. அவர்களுக்காக அனுதாபப்
படுவார் இல்லை. அவர்களுக்கு ஆதரவு செய்வார் இல்லை.
"எந்த வீட்டில் ஸ்திரீகள் சந்தோஷமாய் இருக்கிறார்களோ
அங்கே சகல தெய்வங்களும் சந்தோஷத்துடன் வசிக்கிறார்
கள்" என்று தர்ம சாஸ்திரம் கூறுகிறது. இதனை நமது
நாட்டார்கள் அநேகமாய் மறந்துவிட்டார்கள். இது மிகவும்
பரிதாபமான விஷயம். நமது மாதர்களின் நிலைமை திருந்தும்



வரை நமது தேசம் முன்னேற்ற மடையாது. நமது மாதர்
களை அஞ்ஞானத்தில் மூழ்கியவர்களாகவும் பலவித கஷ்ட
ங்களை அனுபவிப்பவர்களாகவும் விட்டுவிட்டு, நாம் நமது
தேச முன்னேற்றத்திற்காக வேறு என்ன முயற்சிசெய்தும்
பயனில்லை. அறியாமையில் ஆழ்ந்து, துன்ப வாழ்க்கையில்
உள்ளவர்களான மாதரிடம் தோன்றும் மக்கள் அறிவீனர்க
ளாகவும், பலவீனர்களாகவும், நோய்கொண்டவர்களாகவும்,
சுகவாழ்க்கை யற்றவர்களாகவுமே இருப்பார்கள். அறிவிற் சிற
ந்து, சுகவாழ்கையிலுள்ள மாதர்கள் வயிற்றில் பிறக்கும் பிள்
ளைகளே ஞானிகளாகவும், வீரர்களாகவும், மகான்களாகவும்,
மேதாவிகளாகவும் விளங்கித் தாய் நாட்டின் பெருமையை
நிலைநிறுத்தக் கூடியவர்களாவார்கள்.

நமது மாதர்களுக்கு அவர்களுக்கு ஏற்ற கல்வியும் கேள்
வியும் அளித்து அவர்கள் அஞ்ஞானத்தை நீக்கி, அவர்களை
அறிவாளிகளாகச் செய்யவேண்டும். அவர்கள் வாழ்க்கை
துன்ப வாழ்க்கையாக இருப்பது நீங்கிச் சுகவாழ்க்கை ஏற்பட
வேண்டும். "நமது தேசத்தில் கவியரசியாகச் சிறந்து விள
ங்கும் ஸ்ரீமதி ஸரோஜினி தேவியார் சில வருஷங்களுக்குமுன்
குண்டூரில் பேசியபொழுது நமது நாட்டிலுள்ள பெண்கள்
கல்வியறிவு இல்லாதிருக்கும் நிலைமையைக் குறிப்பிட்டு "அவர்
கள் தீபம் ஏற்றப்படாத திருவிளக்குள்போல் இருக்கின்றனர்.
நமது தேசத்தில் அநேக ஸ்திரீகள் இவ்வாறுதான் அஞ்ஞா
னத்தில் வாழ்ந்து வருகிறார்கள். நீங்கள் அவர்களுக்குக் கல்வி
யறிவைப் புகட்டி அவர்கள் உள்ளங்களில் அறிவாகிய தீப
த்தை ஏற்றுவதில்லை. எனது கல்வியறிவைப் பற்றி நீங்கள்
புகழ்வதால் என்ன பயன்? நான் மண்விளக்குக்கு நிகரான
வள். ஆனால் நமது தாய் நாட்டில் எத்தனையோ லக்ஷக்கணக்
கான ஸ்திரீகள் பொன்விளக்கிற்கு நிகராக இருக்கிறார்கள்.
அவர்களிடம் அறிவாகிய தீபத்தை ஏற்றாமையால் அவர்கள்

சோபையின்றி இருக்கிறார்கள்'' என்று கூறினர். 'நமது ஸ்திரீகள் கல்வியறிவாகிய சுடர் இல்லாமையால் தீபமேற்றப்படாத திருவிளக்குகள் போல இருக்கின்றனர். விளக்கைச் சுத்திசெய்து, எண்ணெயும் திரியுமிட்டுத் தீபமேற்றினாலன்றோ அது சோபையுடன் விளங்கித் தானும் மகிமையடைவதுடன் பிறர்க்கும் நன்மை பயக்கும்? நமது நாட்டிலுள்ள ஸ்திரீகளைத் தீப மேற்றப்படாத திருவிளக்குகள் என்று ஸரோஜினி தேவியார் கூறிய உவமானம் எவ்வளவு பொருத்தமுடையதாயிருக்கிறது? நமது நாட்டின் முன்னேற்றத்தையும், நமது நாட்டிலுள்ள மாதர்களின் அபிவிருத்தியையும், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளின் எதிர்கால நல்வாழ்வையும் விரும்பும் தேசாபிமானிகளெல்லாம் மேலே ஸரோஜினி தேவி கூறிய வார்த்தைகளின் உட்கருத்தை ஆழ்ந்து கவனிக்க வேண்டும்.''

நமது நாட்டில் தற்காலத்திலுள்ள மாதர்கள் முற்காலத்தில் தெய்வாம்சம் பெற்று விளங்கிய சீதை, சாவித்திரி, தமயந்தி, திரௌபதை, ஔவை, அல்லி, கண்ணகி, மங்கையர்க்கரசி, காரைக்காலம்மையார், மதனஸீலையார் முதலியவர்களின் சந்ததியார்கள் என்பதை நம்மவர்கள் மறந்துவிடக்கூடாது. ராமன், கிருஷ்ணன், புத்தர், சங்கரர், ராமானுஜர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், ஆழ்வாராதிகள், ராமகிருஷ்ணர், விவேகானந்தர் முதலிய அவதார புருஷர்களையும், அரிச்சந்திரன், நளன், பீஷ்மன், தர்மன், பார்த்தன், மனுநீதிசோழன், பொற்கைப் பாண்டியன், சேரன் செங்குட்டுவன், அசோகன், ஸ்ரீஹர்ஷன், சந்திரகுப்தன், சிவாஜி முதலிய பெரு மன்னர்களையும், கர்னன், குமணன், பாரி முதலிய கொடை வள்ளல்களையும், கம்பன், காளிதாசன், இளங்கோவடிகள், திருவள்ளுவர் முதலிய பெரும் புலவர்களையும் தங்கள் வயிற்றில் உதிப்பித்து, உலகத்தை உய்யச் செய்தவர்கள் நமது தாய்நாட்டு



மாதர்கள் என்பதை நம்மவர்கள் மறந்துவிடலாகாது. தற்காலத்து மாதர்கள் நமது முற்காலத்து மாதர்களின் பெருமையை நிலைநிறுத்தும் விஷயத்தில் நமது நாட்டிலுள்ள இருபாலாரும் விசேஷ சிரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். நமது தாய்நாட்டின் எதிர்காலப் பெருமை நமது மாதர்களையே முக்கியமாய்ப் பொறுத்து நிற்கிறது.

இச் சிறு நூலைப் படிக்கும் எனது தமிழ் நாட்டுத் தாய்மார்களும் சகோதரிகளும் இதிலுள்ளபடி, தங்களால் கூடியவரை ஒழுக முயலவேண்டுமென்று நான் அவர்களை மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ் மாதர்களின் நன்மையை நாடி வெளிவரும் இந்நூல் என்றும் வாழ்க! தமிழ் மாதர்கள் வாழ்க! அவர்கள் அஞ்ஞானம் நீங்குக! அவர்கள் துன்பங்கள் தீர்க! அவர்களுக்கு ஞானமும் நன்மையும் வளர்க! தமிழ்த்தாய் வாழ்க! வந்தே மாதரம்!

சென்னை:
சிந்தாத்திரிப்பேட்டை.
காளயுக்தி, சித்திரை ௧.

பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை.

ணீரை வாரி வாரித் தலையிலே கொட்டிக்கொள்வது குளிப்பாகாது. இவ் வெயர்வை அழுக்குப் போகத் தினந்தோறும் ஒரு முறையாவது நன்றாக அழுக்குத் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

இனி, சிறங்கு முதலிய தொத்து வியாதியுள்ள குழந்தைகளிடம் பண்டம் வாங்கித் தின்பதும், அவர்களோடு சேர்ந்து ஓடி ஆடித் திரிவதும், பிறர் உண்ட எச்சிலை வாங்கி உண்பதும் போன்ற செய்கைகளை மறந்தும் செய்யாதே. உனக்கும் அதே நோய்கள் வந்துவிடும். ஒரு வீட்டில் ஒருவர்க்குச் சிறங்கு அம்மை போன்ற வியாதிகள் வந்தால் அவ் வீட்டில் உள்ளவரில் ஏறக் குறைய எல்லோர்க்கும் அந்நோய்கள் வருகின்றனவல்லவா? ஏன்? அவையெல்லாம் ஒட்டுவாரொட்டி நோய்கள். தொட்டால் ஒட்டிக்கொள்ளும். ஆதலால் அவரைக் கண்டால் மெதுவாக விலகிவிடு; அவர் கையிலுள்ளது ஒன்றும் வாங்கித் தின்னாதே.

சாப்பிடப் போவதற்குமுன் கைகால் முகம் நன்றாகச் சுத்தம் பண்ணு. எங்கும், நடமாடியிருப்பாய்; எதையும் தொட்டிருப்பாய்; கால், கைகளில் என்ன வெல்லாமோ பட்டிருக்கும். இவற்றைச் சுத்தம் பண்ணாமல் சாப்பிட உட்காரலாமா? அசுத்தமல்லவா? ஆதலால் அவ்வசுத்தம் நீங்க நன்றாகக் கால் கைகளைக் கழுவ வேண்டும். அரை குறையாகக் கழுவாமல் நன்றாகக் குனிந்து கழுவு. சிலர், "கையால் காலைத் தொடவே கூடாது; தொட்டால் குடிமுழுகிப்போம்" என்று எண்ணிக்கொண்டிருப்பது போலக் காலாலேயே காலைத்தேய்த்துக் கழுவுகின்றனர். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொள்ளுவதுபோல ஒரு பாதத்தின் அடியிலுள்ள அழுக்கெல்லாம் மற்றொரு பாதத்தின் மேலும் படுகின்றது. ஏன் இப்படிச்

செய்கிறார்களோ தெரியவில்லை. நீ அப்படிச்செய்யாதே; நன்
றாகத் தேய்த்துக் காலைக் கழுவு.

இனி, எச்சிலைப்பற்றி நீ கவனிப்பதே யில்லை. அது சரீ
ரத்தில் பட்டால் கொஞ்சநேரத்தில் உலர்ந்ததும் நாறும் நாற்
றம் சகிக்க முடியவில்லையே. நோய் கொண்டவர், வாய்ப்புண்
கொண்டவர் எச்சிலை நீ வாங்கி யுண்டால் அதே நோய் உனக்
கும் வந்து விடும்.

அன்றியும் வீட்டிலே கலத்தில் அன்னமிட்டு எச்சிலாக்
கிச் சாப்பிடுகிறாய். பாத்திரத்தில் தண்ணீர் மொண்டு கை
கழுவவேண்டும். அதைவிட்டு, திடீரென்று விளையாடப்போக
வேண்டுமென்ற அவசரத்தில், அக் கையைக்கொண்டு தண்
ணீர் நிறைந்திருக்கும் பெரிய பாத்திரத்துக்குள் நுழைத்துத்
தண்ணீரையெல்லாம் பருக்கையாக்கி எச்சிலாக்கி விடுகிறாய்.
இது மிகத் தவறு. இதை அடியோடு விட்டுவிடு.

இங்கே, நடந்த ‘கதை’ யொன்று சொல்கிறேன்; கவன
மாய்க் கேள். ஒரு காரிய ஸ்தலத்திலே (ஆபீஸிலே) பெரிய
கணக்கன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் காச நோய். சில
நாட்களில் அந்நோய் அவனைக் கொன்றுவிட்டது. பிறகு அவ்
வேலைக்கு வந்த இருவரும் அதே நோய் கண்டு இறந்தனர்.
அதே நோய் வருவானேன்? காரணம் என்ன தெரியுமா?
முந்திய கணக்கன் நீ செய்வது போல, எச்சிலைக் கையால்
தொட்டுக் காகிதம் புரட்டுவது வழக்கம். அவ்வெச்சிலிலுள்ள
அவன் நோய்ப் புழுக்கள் எச்சில் உலர்ந்து போனபோதும் அக்
காகிதங்களில் ஒட்டிக்கொண்டிருந்தன. பின்னாலே வந்த கணக்
கர் இருவரும் அம்மாதிரியே எச்சிலைத் தொட்டுக் காகிதம்
புரட்டுவது வழக்கமாதலால், அந்நோய் தொத்தி அவர்களும்
அதனாலேயே இறந்தனர். இது தெரிந்து அந்தக் காரிய
ஸ்தலத்திலே யுள்ள, மேலதிகாரிகள் உடனே அவற்றைச்



சுட்டுச் சாம்பலாக்கி விட்டனர். பார்த்தாயா, எச்சில் எவ்வளவு
கேடு உண்டுபண்ணுகிற தென்று. நீ ‘சிலேட்டில்’ எழுதி
அழிக்கும் போதும், ‘பென்சிலால்’ காகிதத்தில் எழுதும்போ
தும் எச்சிலை உபயோகிக்கிறாயல்லவா? அது கெட்ட பழக்
கம் என்று இப்பொழுதேனும் தெரிகிறதா? ஆதலால் சுத்த
மாயிரு; எச்சில் முதலிய அசுத்த விஷயங்களில் இனி ஜாக்
கிரதையாயிரு.

## 5. வணக்கமாயிரு.

குழந்தையே, சில சமையம் உன் தந்தையார் மிகச் சந்
தோஷமாயிருக்கும் பொழுது, உன்னை அருகில் வைத்துக்
கொண்டு, இரண்டொரு கெட்ட வார்த்தைகளோ உதாசீன
மொழிகளோ சொல்லிக் கொடுத்து, உன் தாயாரை வையச்
சொல்லிக்கேட்டு ஆநந்திப்பாரல்லவா? நீயும் அவ்வார்த்தை
யின் பொருள் அறியாமல், சில சமையம் உன் தாய்க்கு உண்
டாகும் மனவருத்தத்தையும் மறந்து உன் அப்பா சொன்னபடி
வைது சந்தோஷப் படுவாயல்லவா? இது மிகவும் தவறு,
ஏனென்றால் இப்பழக்கம் இன்னொரு நாள் வேறு அந்நியர்
ஒருவரையும் இவ்வாறு நிந்திக்கச்செய்துவிடும். அப்பொழுது
அந்த அந்நியர் திரும்ப வையவோ அடிக்கவோ செய்வர்.
இல்லையேல், யார் இது! நன்றாய் வளர்த்திருக்கிறார்கள் பெற்ற
வர்கள்! என்று சொல்லச்செய்து, இவ்வார்த்தைகளை உனக்குப்
[illegible]த்தந்த தாய் தந்தையர்க்குக் கேவலம் உண்டாக்கும்.

[illegible]அன்றியும், இவ்வாறு தாய்மேல் தந்தையும் தந்தைமேல்
தாயுமாக ஆநந்தத்தால் ஒரு சமயம் வைவதற்கென்று உங்க
ளுக்குக் கற்பித்த வார்த்தைகளையே, இன்னொரு சமையம்
உபயோகிக்கக்கூடாதென்று கண்டனை தண்டனைசெய்ய முந்து
வர். ஆதலால் அவரிடமிருந்தும், வேறெவரிடமிருந்தும் இக்
கெட்ட பழக்கத்தை மட்டும் பெற்றுக் கொள்ளாதிருப்பாயாக.

இனி, பெரியோர் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கையில் சில குழந்தைகள் நடுவிலே புகுந்து பேசத் தலைப்படுகிறார்கள். இது குற்றமல்லவா? உன்னையொத்தார்க்குப் பல விஷயங்களையும் அறிந்துகொள்ள அறிவுண்டா? திறமையுண்டா? பின் பெரியோர் பேச்சுக்கு உங்கள் பேச்சு இடைஞ்சல்தானே. ஆகலால் அவர் மத்தியில் பேசாமல், வேண்டுமானால் மௌனமாகக் கேட்டுக் கொண்டிரு.

தற்காலத்திலே, குழந்தைகளோ, பெரியவரோ, தங்களைக் காட்டிலும் பெரியோரை அறியாமல் மிதித்து விட்டால், அது குற்றமென்றே கருதுகிறார்களில்லை. இது எந்த நாட்டிலும் இல்லாத கெட்ட வழக்கம். வங்காளம் முதலிய வட நாடுகளிலே பெரியவரைச் சிறியவர் கண்டால் நல்ல நாள்களிலே அவருடைய காலடிப் பொடியை எடுத்து மிகப் பயபக்தியோடு தங்கள் தலையிலே யிட்டு, கண்மூடிச் சிரத்தையோடு இன்னும் பணிகிறார்களே. பின் ஏன் இத்தென்னாட்டிலே பெரியோரை மதிக்கச் சிறியோர் கூசுகின்றாரோ தெரியவில்லை!

மேல் நாட்டாரைப் பாருங்கள். பேசும்பொழுது ஒரு வார்த்தை தங்கள் காதில் விழவில்லையானால் "தயவு செய்து மன்னித்து, இன்னொரு தடவை சொல்ல வேண்டும்" என்று சிறியோர் பெரியோர் என்ற தாரதம்மியமின்றிச் சொல்லி மன்னிப்புக் கேட்கின்றனர்.

அன்றியும், எவ்வளவு பழகினவராயிருந்தாலும், முதல் முறை ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது, "ஐயா, இக்காலை நேரம் மிகவும் நல்லதாயிற்று, தங்களைப் பார்க்கும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்ததால்" என்றும்; இப்படியே ஒவ்வொரு நேரத்திற்கும் சலிப்பின்றி வந்தனம் சொல்லியும் வருகின்றனர்.



இதைக் கேட்கும்பொழுது, நமக்குப், பூர்வத்திலே குசேலரைக் கண்ணபிரான் தன் அரண்மனைக்கு வரக்கண்ட சமையமும் கண்ணபிரானை விதுரன் தனது குடிலில் தரிசித்த சமையமும், ஞாபகத்துக்கு வருகின்றன. எப்படி? அக் காலங்களில் அவர்கள் செய்த உபசாரமாகிய 'தங்கள் பாதம் படுதற்கு இம்மனை என்ன யோக்கியம் பெற்றிருந்தது! தங்களைத் தரிசிப்பதற்கு ஏழையாகிய யான் என்ன தவம் பண்ணினேனோ! அறியேனே! தங்களைக் கண்டு ஆநந்திக்கச் செய்த இக்காலத்துக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்' என்ற இவ்வுபசார மொழிகள் நமது ஞாபகத்துக்கு வருகின்றன. இப்படிப் பெரியவரை உபசாரம் பண்ணும் இந்த நாட்டு மனிதர், இப்பொழுது பெரியவரைக் கண்டால் கையெடுக்க நேரும் என்று கூசி மறைவதை நோக்க உள்ளம் எரிகின்றது.

ஆதலின், குழந்தையே, நீ இவர்களோடு சேர்ந்து பெரியோரை வணங்கக் கூசாதே. தப்பித் தவறி அவர் இருக்கும் திசையிலாயினும் காலை நீட்டி, அவரை அசட்டை பண்ணாதே. அவர் மேல் அறியாமல் கால்பட்டால் உடனே அவரிடம் உன் பிழையைக் கூறி வணங்கி மன்னிப்புக் கேள். அப்பெரியோர் மனவருத்தம் உனக்குச் சாபம்; அவர் ஆசீர்வாதம் உனக்கு வரம்.

இனிச் சில பிள்ளைகள் தங்கள் தாய் தந்தையரையோ, சுற்றத்தாரையோ, வேறெவரையோ சிறு பிள்ளையாயிருந்த காலத்தில் பேசியதுபோலவே 'நீ' என்று மரியாதையின்றிப் பெரியவரான போதும் பேசுகிறார்கள். இது நாகரீகமில்லாத குறை. நமது தமிழ்ப் பாஷை தவிர வேறெந்த பாஷையிலும் இந்த வார்த்தையின் சிறுமையை உணர்ந்து, இவை அநேகமாய் இல்லையென்றொழித்து நீங்கள் என்று பேசுவதென்றே கங்கணம் கட்டிக்கொண்டிருக்கின்றனர். நாமும் இவ்வழக்

கத்தைக் கைக்கொள்ள வேண்டியது அவசியமல்லவா? ஆதலின், குழந்தாய் நீ யாரிடத்தும் வணக்கமாயிரு. யாரோடு பேசினாலும் மரியாதையாகப் பேசு. புண்படும்படி பேசாதே.

## 6. பொய் சொல்லாதே.

குழந்தாய், பொய் என்பது என்ன? அறிவாயா? பொய் என்பது இல்லாதது; நடவாதது சொல்லல்; மனத்தில் ஒன்று வைத்து வெளிக்கு ஒன்று பேசுவது. 'நேற்று இராத்திரி பாடம் படித்தாயா' என்று உன்னை உபாத்தியாயர் கேட்டால், படியாமலிருந்தாலும் இல்லையென்று சொன்னால் எங்கே அடிப்பாரோ என்று பயந்துகொண்டு, 'ஆமாம், படித்தேன்' என்று சொல்லுதல். பிறகு பாடத்தில் கேள்வி கேட்டபொழுது பதில் சொல்ல அறியாமல் நீ விழிப்பதைக்கொண்டு நீ பொய் சொன்னாய்; நேற்றிரவு படிக்கவில்லை என்று உபாத்தியாயர் தெரிந்து கொள்வார்.

இப்பொழுது, இரண்டு குற்றம் உன்மேல் சாரும். ஒன்று படியாதது, மற்றொன்று படியாமலிருக்கப் படித்தேன் என்று பொய் சொன்னது. இதற்கு உனக்கு இரண்டு தண்டனை ஏற்படும்.

அன்றியும், நீ மிகக் கோழையுமாவாய். பயமுள்ளவர்க்கு ஓயாத துன்பமே. அவர் மனம் சதா திடுக்குத் திடுக்கு என்று அடித்துக்கொண்டேயிருக்கிறது. என்ன சந்தோஷம், வேடிக்கை, அதிசயம் நடந்தாலும் அவருக்குப் புத்தி அவைகளில் செல்லவே செல்லாது. தாம் சொன்ன பொய் எங்கே வெளிவந்து விடுகிறதோ என்று பயந்த வண்ணமாகவேயிருக்கவேண்டியதாயிருக்கிறது. இதனாலேதான் ஒரு பெரியவர், "பயங்காளி தான் சாவதற்குள் எத்தனையோ முறை செத்து மடிகிறான்" என்று சொல்லியிருக்கிறார். நிமிஷந்தோறும் மரண வேதனை! இவையெல்லாம் பொய் சொன்னதற்குப் பலன்.



மேலும், பொய் சொல்பவர் அதனாலே மிகக் கேடும் அடைகின்றனர். 'புலி வருகிறது', 'புலி வருகிறது' என்று பொய் சொன்ன இடைப்பையன், கடைசியில் புலிக்கு இரையான கதை உனக்குத் தெரியுமே. பார்த்தாயா, அவன் எவ்வளவு உரக்கக் கத்தியும் பக்கத்து வயலிலிருந்த அவன் தந்தையே நம்பவில்லை. பொய் சொல்கிறான் என்று அலக்ஷியம் செய்துவிட்டனர். புலி கொன்று தின்றது. அதுபோல நீயும் ஒரு முறை பொய் சொன்னாய் என்று தெரிந்துவிட்டால் பின் உன்னை ஒருவரும் நம்பமாட்டார். சமையத்தில் நீ திண்டாட வேண்டியதுதான்.

வியாபாரிகளுக்குள்ளே இந்த உயர்ந்த செய்கைக்குத்தான் நாணயம் என்று சொல்கிறார்கள். நாணயமுள்ள வியாபாரியே பல தேசங்களிலிருந்தும் நல்ல சாமான்கள் வாங்கி, 'காரா' விலைக்கு விற்று, நல்ல பெயரும், தக்க லாபமும் பெறுகின்றனர். ஆரம்பத்திலேயே நாணயத்தின் பெருமை தெரியாதாயினும் காலம் செல்லச் செல்ல அது எங்கும் பரவி எவர்க்கும் தெரிந்துவிடுகின்றது.

அன்றியும், பொய் சொல்லாமை ஒன்றினாலேயே, சகல நற்செய்கைகளின் பலனும் கிட்டுகின்றது. உதாரணமாக— [illegible] திருடன் பிறர் பொருளைப் பிடுங்கி வந்தே ஜீவனம் [illegible]வான். தினசரி இத்தொழில் செய்தும் இவன் தரித்திரம் நீங்கவில்லை. மனம் திடுக் திடுக் என்று பதைத்த வண்ணமாகவே யிருந்தது.

ஒருநாள் இவன் ஊருக்கு ஒரு ஞானி வந்தார். அவரிடம் எல்லோரும் போய்த் தங்களுடைய குறைகளை முறை

யிட்டு அவை நீங்க உபதேசமும் பெற்று வந்தனர். திருடன் இதைக் கேட்டதும் தனக்கும் ஏதேனும் வழி கிட்டாதா என்று அவரிடம் சென்றான். தன் நோக்கத்தைத் தெரிவித்தான். தனக்கும் இவ் வுலகத்தில் செல்வமும், பெருமையும் சாந்தியும் வேண்டும். இதற்குத் தக்கவழி அருளல் வேண்டும் என்று அடியற்ற மரம்போலக் காலில் வீழ்ந்தான். ஞானி அவனது உயர் நோக்கத்தையும், துன்ப உணர்ச்சியையும் அறிந்து அவனுக்கும் அருள நினைத்தார். அவனை அருகில் அழைத்து, "அப்பா உன்னை உயர்த்துவேன். இது செய்:— பொய் சொல்லாதே, வேறு எத்தனை கெட்ட செய்கைகள் வேண்டுமாயினும் செய். உனக்கு நீ எண்ணிய வெல்லாம் கிட்டும்" என்று ஆசிகூறி அனுப்பினார்.

திருடன் முரடனாகையால் விடாப் பிடியாக அதைப் பற்றிக்கொண்டான். ஒருநாளிரவு அவ்வூர் ராஜாவின் அரண்மனையில் திருட எண்ணினான். நடு நிசியிலே அதற்கு வேண்டிய கோலத்தோடு புறப்பட்டான். அவ்வூர் அரசன் மிக நல்லவர். குடிகளின் குறைகளைப்பற்றி, தன் உத்தியோகஸ்தர் சொல்வதை நம்பாமல், தாமும் இரவிலே மாறுவேஷம் பூண்டு தெருத் தெருவாய்ப் போய் ஜனங்கள் ஒருவரோ டொருவர் பேசிக்கொள்வதிலிருந்தும், தாமே அன்னியனைப்போல விசாரித்தும் அறிந்து அக் குறைகளை நிவிர்த்தி செய்வார். அவர் அன்றை இரவும் மாறு வேஷம் பூண்டு புறப்பட்டார். வழியில் திருடனைக்கண்டார். "யார் ?" என்றார். உடனே அக்கள்வன் தனது 'விலாசத்தைச் சிறிதும் பிழையின்றிச் சொல்லிவிட்டான். 'எங்கே போகிறாய்'? என்றார். 'ராஜா வீட்டில் திருட' என்று தன் குரு வாக்குக்குப் பின்னமின்றி உண்மையையே சொல்லிவிட்டான். ஆனால், ராஜா தானும் ஒரு திருடன் என்றும், தனக்கு ராஜா வீட்டு உளவுகளெல்

உ

கடவுள் துணை.

# மாதர் கடமை.

## முதற்பாகம்.

### 1. இளமையில் கல்.

குழந்தாய், நீ சிறு பெண். உன்னைப் போன்ற சிறுமிகளெல்லாம் தெருவிலே களிமண் எடுத்துப் பொம்மைகள் செய்தும், ஆபரணம் செய்தும், பலகாரம் செய்தும், சிறு வீடு கட்டியும் விளையாடிக்கொண் டிருக்கிறார்களே. நீ என்ன செய்யப் போகிறாய்? உன்னை உன் தாய் தந்தையர் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி யிருக்கிறார்களே. படிக்கப் போவாயா? விளையாட்டுப் பெரிதென் றெண்ணிப் படிப்பைத் தள்ளிவிடுவாயா?

அவ்வாறு செய்யாதே. படிப்பு வேண்டும். படித்தாலே நீ நல்லவள் ஆவாய்; சந்தோஷம் உண்டு. சுகமாயிருக்கலாம். பார். படித்த பெண்கள் எவ்வளவு நாகரீகமாய் உடை உடுத்துகின்றனர்; நகை காய்த்த மரம்போல் மூக்கையும் நாக்கையும் குத்தித் தங்கக் குச்சி நுழைக்காமல் இரண்டொன்று காதிலே கழுத்திலே கையிலே யிட்டு, எவ்வளவு சொகுசாய் இருக்கின்றனர்! இந்த நயமெல்லாம் உனக்கும் படித்தால்தான் வரும்.

அன்றியும், படிப்பதற்கு இதுதான் தக்க பருவம். அம்மாள், அப்பாவைப் பார். ஓயாது வேலைசெய்து கொண்டேயிருக்கிறார்கள். உன் தாய்க்கு அதிகாலையில் எழுந்தால், தெளித்து, மெழுகி, பாத்திரம் துலக்கி, நீரெடுத்து நிரப்பு

வதற்குப் பத்து மணி ஆய்விடுகின்றது. இதன் மத்தியில் உங்களுக்கெல்லாம் காலைச்சாப்பாடு போடவேண்டும். பின் ஸ்நானம் செய்துவிட்டுச் சமையல் செய்யவேண்டும். இதற்குக் குறைந்தது பன்னிரண்டரை, ஒருமணி செல்கிறது. உங்களுக்கும் ஸ்நானம் செய்துவைத்து உணவு ஊட்டுவதற்குள் குறைந்தது இரண்டுமணி ஆய்விடுமல்லவா? பின் அம்மாள் உண்டு, சற்று இளைப்பாற நேரம் இருக்கிறதோ இல்லையோ, பழையபடி இராச்சாப்பாட்டுக்குத் தயார் செய்யவேண்டும். பார்த்தாயா, அம்மைக்குப் படிப்பதற்கு நேரம் மிஞ்சுகிறதா? இல்லையே.

ஆதலால், உன்னையொத்த சிறு பருவத்திலேதான் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். உனக்கே அதிகமான நேரம் உண்டு. குளிப்பு, சாப்பாடு, வெளியே போதல், உறங்கல் என்ற இந்த நேரங்களைத் தவிர மற்ற நேரங்களெல்லாம் நீ படித்துக்கொண்டே யிருக்கலாமே.

அன்றியும், அப்பாவைப் பார். ஓயாது, சாப்பாட்டுக்குச் சம்பாதிக்க வெளியே போவதிலும், வந்து அதைப்பற்றி எண்ணிக் கொண்டிருப்பதிலுமே காலங்கழிகிறது. சில சமையம் அவர் முட்டைக் கட்டிக்கொண்டு நாடியில் கைவைத்து நெடுநேரம் இருந்தபடியே அசையாமல் இருக்கின்றனரே. நன்றாகச் சாப்பிடவும் செய்கிறாரில்லையே. இது ஏன் என்று உனக்குத் தெரியுமா? கவலை. இது வந்து விட்டால் ஒருவ[illegible] உண்ட உணவெல்லாம் ஒரு நிமிஷத்தில் பறந்துபோம். மு[illegible] உலர்ந்து, வாடி வதங்கி நைந்துபோவான். கிழவர்களுக்கு நரைக்கின்றது; தோலெல்லாம் சுருங்கல் சுருங்கலாகத் தொங்குகின்றது. காரணம் என்னவென்று தெரியுமா? இந்தக் கவலைதான். "ஐயோ! நாளைக்கு என்ன செய்வோம்? குழந்தைக்குத் தக்க புருஷன் தேடிக் கலியாணம் செய்யவேண்டு



மே. எங்கே போவோம்? அநாகரீக முரடர் கையில், கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுப்பதுபோல் கொடுக்கும்படி நேரிட்டு விடுகிறதோ என்னவோ தெரியவில்லையே. படித்தவனைப் பார்த்தால், அவனுக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று கொடுக்க வேண்டி யிருக்கிறதே. அதற்கு எங்கே போவது" என்று எண்ணாததெல்லாம் எண்ணி, மனம் புண்ணாய்ப் போவதுதான் அவர் வேலை. அதனாலே தான் அவர்க்கு அக்கிழக் குறிக ளெல்லாம்!

தங்கையே, உனக்கு இக்கவலை ஒன்றும் இல்லையல்லவா? நீ அழகிலும், உருவத்திலும் இன்னும் வளர்ந்து கொண்டு தானே வருகின்றாய். இப் பருவத்திலேதான் உன் மனதில் படித்ததெல்லாம் தங்கும். ஆதலால் நீ படிக்கவேண்டியதெல்லாம் இப்பொழுதே நன்றாய்ப் படித்துக்கொள். உன் மனம் மாசு மறுவற்றுத் தெளிந்திருக்கின்றது. அதிலே படுவதெல்லாம் அப்படி யப்படியே பதிந்து விடும். இதுதான் சரியான காலம். மறதியும் உனக்கில்லை. காலத்தைத் தவற விடாதே! காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டாமா? தற்காலத்திலே, உன்னைக் கொள்ள விரும்பும் புருஷரும் கல்வியையே ஒப்பற்ற ஆபரணமாகக் கருதுகின்றனர். படி, வேண்டியது படி. வீணே இளமையைப் போக்கிவிட்டுப் பின் ஏங்காதே.

## 2. மூத்தோர் சொல் கேள்.

அம்மா, நீ சிறுமி. நல்லது இன்னது, கெட்டது இன்னது என்று நீ அறியாய். இன்னும் சிறு குழந்தையாக நீ இருந்தபோது, விளக்கைக் கையால் தொடவும், திண்ணையிலிருந்து கீழே விழவும் நீ பார்த்திருப்பாயல்லவா? உனக்கு ஞாபகம் இல்லாவிட்டாலும் உன்னிலும் சிறு குழந்தைகள் அப்படிச் செய்வதை நீ பார்க்கிறாயே. அவர்களை அவர்கள் நினைத்தபடி

செய்ய விட்டுவிடலாமா ? கூடாதல்லவா? கெட்டுப் போம்; மண்டை உடைந்து போமே. குழந்தைகள், அறியாதவர் போனபடி விட்டு விடலாமா தாய் தந்தையர்? பெரியோர் அவர்களை விட, அதிக அறிவும், உலக அநுபவமும் உள்ள வர்களல்லவா? ஆதலால் பெரியோர் சொன்னபடி கேட்பது அவசியம் தானே!

அன்றியும், அவர்களுக்கு உன்னிடத்தில் எவ்வளவு அன்பு! நீ வயிறுார உண்டிருந்தாலும், அவர்கள் சாப்பிடும்பொழுது வந்தால் அவர்கள் தண்ணீரைக் குடித்துவிட்டு, உனக்குப் பருக்கையை எடுத்துக் கொடுக்கின்றனரே! உனக்காக எத்தனை பாடு படுகின்றனர்! என்ன கஷ்டமெல்லாம் அடைகின்றனர்? எஜமானராயிருப்பவரிடத்து மானமற்ற பேச்சுக்களைக் கேட்டும் சகிக்கின்றனர். இப்படி எத்தனையோ படாத பாடு பட்டுப் பரிதபிக்கும் இவர்களா உங்களுக்குக் கேடு செய்வார்கள், கெடுமதி சொல்வார்கள்?

இனி, காரணம் காட்டினாலே நல்லது; அப்பொழுதே நான் பின்பற்றுவேன் என்பாயாயின், எப்படிக் காரணம் காட்டுவது? அ என்ற எழுத்தை ஏன் முதலில் வைக்க வேண்டும்? அதை ஏன் இப்படி எழுதவேண்டும்? என்று கேட்டால் யார் சமாதானம் சொல்வது? சமாதானம் சொன்னால் விளங்குமா? சொல்லாவிட்டால் படிக்கமாட்டேன் என்று சாதிப்பாயாயின் படிப்பு வருமா? நமது ஒப்புயர்வில்லாப் பெரியர் படிப்பின் முடிவிலே தெரிந்து கொள்ள வேண்டிய முடிவையே படிப்பின் ஆரம்பத்திலே வைத்திருக்கின்றனர். பிறப்பு முதலாவது. இது எப்படி உண்டாகிறது என்பதுதான் கடைசிக் கேள்வி. இதற்குச் சமாதானம் அறிவதுதானே மனித ஜாதியின் பயன், நோக்கம். இதை ஆரம்பத்தில் எப்படி விளக்குவது? எப்படி அறிவாய்? இது



தெரிந்தாலே மேலே போவேன் என்று சொல்வது, நீந்தத் தெரியுமுன் ஜலத்தில் இறங்கமாட்டேன் என்பது போல நகைப்புக்கு இடமாகு மல்லவா?

ஆதலால், குழந்தையே, நீ ஒன்றும் அறியாய். உனக்குக் காரணமும் தெரியாது, காரியமும் தெரியாது. இப் பருவம் அதற்கு ஏற்றதல்ல. பெரியவ னானால் நீயே அவற்றின் பெருமையைக் கண்டு மிகக் களிப்பாய். இப்பொழுது ஒன்றும் விளங்காது. பெரியோர் சொற்படி கேட்டு அடங்கி நடக்கவேண்டியதே உன்னைப் பொறுத்த கடமை. அதுவே உனக்கு நல்வழி; நன்மை தரும்.

ஆதலால், மூத்தோர் சொல் கேள். 'மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்' என்பது நமது ஔவைப் பாட்டியின் புத்திமதி யல்லவா?

## 3. தீயாரைச் சேரேல்.

அம்மா, கெட்ட பிள்ளைகளோடு சேராதே. ஓயாமல் விளையாடுகிறவர், கெட்ட பேச்சுப் பேசுபவர், யாரோடும் சண்டைக்குப் போகிறவர், ஊரார் பொருளுக்குப் பேராசைப்படுபவர்—என்ற இவர்கள் சமீபத்திலே கூடப் போகாதே. இவர்களைக் கண்டால் தூரமாக ஒதுங்கிப் போய்விடு. இல்லையேல், உனக்கும் இக்குணமெல்லாம் வந்துவிடும். ஐந்து வயது ஆவதற்குள் தெருவிலே 'பீடி' குடித்துக்கொண்டு செல்லும் பிள்ளைகளைப் பார்த்திருப்பாயே. இது இவர்களுக்கு எப்படிப் பழக்கமாயிற்று? 'பீடி' குடிக்கிற 'பெரியவ' ருடன் சேர்ந்தார்கள். அவர் குடித்த மிச்சத்தை அவர் இல்லாத சமயம் பார்த்து வாயில் வைத்து உறிஞ்சினார்கள். இப்படிப் பழக்கமாய்விட்டது. இனி என்ன செய்கிறார்கள்? பீடிக்குத் துட்டு வேண்டுமே. அம்மாள், அப்பா யாராவது

துட்டு எங்கேனும் வைத்திருந்தால் மெதுவாக அவர் அறியாமல் எடுத்துக் கொண்டு போக ஆரம்பிக்கிறார்கள். பிடித்துக் கேட்டால் பொய் சொல்லுகிறார்கள். பார்த்தாயா இப்பொழுது! பீடி குடிக்கிறவர்களோடு சேர்ந்து எச்சில் என்பது போய், பொய் சொல்லி, திருடன் ஆகி, இப்படிப் பலகெட்ட குணங்களுக்கு ஆளாய்விடுகின்றனர்.

அன்றியும் கெட்டவர்களோடு சேரும் எவரையும் கெட்டவர்களென்றே எண்ணி ஒருவரும் நம்பமாட்டார்கள். பொய்யனைச் சேர்ந்தவனைப் பொய்யனென்றும், திருடனைச் சேர்ந்தவனைத் திருடன் என்றும், ஊரார் மதித்து அவனைச் சிறிதும் நம்பமாட்டார்கள். பனைமரத் தடியிலிருந்து பாலைக் குடித்தாலும் கள் குடித்தானென்றுதானே சொல்வார்கள்.

ஆதலால், தீயாரைச் சேராதே; அவருடன் சிநேகம் செய்யாதே; அவரைக் கண்டால் விலகிப்போ.

## 4. சுத்தமா யிரு.

குழந்தாய், சுத்தம் என்றால் என்ன? உனக்குத் தெரியாதே. சில குழந்தைகளை, தாய் தந்தையர் நன்றாகக் குளிப்பாட்டி, தலைவாரி, பொட்டிட்டு, நல்ல சுத்தமான வெள்ளை வஸ்திரம் உடுத்தி, பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகின்றனர். வழியில் புழுதியில் ஆடிக்கொண்டிருக்கும் குழந்தைகளைக் கண்டதும், தாமும் அவர்களோடு சேர்ந்து ஆடித் தலையைக் குலைத்தும், ஆடையைப் புழுதியாக்கியும், மேலெல்லாம் மண் படிந்தும், வேஷம் போட்டதுபோல வீட்டுக்கு வருகின்றனர். இவர்கள்தாம் சுத்தமற்ற குழந்தைகள். விளையாட வேண்டாமென்று சொல்லவில்லை. விளையாடு; பெண்களுக்கு ஏற்றதான அம்மானை, முதலிய ஆட்டங்கள், மாலை நேரங்களிலே உன்னையொத்த பெண்களோடு விளையாடி உற்சாகப்படு. புழுதி யாடாதே.



தாய் தந்தையரா யிருப்பினும் உன் அலங்கோலத்தையும், அசுத்தத்தையும் கண்டு அவர்கள் உன்னைத் தொடக் கூசுகிறார்கள். மேலும், எத்தனை தடவைதான் அவர்கள் உன்னைக் குளிப்பாட்டிச் சுத்தம் பண்ணுவார்கள்? சட்டையும் பாவாடையும், சேலையும் தோய்த்துக் கட்டிக் கொடுப்பார்கள்? முடியாதல்லவா? பின் அழுக்கான ஆடையையே உடுத்திக்கொண்டு பார்ப்பவர் 'கேலி' செய்யும்படி நீ திரியவேண்டியது வரும். சுத்தமான ஆடை அணிந்திருக்கும் குழந்தைகளெல்லாம் உன்னைத் தொடக் கூசி, கண்டால் விலகி ஓடவும் செய்வர். உனக்கே உன் ஆடை, வெயர்வை நனைந்து புழுதி படிந்து கெட்ட நாற்றம் வீசுவதாகும்.

அன்றியும், மேலெல்லாம் வெயர்வையால் 'பிசுபிசு' என்று அழுக்கு உறைந்து நிற்கும். தூக்கம் வராது; 'சீ' என்று எரிச்சலாக இருக்கும்.

தங்கையே, இங்கே உனக்கு வெயர்வை என்றால் என்ன? எப்படி உண்டாகிறது? அதை ஏன் போக்கவேண்டும்? என்ற விஷயங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்கிறேன் கேள். வெயர்வை என்பது விஷ நீர்; அது மலம், மூத்திரம் என்ற கழிவு சாமான்களைப் போன்றது. நாம் உண்ணும் உணவில், சத்துள்ளபாகம் இரத்தமாக மாற்றப்பட்டு, சரீரத்தின் ஒவ்வொரு பாகத்திற்கும் சென்று புஷ்டிதர, சாரமற்ற பாகம், மலமாகவோ, மூத்திரமாகவோ; வெயர்வையாகவோ வெளியே வருகின்றது. அது விஷத்துக்கு ஒப்பானது.

நமது சரீரத்தின் மேல் தோலில் ஒரு ரூபா அகலமுள்ள இடத்தில் சுமார் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட துவாரங்கள் இருக்கின்றன. இவற்றையே நாம் மயிர்க்கால்கள் என்பது. இவை சாக்கடைத் துவாரம்போலச் சரீரத்தி

னுள்ளே உண்டாகும் அசுத்த பதார்த்தங்களை வெளியே போக்கிக்கொண்டே யிருக்கும்.

வீட்டிலே சட்டிபானை கழுவுகிறோம். அரிசி கழுவுகிறோம், குளிக்கிறோம். இன்னும் என்னவெல்லாமோ செய்கிறோம். இந்த நீரெல்லாம் சாக்கடைத் துவாரத்தின் வழி போகாமல், வீட்டுக்குள்ளேயே அடைபடுமாயின் எவ்வளவு கெட்ட நாற்றம் வீசுகிறது. அடிக்கடி வெளியேற்றும் பொழுதே சாக்கடை நாற்றம் தெரு வழியே போகவிடுகிறதில்லையே.

இதுபோன்ற வீடாகிய நமது சரீரத்தின் கழிதண்ணீரே வெயர்வை. அது போகும் சாக்கடைத் துவாரங்களே மயிர்க்கால்கள். இவற்றை அடிக்கடி கழுவித் துடைத்துச் சுத்தமாக வைத்திருந்தால்தானே, கழிவுநீர் வெளியேபோம். இல்லையேல் அந்நீர் வெப்பத்தால் வறண்டு விஷம்மட்டும் அழுக்காக நமது சரீரத்திலே திரளுகிறது. இவ்வழுக்கு துவாரங்களின் வாயை அடைத்துக்கொள்ளப் பின் உண்டாகும் கழிவுநீர் வெளியே வராமல் உள்ளேயே அடைபட்டுச் சரீரத்திலே நாற்றத்தைக் கிளப்பி, சிரங்கு போன்ற பல நோய்களை உண்டாக்கி விடுகின்றது.

பட்டிக்காட்டுப் பெண்களும் வெயர்வை வடியப் பாடுபடும் பறையர் பள்ளர் போன்ற ஜனங்களும் தெருவிலே போம்பொழுது, நமது மூக்கெல்லாம் கரிந்துபோம்படி ஒரு கெட்ட நாற்றம், கந்தலை நாற்றம் உண்டாகின்றதே. அது ஏதனால்? அவர்கள் வெயர்க்க வெயர்க்கப் பாடு படுகின்றனர். வெயர்வை நீங்கக் குளிப்பதில்லை. அதனாலேயே அந்த முடை நாற்றம்.

இப்பொழுது குளிப்பதின் பிரயோஜனம் நன்றாய் விளங்குகிறதா? பிள்ளையாருக்கு அபிஷேகம் செய்வதுபோல, தண்



[illegible]ாத துக்கத்தையும், கேட்டையும் தரும். ஆதலால் கூடாது, என்கின்றனர்.

இதில் நீ என்ன செய்யப் போகிறாய்? உன் இஷ்டப்படி விட்டுவிடவா? இந்த நாட்டிலே நமக்குள்ளே 'சுயம்வரம்' என்ற ஒரு வழக்கம் பண்டைக்காலம் முதல் இருந்து தானே வருகிறது. அதன்படி நீயும் சுயமாக ஓர் நாயகனைத் தெரிந்து கொள்வதுதானே. அதுதான் சரி. உன் இஷ்டம்தான் செய்.

இது சொன்னதும் உனக்கு ஒருபக்கம் ஆநந்தம் பொங்கி வழிந்தோடுகிறது. இன்னொரு பக்கம் புருஷன் தேடும் அருமையை எண்ண எண்ண, பயமும் திகிலும் மெதுவாக நின்று நின்று மாறி மாறி உண்டாகின்றன. ஆநந்தத்துக்குக் காரணமென்ன? என்றால் 'நமக்கிஷ்டமான நாயகன் கிடைப்பன். தெரிந்து கொள்ளலாம்' என்று மனப்பால் குடித்து மயங்குகிறாய்.

ஆனால், இதிலுள்ள குறைகளை உன் பெற்றோர் அறியார். முதலிலே ஓர் பெண்ணோ ஆணோ யாரும் ஒருதடவை ஓர் ஆணையோ பெண்ணையோ பார்த்ததும் ஆசையுண்டாகிறது. எப்படி யுண்டாயிற்று. என்னென்ன குணங்களை யெல்லாம் அறிந்துகொண்டனர்? குணங்களை முகத்தைக்கொண்டு பார்க்கும் சக்தி இன்னும் உன் போன்றார்க்கு வரவில்லை. அது வாய்ந்தவர் உலகத்திலே மிகச் சிலரே. 'ஐயப்படாது அகத் [illegible]வாரைத் தெய்வத்தோ டொப்பக் கொளல்' என்ற படி [illegible] தெய்வப்பிறப்பு. நீ மனுஷப்பிறப்பு, அதிலும் யுவதி. உனக்கு அது தெரியாது. பின், சாதாரணமாய் ஒருவரை ஒருவர் பார்க்கும்போது அவர்களுக்குள் பரஸ்பரம் ஆசையை உண்டு பண்ணுவது நிஜம்தான். நம் நாட்டிலே சிவப்பு நிறமே அழகென்று கருதுகிறார்கள். வேறெவ்வகைக் கோணல்

கள் இருந்த போதிலும், நிறம் அவற்றை மறைத்து விடுகின்றது. "ஆயிரம் கோணலை ஒரு சிவப்பு மறைத்துவிடும்" என்பது இன்னும் நமக்குள் பழமொழியாக வழங்கிவருகின்றது.

ஆகவே, நமது கண்ணைக் கொண்டு நன்றாய்ப் பார்த்துத் தெளிந்து கொள்ளவேண்டிய அங்க அமைப்பை மறந்து, கேவலம் நிறத்தையே கண்டு களித்துப் பெருமைப் படுத்தும் நாம் மனத்திலுள்ள குணக்கேடுகளையும் குணப் பெருமைகளையும் எவ்வாறு கண்டு நிச்சயிக்க இயலும்? இது முடியாத காரியம். எனக்கு நாயகன் தேடிக்கொள்கிறேன் என்று அப் பெரும்பாரத்தை இப்பருவத்திலேயே உன் தலையிலே ஏற்றுக்கொள்ள விரும்புவாயானால், உள்ளத்தில் உள்ள குணங்களை அறிய முடியாது. கேவலமான நிறத்திலேயே சிக்குண்டு தவிப்பாய். ஆதலின் இப்பொறுப்பை உன் தலையிலே போட்டுக் கொள்ளாதே.

இரண்டாவதாக:—அங்கங்களின் அமைப்பை நீ உணரவல்லவள் என்றே வைத்துக்கொள்வோம். அதாவது, கண் தாமரைபோல் பெரிதாகச் செவ்வரி படர்ந்து இருக்கவேண்டும். மூக்கு நீண்டு, மேலுயர்ந்து நுனி கூர்மையாய்ப் புத்தி நுட்பத்தை விளக்கவேண்டும். நெற்றி விசாலமாய் வரிகள் படர்ந்து ஆழ்ந்த யோசனையைக் காட்டவேண்டும்—என்ற அங்க அமைப்பும் நீ தெரிந்தவளென்றே வைத்துக்கொள். இப்படி அங்க அமைப்பையும் அழகையும் குறியாகக்கொண்டு நீ நாயகன் தேடும்போது அதே புருஷனை இன்னொரு மாதும் அக்குறிகள், அப்பெருமைகள் காரணமாகவே இச்சிக்கிறாள். அப்பொழுது என் செய்வது? அன்றியும் அப்புருஷனும் இதேபோல பெண்களின் லக்ஷணங்களை எண்ணிப்பார்த்துத் தனக்குப் பிடித்த ஒரு யுவதியை மணந்து கொள்ளும் பொழுது மற்றவர் பாடு என்ன ஆகும்? இவற்றையெல்லாம், ஆழ்



ந்தி நோக்குவாயாயின் கற்பென்பது ஏட்டில் எழுத்தாய்ப் போய், அழகும் அங்க அமைப்பும் பலர்க்கும் பொறாமையையும் கற்புக் கேட்டையும் உண்டு பண்ணுவதற்குக் காரணமாகத்தானே முடியும்? இச்சங்கடங்களெல்லாம் உணர்ந்தே பெரியோர் தம் மக்களுக்குத் துணை தேடுவது. ஆதலால் இதில் நமது அநுபவமற்ற அறிவைச் செலுத்தாது நிறுத்துவோம்.

இனி, சுயம்வரம். சுயம்வரம் என்று கூறுகிறார்களே சிலர். அதை யோசிப்போம். இவர்கள் தமயந்தி, சந்திரமதி போன்ற பெண்கள் செய்தனர். ஆதலால் நாமும் செய்து கொள்ளலாம் என்கின்றனர். ஆனால், தமயந்தி சுயம் வரம் எப்படி நடந்தது? தானாக, மாலையை எடுத்துக்கொண்டுபோய் நளன் கழுத்திலே போட்டுவிட்டாளா? இல்லையே. தன் பக்கத்திலே இரண்டு தோழிகள் 'மன்னர் பெயரும் வளநாடும் இன்ன பரிசு' என்று சொல்லிக் கொண்டுவர, குற்றங்குறைகளையெல்லாம் கண்டு அவளும் விலக்கிக் கொண்டல்லவோ வந்தனள். அன்றியும், சரஸ்வதி தேவியே அவளோடு தோழியாகப் போய், குறிப்பாக மற்றவரை விலக்கி அவள் மனத்தில் குடி கொண்டிருந்த நளனைத் தமயந்திக்குக் காட்டினாள் என்பதல்லவோ கதை.

இங்கே, தமயந்திக்கு நளனிடத்திலே, ஊழ்வலியாலே ...ல் உண்டானாலும், அதற்கு இடையூறாக வரும் ஏமாற்றுக் ...ர அறியத் திறமையில்லை என்ற காரணத்தாலல்லவா ...வதி தேவி வந்தனள். அவளுக்கே அப்பாடாயின் நம் போன்றவர்க்கு எப்பாடாகும்?

இனி, சந்திரமதி மணம் சுயம்வரம் இல்லையென்பதை பிறக்கும்பொழுதே ('மங்கல நாண்') தாலியுடன் பிறந்தாள் என்பதைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம்.

துரோபதை, சீதை என்ற ஒப்புயர்வில்லாப் பெருமாட்டிகளைத் தாய் தந்தையர் தம் நோக்கப்படியோ, தம் குலத்தவர் நோக்கப்படியோ குறி எய்தவனுக்கும் வில் வளைத்தவனுக்கும் கொடுத்து மகிழ்ந்தனர்.

மேலும், மிக இழிந்த குணங்கள் பெற்ற கொடியவரும், தம்மைப் பிறர் காணவரும்பொழுது அவற்றையெல்லாம் கட்டிச் சுருட்டி ஒரு பக்கத்து ஒதுங்க வைத்து விடுவாரல்லவா? தமது உண்மையான இயற்கையை மனிதர் பிறர் எதிரில் காட்டக்கூசி, பொய் வேஷத்தையன்றோ காட்டுகின்றனர். இதை நம்பி, அறியாமல் மணந்துகொண்ட ஆடவரும் பெண்டிரும் பின்பு அதற்காகப் பச்சாத் தாபப்படுவதையும், இப்படியே அறியாமல் வேஷத்தாலே மயங்கிச் சிநேகம் செய்து கொண்ட பெரியர், பின் அக்கொடியவரால் வரும் பழிகளுக்கெல்லாம் ஆளாகிக் கொண்டு வருவதையும் நாம் தினசரி கண்டும் கேட்டும் வருந்துவது போதாதா? நாமும் இக்குற்றத்துக்காளாகி இப்பலனையும் அநுபவிக்க வேண்டுமா?

இவற்றை யெல்லாம் நோக்கும்பொழுது தனக்கேற்ற புருஷன் தேடுவது அருமை; ஆதலால் தாய் தந்தையர் இச்சைக்குட்பட்டு, அவர் அக்கினி சாக்ஷியாக மணஞ்செய்து வைக்கும் புருஷனையே தெய்வமாகக் கொண்டு வாழவேண்டும் என்பது புலப்படுகின்றதா?

அன்றியும், இன்னொன்று கேள். இப்பிரபஞ்சத்திலேள தனையோ அண்டங்களை யெல்லாம் படைத்து அவ்வவற்றிற்கு ஏற்ற இடத்தில் அமைத்துச் சீராய் நடத்தி வரும் பெருமான், உன்னை மட்டும் உனக்குத் தகாத நாயகனோடு சேர்த்து வைப்பானா? வெளிக்கு ஒருக்கால் அவ்வாறு தோன்றுமே யன்றி ஆழ்ந்த அறிவுக்கு அவ்வாறு படாது. நீ சொல்லுவாய்:- "அதோ அவள் நல்லவள்; அவள் புருஷன் படாத பாடு



படுத்துகிறான். அப்படி இப்படியென்று". ஆனால் நீ அவள் மனத்தை உற்று நோக்குவாயானால் அவள் அகங்காரத்திற்கும், பேராசைக்கும் பொறாமைக்கும் இதுதான் ஏற்ற இடம் என்று நீயே உணர்வாய். ஆதலின், எல்லாம் தெரிந்து அருளொடு அறமும் காட்டும் பெருமான் அவள் விஷயத்தில் தவறிவிட்டார் என்று நினைப்பதை முற்றிலும் ஒழித்துவிடு. உனக்கேற்றது அருள்வார். அதனால் அது கொண்டு திருப்தியாய் வாழ்வாயாக. வீணே மணம் என்பதின்பெருமையை அறியாதார் சொல்லும் வார்த்தையை நம்பி ஏமாந்து போகாதே.

இன்னும் கேள். உலகத்திலே இதுவரை தோன்றியுள்ள ஆடவர்களி லெல்லாம், ராமன், நளன், பாண்டவர், அரிச்சந்திரன் என்ற இவர்களிலும் சிறந்த பெரியர், அழகர் கேட்டிருக்கிறாயா? இவர்கள் பெண்டிர்களுக்கு நேர்ந்த கதியையும் நீ எண்ணிப்பார்த்த துண்டா? ஐயோ, மேருவில்லை யொடித்த ராமபிரான் தன் மனைவியைப் பலமுறை ஊராரைத் திருப்தி பண்ணுமாறு காட்டுக்குத் தனியாக விரட்டிப் படாத பாட்டுக் குள்ளாக்கினார். நளனோ, சூதிலே மயங்கி, மனைவி சொல்லைத் தட்டி, செல்வ மெல்லாம் தோற்று, நள்ளிரவிலே நடுக்காட்டிலே பாழ்மண்டபத்திலே தன் துணைவியைத் தனியே விட்டுவிட்டுப் பிரிந்தான். பாண்டவரோ மிகப் பராக்கிரமசாலிகள், ஒருவர் இருவரல்ல; ஐவர். ஒவ்வொருவரே உலகத்தை [illegible]ப் போதும். அத்தகைய வீரருள் சூதாடி நாடிழந்து [illegible]யையும் இழந்து, அவளை ராஜ சபையிலே துகிலுரியவும் பார்த்திருந்தனர். அரிச்சந்திரனோ மணமாறத் தன் மனைவியை விற்றான்.

இப்படி உத்தம புமான்கள் எல்லாம் தம் மனைவியர் கற்பைச் சோதிப்பது போல, அவர் துன்பத்திற்குக் காரணமாய் இருந்திருக்கின்றனரே யன்றி வேறில்லை.

ஆதலால், படிப்பாளி, அறிவுள்ளவன், வீரன், கொடையாளி, அழகன் என்ற இக்காரணத்தை முன்னிட்டு நாம் சுகமாய் வாழலாம்; இக்குணங்கள் பெற்றவரையே நான் பதியாகப் பெறுவேன் என்று உன் மனம் போனபடி தீர்மானம் செய்துவிடாதே. அத்தகைய புருஷற்கு நீ தகுந்தவளாயிருத்தல் வேண்டும். இல்லையேல் நீ அவரால் இகழப்பெற்று அநாதர வாவாய். அன்றியும், அந்நற்குணங்கள் பெற்ற பெரியோர் மேற்சொன்ன ஆபத்துக்களில் தள்ளினலும் தள்ளுவர். செல்வமுள்ள இடத்தில் பயமும், சுகமுள்ள இடத்தில் துக்கமும் உண்டு. ஆதலால், இப்படிக் குணம் மட்டும் வேண்டும் என்று கேட்கும் நீ இக்குறைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சம்மதமா?

இனி, கடைசியாக, உனக்கு இப்பருவத்தில் தாய் தந்தையரினும் நெருங்கிய அன்பர் யார்? அவரையன்றி வேறு யார் உன் க்ஷேமத்தைக் கருதுபவர்? அவரே தேடித் தரும் புருஷர் உனக்கேற்றவர் அல்ல என்றால், இனி யார்தாம் உனக்கு இனியவர் ஆவர்? ஒருக்கால் 'ராமனே செய்யுமேல் அது தாய் செயல் அல்லவோ?' என்று இராமாயணம் கூறியதை உற்று நோக்கு. தாயே செய்யின் அதைத் தடுப்பவருண்டோ? தாய் தந்தையரினும் மேம்பட்ட பாத்தியதையும் அன்பும் உள்ளவர் எவரேனும் குழந்தையாகிய உனக்கு உண்டோ? உனக்கு ஏற்காத கணவனை ஒருக்கால் மணக்கும்படி நேர்ந்ததாயின், அது ஊழின் செயல் என்று எண்ணி மனங்கோணது சிரந்தாழ்த்து வாயாக.

சகோதரீ, இதுதான் நம் நாட்டு மாதரின் பெருமை. இதை விட்டுத் தக்க காரணமின்றி அந்நியரைப்போல நாமும் ஆடவரைத் தெரிந்துகொள்ளும் உரிமையை நம் கையில் வைத்



துக்கொள்ளவேண்டும் என்று எண்ணுவாயானல் உனக்குரிய பெண்தன்மை முற்றிலும் இழந்து விடுவாய்.

அந்நிய தேசத்திலே புருஷர் தேடும் இக்கொண்டாட்டம் மிக விமரிசையாக நடக்கிறது. ஒரு புருஷரோடு சில நாள் கூடி வாழ்ந்து அவர் சரீரம் மனம் என்ற இவற்றில் தமக்கு ஏற்காதவர் என்று கண்டால் உடனே அவரை விட்டு விலகி மற்றொருவரைப் பார்க்கிறார்கள். இப்படி, புருஷ வேட்டையிலேயே அவர்கள் காலம் கழிகின்றது. அன்றியும் முதலில் சில வருஷங்கள் கூடியிருந்து, பின் ஒருவர்க்கு ஒருவர் பிடிக்க வில்லையாயின் தீர்த்துக் கொள்ளலாம் என்ற வழக்கமும் உண்டு. அவர்க்கு ஏற்ற வழக்கம் நமக்கு ஏற்குமா என்பதை இப்பொழுதாவது யோசித்து, தந்தை தாயார் இஷ்டப்படி மணஞ்செய்ய விட்டு விடு.

## 2. மனைவி.

அம்மா, இனி நீ முற்றிலும் மாறிவிட்டாய். இதுவரை தாய்தந்தையர் சகோதரர் என்ற வாஞ்சையெல்லாம் உனக்கு மிகுதியாய் இருந்தது. இன்றைக்கோ, மந்திரக் கோலால் மாறுபட்டது போல அவற்றையெல்லாம் கீழ்ப்படுத்தும் ஒரு பேரன்பு உன் உள்ளத்திலே உதித்துவிட்டது. இதுவரை உனக்கு 'என் சரீரம் பிரத்யேகமானது; அதைப் பலவகையிலும் போஷணை செய்தாலே எனக்குச் சுகமுண்டு, என்ற எண்ணமிருந்தது. இப்பொழுதோ உன் சரீரத்தைப் பற்றிய உணர்ச்சியே முற்றிலும் நீங்கி, இன்னொரு சரீரத்தையே உனது என்று கொண்டாட ஆரம்பித்து விட்டாய். முன்னெல்லாம் தந்தை தாயர் சகோதரரை விட்டுப் பிரிய நேரினும் சஹிக்க [illegible]த நீ, இன்று இதுவரை பார்த்தும் கேட்டும் அறியாத [illegible]ப் பிரியநேரின், அழுது பிரலாபித்து அவர் பின்

போவதற்கு யாரையும் விட்டொழியத் தயாரா யிருக்கிறாய். இன்னொரு ஆடவர் கரஸ்பரிசம் நேரினும் நடுநடுங்கி வெயர்த்துப் பயப்படும் நீ, இப்பொழுது அக்கரம் படவே புளகாங்கிதமுற்று, இவ்வுலகத்தையே மறந்து, சரீரமெல்லாம் நெகிழ, இன்னதென்று சொல்லி முடியாத ஓர் இன்பத்தை அனுபவிக்கின்றாய். தாய் வீட்டில் எல்லாம், சமைபல் செய்வதற்கோ, நீரெடுப்பதற்கோ, வேறெதற்கோ உன் சகோதரியோடு போராடிக் கொண்டிருந்த நீ, இன்றைக்கு மௌனமாக வீட்டலுவல்களெல்லாம் செய்து களித்துக் கொண்டிருக்கிறாய். நவநவமான கறிகள் செய்து ஒருவர்க்கு ஊட்ட எண்ணிப் பாகநூலைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறாய். இதுவரை உன் கண்ணுக்கு அர்த்த மில்லாதது போல ஏதோ வெற்றிடமாகத் தோன்றிக் கொண்டிருந்த உலகம், இனி மிக அர்த்த புஷ்டியுள்ள கம்பர் கவியாகின்றது.

இப்படிப் பலவகையாலும் உன்னை மாற்றி, விழித்துக் கொண்டிருக்கும்பொழுதே இன்ப மயமான தெய்வீகக் கனவு காண்பது போலப் புத்தியைப் பிரட்டி, உனது சரீரத்திலே புதிதான ஒரு அழகை ஆக்கி, இன்னும் என்னவெல்லாமோ இன்பங்களை விளைக்கும் இது என்ன? அப்படி நீ குடித்த கள்வகை என்ன?

என்ன என்றால், கள்ளுமில்லை, வெறியுமில்லை; கழுத்திலே ஒரு முடி விழுந்தது. ஆஹா! அம்முடியின் மஹிமைதான் என்னே! அது நீடுழிகாலம் வாழ்வதாக!

அம்மா, இன்று உனக்குக் கல்யாணமாயிற்று. நீ உன் தலையைக் குனிந்து கொண்டு, "அன்பரே, தங்களுக்கு நான் கட்டுண்டவள், நீங்கள் காலால் இடும் கட்டளையைச் சிரசால் ஏற்றுச் செய்யச் சித்தமாயிருக்கிறேன். உங்களோடு துணையாக



லாம் நன்றாய்த் தெரியும் என்றும் சொல்ல, இருவரும் உள்ளே
புகுந்தார்கள். ராஜாத் திருடன் நமது கதைத் திருடனை நேரே
பொக்கிஷசாலைக்கே கூட்டிக்கொண்டு போனான். பொக்கிஷத்
தைத் திறந்து நெடு நேரம் பார்த்தார்கள். தூக்குவதற்கு
எளிதாகவும், இனித் திருடவேண்டாதபடி அத்தனை விலை
உயர்ந்ததாகவும் வேண்டுமென்பது நமது திருடனுடைய உத்
தேசம். தேடித்தேடிப்பார்த்து, கடைசியாக ஒரு சிறு தங்கப்
பெட்டகத்துள் எவ்வளவோ பத்திரமாக மூன்று ரத்தினங்கள்
இருக்கக் கண்டார்கள். மூன்றையும் முழுதாக இருவருக்குள்
பங்கு வைக்க முடியாதென்று, தாங்கள் ஆளுக்கு ஒன்று
எடுத்துக்கொண்டு, ஒன்றை ராஜாவுக்கென்று பெட்டகத்
துள்ளேயே வைத்துக் கிரமப்படி மற்றவைகளை இருந்த இடத்
திலே வைத்துப் பூட்டிவிட்டு வெளியே போய்விட்டனர். விடிந்
தது. காவலாளர் எப்படியோ திருடர்கள் அரண்மனைக்குள்
புகுந்த விஷயத்தைக் கண்டு கொண்டனர். ஆனால் ஒரு
சாமானும் களவு போகவில்லை. முதல் மந்திரி பொக்கிஷத்
தைச் சோதிக்கப்போனான். அங்கும் சாமான்கள் எல்லாம்
அப்படியப்படியே இருந்தன. ஆனால் ரத்தினங்களில் இரண்
டைக் காணோம். மந்திரி எண்ணினான். "இது ஒன்றை
உலகம் பெறும். இதை நமக்கு எடுத்துக்கொண்டு மூன்றையும்
காணோம் என்று சொல்லிவிட்டால் யார் காண்பார்கள்.
நம்மையோ சந்தேகிக்க மாட்டார்கள். திருடர்கள் கொண்டு
போய் விட்டார்கள் என்று எண்ணிக் கொள்வார்கள். நாமும்
கோடீசுவரனாய் விடலாம்" என்று இவ்வாறு தனக்குள்ளே
தானே தீர்மானம் செய்து கொண்டு அந்த ஒன்றையும் வாயி
லிட்டுப் பத்திரமாகக் கன்னத்தில் ஒதுக்கி வைத்துக்கொ
ண்டு அரசனிடம் வந்து, "மஹாராஜாவே, எல்லாம் இருக்
கிறது. ரத்தினங்கள் மூன்றையுமே காணோம்" என்றான்.

ராஜாத்திடருனுக்குச் சந்தேகம் பிறந்துவிட்டது. பொய்யாத் திருடன் விலாசத்தைச் சொல்லி, தலையாரியை அனுப்பி அவனைக் கூட்டி வரச் சொன்னார். அவனும் வந்தான். "நேற்றிரவு நடந்தது என்ன? நீ எங்கேனும் போனதுண்டா" என்று கேட்டார். திருடனோ, உள்ளதெல்லாம் அணுப் பிசகின்றித் தன் குரு வாக்குக்கு இரண்டில்லாமல் சொல்லி விட்டான். உடனே ராஜா மந்திரியை அருகில் அழைத்துக் கன்னத்தில் இரண்டடி கொடுக்க ரத்தினம் கீழே வீழ்ந்தது. அவ்வளவிலே, மந்திரியை உத்தியோகத்தினின்று நீக்கிச் சிறையிலடைத்து, பொய்யாத் திருடனை மந்திரியாக்கிப் புகழ் பெற்றார்.

குழந்தாய்; இதிலிருந்து நீ என்ன தெரிந்துகொண்டாய்? பொய் சொல்லாதிருத்தல் எத்தனை உத்தமமானது! சகல பாவங்களினின்றும் விலக்கி, ஒருவனை இகம் பரம் என்ற இரண்டு நிலைகளிலும் உயர்த்தும் சக்தி அதற்கு உண்டு. பொய் சொன்னால், தன் நிலையும் கெட்டு, மந்திரி யடைந்த கதியடைய வேண்டியதுதான்.

ஆகலின், குழந்தாய், ஒரு பொழுதும் பொய் சொல்லாதே. இக்கொடிய வழக்கம் உன் பக்கத்தில் கூட அணுகாதபடி காத்துக்கொள். பொய்யர்களை முகலாம்பனம் கூடச் செய்யாதே.

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

## 7. களவு செய்யாதே.

களவு என்பது பிறர் பொருளை அவர் சம்மதமில்லாமலும், அவர் அறியாமலும் எடுத்துக் கொள்வது. இது குழந்தைகளுக்குள் சகஜமாயிருக்கிறது. குற்றமென்று கருதப்படு



வதில்லை. ஒரு பொருளைப் பார்த்ததும் அதனிடத்தே அவர்களுக்கு ஆசை உண்டாய் விடுகின்றது. நமக்கு வேண்டும் என்று எண்ணுகிறார்கள். உடனே அதனை எப்படியாவது அடைய வழி தேடுகிறார்கள்.

இது பெருந் தவறு. ஏன்? உன்னிடத்திலுள்ள ஏதேனும் ஒரு பொருளைப் பிறர் உன் அநுமதியின்றி எடுத்துச் சொந்தமாக்கிக் கொள்ள நீ சம்மதிப்பாயா? மாட்டாயல்லவா? அன்றியும் நீ பாடுபட்டுச் சம்பாதித்த பொருளை, பாடில்லாமல் மற்றவர் எடுத்துக்கொள்வது நியாயமாகுமா? பொருள்களுக்கு விலை எப்படி ஏற்படுகிறது? எதை வைத்துக் கணக்கிடுவது? வேலை, பாடு, உழைப்பை வைத்துத்தானே பொருள்களுக்கு மதிப்பு ஏற்படுகின்றது. நீ இரண்டு நாள் விடாமல் எழுதினால் இரண்டு ரூபாய் தரும்படியான வேலை செய்வாய். இதற்கு நாலு ரூபாய் வாங்கலாமா? அப்படி வாங்குவது அநியாய மாகுமல்லவா? இது போல, ஒருவன் பாடுபட்டு அதன் கிரயமாகப் பெற்றிருக்கும் பலனை, மற்றவன், அதற்கேற்பட்ட நியாயமான பாடுபடாமல் திடீரென்று எடுத்துத் தனதாக்கிக் கொள்வது தகாதல்லவா? ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்க ஒரு கூலிக்காரனுக்கு ஐந்து வருஷங்கள் செல்லும். அதை அக்கூலிக்காரனளவே சக்தியுள்ள ஒருவன் ஒரு மணி நேரத்திற்குள் திருடிக்கொள்வது அநியாயம் தானே. இதையே திருட்டு என்று சொல்கின்றனர்.

அன்றியும், இதிலே உண்டாகும் கேடுகளும் இச்செயல் தவறு என்று உறுதிப்படுத்துகின்றன. எப்படி? ஒருவன் ஆயிரக் கணக்கான ரூபாய் ஒரு நாள் இரவில் திருடிக் கொண்டு வருகிறான். ஒருமாச காலத்துக்குள் அப்பணம் அத்தனையும் போய், மறுபடியும் பிழைப்புக்குப் பழைய கன்னக் கோலைத் தூக்க வேண்டியதாகிறது. ஆனால் ஆயிரம் ரூபாய் சம்பா

திக்க ஒரு ஏழைக்குப் பத்து வருஷம் செல்லுகிறது. அப்பணத்தின் பயனை அவனும் அவன் வம்சத்தாரும் அநுபவிக்கின்றனர். இதற்கு அநேக திருஷ்டாந்தங்கள் நீங்கள் கேட்டிருக்கலாம், கண்டுமிருக்கலாம். ஏன் இப்படி நிகழ்கிறது? திருடன் அப்பணத்தின் அருமையை அறிகிறானில்லை. ஒரு மணி நேரத்தில் அவனுக்குக் கிடைத்ததாகலின் ஒரு மணி நேரத்தில் அதைப் போக்கடிக்கத் துணிகிறான். பொருளின் அருமையை அவன் அறியவே முடியாது போய்விடுகிறது. இதை வைத்தே 'தான் தேடாப் பொருளுக்கு உறைப்புமில்லை, மாற்றுமில்லை' என்கிற பழமொழி வழங்குகிறது.

இதனால் விளையும் கேடுகள் பல. முதலாவதாக, பணத்தின் அருமை தெரிவதில்லை. ஒரு நாள் இப்பேயின் "வசப்படும் சோம்பேறி தன் ஆயுள் காலமெல்லாம் வேறெந்த நல்ல தொழிலுக்கும் உதவாதவனாகிறான். தன் காலத்தைக் களவு செய்தே கழிக்கவேண்டியதாகின்றது. அதற்காக அவன் ராஜாங்கத்தாரால் அடையும் கண்டனை தண்டனையோ சொல்ல முடியாதவை. ஜனங்களும் இவனை மனிதனென்றே கருதுகிறார்களில்லை. இவனெதிர் நின்று வார்த்தையாடவும் கூசுகின்றனர். இப்படிப் பலபல.

ஆதலின், குழந்தாய், களவுசெய்யாதே; நீ என்ன செய்தாலும் பிழைத்துக்கொள்ளலாம்; தப்பித்துக்கொள்ள வ[illegible]யுண்டு. இச்சிறுசெயலுக்கு மட்டும் இடம் கொடாதே[illegible] இதை மறந்தும் எண்ணாதே. பிறர் பொருளை நஞ்செ[illegible]றெண்ணு. அதன்மேல் ஆசை கொண்டால், மானமிழந்து, சந்தோஷம் திருப்தி சாந்தி என்ற அருமையான மனநிலையெல்லாம் தூரமாம். ஆசைப்பட்டால், அதையடைய வழி பார்ப்பாய். கிரமமாக அதையடைய ஏற்ற பாடுபட உனக்காகாததால், கள்ளவழியில் பெற அவ்வாசை உன்னைத் தூண்டும்.



பிஞ்சு முற்றினால் காய் ஆகும்; எண்ணம் முற்றினால் செயல் ஆகும். ஆதலால் அத்தகைய எண்ணத்திற்குச் சிறிதும் இடம் தராதே.

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

## 8. அன்புசெய்.

குழந்தாய், உனக்கு இயற்கையிலே புறா, கிளி, மைனா போன்ற பறவைகளிடத்தும், முயல், நாய், பூனை, பசு, எருது போன்ற மிருகங்களிடத்தும் பிரியம் உண்டல்லவா? இவற்றில் ஏதேனும் ஒன்று புதிதாகக் கிடைத்தால், அதற்குக் கூடுகட்டுவதிலும், இரைதேடிக் கொடுப்பதிலும், தண்ணீர் வைப்பதிலும், கூடு கழுவுவதிலுமே உன் நேரமெல்லாம் செலவாகிறதல்லவா? படிப்புக்கூடப் பெரிதில்லையென்று இதே கருத்தாய், உனக்குச் சிற்றுண்டிக்காகக் கிடைக்கும் காசுகளையெல்லாம் உன் பிராணித் தோழர்களுக்காகச் செலவிடத் தயாராயிருக்கிறாயல்லவா?

இன்னும், மல்லிகை, முல்லை, ரோஜா போன்ற புஷ்பச் செடிகள் நட்டு அவற்றிற்கு வேண்டிய பக்குவங்களெல்லாம் நாள் தவறாமல் செய்து கொண்டு வருகிறாயே. பாத்தி கட்டுகிறாய்; நீரெடுத்துக் கொட்டுகிறாய்; வேண்டிய உபசாரங்களெல்லாம் செய்கிறாய். ஒருக்கால் அது புஷ்பிக்குமேல், நீ புஷ்பித்தது போல மனமகிழ்ந்து அதை ஒரு திருநாளாகக் கொண்டு கொண்டாடிக் களிக்கிறாயே. ஏன் இப்படிச் செய்யவேண்டும்? இவையெல்லாம் உனக்கென்ன பேருதவி செய்தன?

கிளி என்ன தந்தது? நாய் என்ன தரும்? துளசி உனக்கென்ன பிரயோஜனமாயிற்று? பின் ஏன் இவற்றினிடத்து இத்தனை அன்பு! தங்கையே, நீ அன்புருவம்; கருணாரஸம். இன்னும் அவ்வன்பு பொறாமை தன்னயம் போன்ற இழிகுணங்

களால் மாசுபடுத்தப் படவில்லை. அவையெல்லாம், லாப நஷ்டம் கருதும் உலகத்தார் சம்பத்துகள். உனக்கும் அவற்றிற்கும் சம்பந்தமில்லை.

உன் அன்பு உன்னை அருப்புக் கொள்ள விடுவதில்லை. ஏதேனும் ஒரு பிராணிமேலோ, செடிமேலோ பொம்மைமேலோ உண்டாகி, அவற்றிற்காக உனது சௌகரியங்களை யெல்லாம் இழக்கச் செய்கின்றது. இதுவே உனக்குச் சுகம். இதுவே உனக்கு ஆநந்தம். இது மிக நல்லதுதான்.

ஆனால், நீ இதுவும் செய். உன்னை யொத்த சிறுவரிடத்தும், அநாதைகளிடத்தும் ஏழைகளிடத்தும் இவ்வன்பைப் பெருக்கு. அவர்களுக்கு உன்னாலே செய்யத்தகும் உதவிகளெல்லாம் செய். உன் தோழிகளுக்குப் பாடம் தெரியவில்லையானால், உனக்குத் தெரிந்தவரை பிரியத்தோடு சொல்லிக் கொடு. ஏதேனும் கஷ்டம் நேர்ந்தால் உன்னால் கூடியவரை அவரை அதினின்று விலக்க வழிபார்.

உன் தோழியர் வரும் வழியில் கல் தட்டிக் கீழே வீழ்ந்தால், சில பிள்ளைகள் செய்வது போல ‘ஹே’ என்று கை தட்டிக் ‘கேலி’ பண்ணாதே. இது அவர்க்கு இன்னும் அதிக வருத்தம் உண்டு பண்ணும். நீ இவ்வாறு வருந்தும்பொழுது மற்றவர் பரிகாசம் செய்ய உனக்குச் சம்மதம் இருக்குமா? இன்னும் உன் அழுகை அதிகப்படவல்லவோ செய்யும்! ஆத[…]ல் அப்படிச் செய்து பிறரை வருத்தாதே. உடனே கல் தட்டி[…] காயத்திற்கு ஏதேனும் மருந்து செய். சில நல்ல பிள்ளைக[…] அக்காயத்தைக் கட்டக் கிழிந்த துணி உடனே கிடைக்கவில்லையாயின், தமது புது ஆடையில் ஓர் ஓரத்தைக் கிழித்து நீரில் நனைத்துக் கட்டவும் செய்கிறார்கள். இரத்தம் அதிகமாக வெளியே போகவிட்டால் மிகுந்த ஆயாசம் உண்டாகும். மிகப் போகுமாயின், இறந்தாலும் இறப்பர். இதற்காகவே



இரத்தம் வெளிப்படாமல் கையாலே துணிவரும் வரை நன்றாய் அக்காயத்தை அடைத்துக்கொண்டிருந்து, துணிவந்ததும் நனைத்துக் கட்டுவது, கரித்தூளையேனும், சீனியையேனும் அக்காயத்தில் வைத்து அடைப்பது. இப்படிச் சங்கடத்திலெல்லாம் உன்னால் இயன்றவரை உன் தோழியர்க்கு உதவி செய்.

உன் சகோதரர் சிறுவராயிருந்தால், பிடிவாதம் செய்து, உன் விளையாட்டுச் சாமான்களோ வேறெதுவோ வேண்டுமென்று விடாமல் அழுவார். அவர் ஒன்றும் அறியார். பாத்தியா பாத்தியத்தைப் பற்றிய நியாய உணர்ச்சி அவர்க்கு இன்னும் உண்டாகவில்லை. ஆதலால் அவர்களுக்குக் கொடுத்து ஆறுதல் செய். சில வீடுகளில் ஓயாது சகோதரர் போராட்டமாகவே இருக்கின்றது. ஒருவர் மற்றவரை வைவதும், அடிப்பதும், ஒருவர் சாமானை மற்றவர் பிடுங்குவதும் எறிவதும் பார்ப்பவர்க்கு மன எரிச்சல் உண்டு பண்ணும்படி யிருக்கும். அவ்விடங்களில் அன்பே இல்லை. சிறுவர் அறியாதவர் என்ற பொறுமையில்லை.

இம்மாதிரி யெல்லாம் நீ நடந்து கொள்ளாதே. குருவிக்கும், நாய்க்கும் செடிக்கும் நீ காட்டும் அன்பை, பொறுமையை உன் சகோதரர்க்கும் தோழர்க்கும் காட்டக் கூடாதா? குழந்தாய், அன்பு செய், அதிலேதான் சுகமுண்டு. சந்தோஷமுண்டு. பொறாமை தீராத நோய், மாறாத சாபம். ஆதலால் தயவு செய்து மற்றவரிடத்துப் பொறுமை காட்டி, அன்பு செய்து பழகிவா. இந்த அன்பே வளர்ந்து, பின் அருளாகின்றது, பேரானந்தம் அளிக்கின்றது.

# இரண்டாம் பாகம்.

---

## 1. மணம் செய்வதற்குரிய பருவம்.

சகோதரியே, நீ இதுவரை சிறியவளா யிருந்தாய். எழுதப் படிக்க நன்றாய்த் தெரிந்து கொண்டாய். கெட்ட குணங்கள் பல தெரிந்து அவற்றினின்று விலகத் தீர்மானஞ் செய்திருக்கிறாய். இப்பொழுது பெரிய மனுஷியாய் விட்டாய், இது வரையில் இல்லாத சுயபுத்தி இப்பொழுதுதான் மெல்லத் தலைக்காட்டி யிருக்கின்றது. இப்பொழுதே நீ புத்தி யறிந்தாய் என்று சொல்கிறார்கள். இன்றுதான் நீ புஷ்பவதியானாய். இனிமேல் நறுமணம் வீசி, பிஞ்சுவிட்டு, காய்த்து, மனிதகோடிகள் உய்யும்படி செய்ய வல்ல பழமும் தரப்போகிறாய். இப்படிப் பழங்கள் தாம் வியாசர், ராமர், கிருஷ்ணன், சம்பந்தர், சுந்தரர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தர் முதலிய பெரியர். இவரையும் உன்னைப் போன்ற அன்னையரே இவ்வுலகத்துக்கு அளித்து, இறுமாப்பெய்தி, இரவாப் புகழ் பெற்றிருக் கின்றனர். நீயும் அவ்வாறு செய்து மகிழக் காலம் வந்திருக்கிறது.

ஆனால், சில பெரியர் நீயே உனக்குத்தக்க கணவனைத் தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதே உன் வாழ்க்கை மிக இனிமையாம் என்று சொல்லுகின்றனர். சிலர் 'அது தவறு, இன்னும் நீ சிறுமியே. உலக அனுபவம் உனக்குச் சிறிதும் இல்லை. உனக்கு ஏற்ற ஆடவனைத் தெரிந்து கொள்ள உன்னால் ஆகாது. அப்படிவிட்டால் பின் அது உனக்



நீங்கள் செய்யும் புண்ணிய கர்மங்களோ பாவ கர்மங்களோ அவற்றிலும் சரிபாதியான பங்கு பெற்று அவற்றின் பலனை, அர்த்த நாரீசுவரர்போல, அநுபவிக்கின்றேன்.''

''நீங்கள் மிதித்து எறிகின்ற அம்மியாகிய அகலிகை போன்ற பெண்களை என் காலின் கீழிட்டு மிதித்து, நீங்கள் பய பக்தியோடு வானத்தில் காட்டிய, நாதனைவிட்டுப்பிரியா அருந்ததியம்மையைப் போற்றி அவள் போலாதற்கு ஓயாது பாடுபடுகின்றேன்''

என்ற இது போன்ற பல சத்திய வசனங்கள் சொல்லி ஒருவரைக் கைப்பிடித்தாய். அதுதான் இவ்வளவு மாறுதலுக்குக் காரணம்.

அம்மா, இனி உனக்கும் உன் நாதனுக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றி, நீ மிகக் காதல் வசப்பட்டிருப்பதால் தெரிந்து கொள்வாயாயினும் இரண்டொன்று நானும் சொல்கிறேன். உன் அநுபவத்தோடு இவற்றையும் ஒத்துப்பார்.

முதலாவதாக ''நீ உன் நாதனில் பாதி. அவர் செய்யும் நன்மை தீமைகளிலே உனக்கும், நீ செய்யும் நன்மை தீமைகளிலே அவருக்கும் சரிபாதியான பங்கு உண்டு.''

இதென்ன இது! ஒருவர் செய்யும் நன்மை தீமை மற்றொருவரை எப்படிச்சாரும்? இது பழங்காலத்துக் கதை. அவர் செய்தது அவர்க்குத் தான்; நான் செய்தது எனக்குத் தான்' என்று சிலர்சொல்லி ஆச்சரியம் அடைவர். அவ்வாறு தானா என்று பார்ப்போம்.

தங்கையே, நீ இன்று ஓர் வீட்டிற்குப்போய், உன்னையொத்த பெண்டிர்களுக்கு நாயகனது பெருமையைப்பற்றி, கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து விட்டுத் திரும்பினாய்

என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது அங்கே எ… நடக்கும். நீங்கள் என்ன அடைவீர்கள்?

அங்கே அப்பெண்டிர்களெல்லாம் "ஆஹா! எவ்வளவு அருமையாகச் சொன்னாள்? மெய்தானே அவள் சொல்வதெல்லாம். அவள் பாக்யவதி. நல்ல புருஷனைப்பெற்று இவ்வளவு அறிவும் பெற்றுக்கொண்டாள்" என்றும்;

தங்கள் மனைவிகளால் சொல்லக்கேட்ட நாதர்கள் "ஆமாம், அவன் பூஜாபலம் அது! அவனே பாக்கியவான். கொடுத்துவைத்தவன்" என்றும் பேசி உன் புருஷனையே கொண்டாடுகின்றனர்.

இது கிடக்க. இதை நீ கவனிக்கவேண்டாம். உங்கள் மனத்தில் என்ன நடக்கிறது என்று பார்.

உனக்கு உன் புருஷனைப் பாக்யவான் என்று பலரும் கொண்டாடுவதைக் கேட்க உள்ளூர உவகை பொங்கிச் சில சமையங்களில் வெளியே வந்தும் விடுகின்றது. 'அவரோ உன் எதிரே உன்னைப்பற்றிப் புகழ்வது சரியல்ல என்றெண்ணிக் காது கொடாதவர்போல அவ்விஷயத்தை ஏற்றுக்கொண்டாலும், ஊரார் செய்யும் புகழ்ச்சியைக் கேட்டு இறுமாந்து விடுகின்றார்.

பார்த்தாயா இப்பொழுது. நன்மை தீமையில் நாயக நாயகிகளுக்குப் பங்குண்டென்று சொல்வது இனியேனும் மெய்யாகுமா?

இன்னும் கேள். ஒரு மானமற்றவள் தெருவிலே நின்றுகொண்டு, இன்னொருத்தியுடன் சண்டை போடுகிறாள். அவளைப்பற்றி ஜனங்கள் என்ன சொல்கிறார்கள்? இவளும் இவளை மணந்தவனும் என்னவெல்லாம் மனத்தில் எண்ணு கின்றனர். "சீ இவள் ஒரு மனுஷிதானா? கொஞ்சமாவது



மான ஈனமில்லையா? இன்னது பேசுவது, இன்னது பேசாதது என்றில்லையா? கழுதை! மானங்கெட்ட கழுதை! அடங்காப் பிடாரி!" என்று இவளுக்கு ஆசீர்வாதமும்;

"அவன்தான் என்னசெய்வான்? எத்தனை நாளைக்கு அடிப்பான்? அடித்து அடித்து அவனுக்கும் அலுத்துப்போயிற்று; என்னசெய்வது? பாவம்! அவ்வளவுதான் அவன் தலைவிதி! தருமர் போலே அவன்! மானத்துக்கு அஞ்சித் தலையைக்கூட வெளியேகாட்ட மாட்டேனென்கிறான்" என்று அவனுக்கு அநுதாபமும்; ஜனங்கள் செய்யவோ காட்டவோ செய்கின்றனர்.

ஜனங்கள் சொல்வது இவ்வாறாக, அவர்கள் மனத்தைப் பார்த்தாலோ அடடா! இருவரையும் கரையான் அரிக்கின்றது. அவளுக்கு எதிர் வீட்டுக் கக்ஷிக்காரியை மென்று தின்றுவிட வேண்டுமென்ற கோலத்தில் சோறுகூடச் செல்லமாட்டேனென்கிறது. மேலெல்லாம் புழுங்குகிறது. தூக்கம் பிடிக்கிறதில்லை. மனத்திலே ஏழெட்டுத் தேள்களை ஏக காலத்தில் கொட்டினதுபோல வேதனை பொறுக்கமுடியவில்லை. அவனுக்கோ, இப்பாவி "எங்கேயாவது ஓடிப்போய்விட்டாலும் நல்லதாயிருக்குமே. ஆனால் இந்த அநாதரவானகுழந்தைகளுக்காக அல்லவோ இவளோடு இருக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் துணியை உதறித் தலையிலே போட்டுக்கொண்டு சிவசிவா என்று எங்கேயாவது போய்த் தொலைவனே" என்று சதா அதே வேதனையாய், யாரையும் பார்க்கக்கூடக் கூசி மடிகிறான்.

இப்பொழுது தெரிகிறதா? மனைவிபுருஷனது சுகதுக்கங்களில் கூட இருந்து அநுபவிக்கிறாள். புருஷனும் அப்படியே அனுபவிக்கிறான். ஆதலின் தங்கையே, நீ மிகவும் ஜாக்கிர

தையாயிருக்கவேண்டும். மனம், வாக்கு, காயம் என்ற மூன்றாலும் கேடு, பழி செய்யவே கூடாது!

இனி இரண்டாவதாக "நீ அவனுக்கு இகத்துக்கும் பரத்துக்கும் உற்ற துணை". எப்படி?

இப்பரந்த உலகத்திலே துணையின்றி வாழல் அருமை. எவர்க்கும், நல்லவர்க்கும் பொல்லவர்க்கும் தக்கதோர் துணை வேண்டியது இன்றியமையாததா யிருக்கின்றது. ஜோடியற்ற பிராணியோ, பொருளோ இல்லவேயில்லை. மரங்களிலும் சில ஆணென்றும் சில பெண்ணென்றும் இருந்து, அவ்விரண்டும் கூடுவதாலேயே ஒரு பலன் தந்து உலகத்துக்கு உபகரிக்கின்றன.

மேலும், மனிதன் தன் மனத்திலே உண்டாகும் நல்லெண்ணத்தையோ, சந்தோஷத்தையோ உற்ற தோழனிடம் சொல்லி அவற்றை விருத்திசெய்து கொள்கிறான். நீயும், உன்நாயகன் உன்னைக்கண்டு களிக்கிறார் என்று எண்ணுவையேல், இன்னும் இரண்டொரு வகையில் உன்னை அலங்கரித்துக்கொண்டு அவர் சீராட்டைப் பெற விரும்புவாயல்லவா? உலகம் மதிப்பிலே நடக்கின்றது. கவிகளும் தம்மை மதிப்பார் சபையில் பிரசங்கிப்பதுபோல மற்ற இடங்களில் செய்கின்றாரில்லையே. பிறர் தம்மை மதிக்கவேண்டுமென்றெண்ணியே எவரும் பாடுபடுகின்றனர். அதிலும், தன் அன்பர் தன்னை மதிப்பாராயின், ஆஹா, தேவேந்திரபோகமே அவர் கைக்கு எட்டியதாக எண்ணி அகமகிழ்கின்றனர். இவ்வின்பம் விரும்பாதார் உலகில் இல்லையென்றே சொல்லலாம். அதுபற்றியே 'புகழ்வேண்டார் யார் யாரும் இல்லை,' என்றார் நாலடியாரும்.

இனி, துன்பத்தை மனிதன் தன் அந்தரங்க நேசனிடம் சொல்லிச் சொல்லி, அணுவணுவாகக் குறைத்து, முடிவில்,



இல்லாமலே செய்து விடுகின்றான். நீயும் உன் துன்பத்தை உன் நாயகனிடமோ, உற்ற தோழியிடமோ சொல்லி, மனத்தில் இதுவரை பெருங்கல்லைத் தூக்கிவைத்தது போலிருந்த பாரத்தை ஒருவாறு இறக்கி விடுகின்றாய். ஆயின், 'தோழரோடும் ஏழைமை பேசேல்' என்ற ஒரு வசனம் உனக்குச் சில சமையம் ஞாபகத்துக்கு வருகின்றது. அப்பொழுது, உன் தோழி எவ்வளவு ஆப்தமானவளாயிருப்பினும், 'சீ! இதையேன் இவளிடம் சொன்னோம். இவளுக்கு நம்மீது நல்லெண்ணமில்லையாயின், இவளுக்கும் நமக்கும் ஒருகால் பகை வந்துவிடின், இந்த ரகஸ்யம் வெளிவந்துவிடுமே' என்று நீ மனம் கலங்குகின்றாய். இதனாலேதான், சில பெரியரும் அற்பரோடு தாம் அறியாமல் செய்துகொண்ட நேசத்தை, தமக்கு இழிவு தருகிறதென்று உணர்ந்தாலும் விடமுடியாது பரிதவிக்கின்றனர்.

இவற்றையெல்லாம் உற்றுநோக்கின், துணையில்லாமல் முடியாது என்பதும், அத் துணையும் நமது மானவமானத்தை உடனிருந்து அநுபவிக்கிறவராயில்லாவிட்டால் நெஞ்சஞ் சுடுதற்கு மூட்டிய தீப்போல ஓயாது துன்பத்தையே உண்டுபண்ணுமென்பதும் நன்றாய் விளங்குகின்றன வல்லவா?

இந்த அவசியத்தையும் அருமையையும் நோக்கியே, கடவுள் சரீரம் முதல் ஒன்றையொன்று இல்லாமல் முடியாதபடி ஆணும் பெண்ணுமென்று அமைத்திருக்கின்றனர். அத்திருவுளக் கருத்தை முற்றும் உணர்ந்த பெரியோர் கல்யாணமுடியொன்று போட்டு அச்சம்பந்தத்தை நெருக்கிவிடுகின்றனர்.

மேலும், சிநேகம் ஒருவரால் எளிதாகச் செய்து கொள்ளக்கூடிய காரியமில்லை. மனம், தான் வேறு என்ற நினைப்பை முற்றிலும் மறந்து இன்னொரு சரீரத்தைத் தானென்று

எண்ணுவது எளிதிலே ஆகுமா? இதனாலேதான் பெரியரும் 'செயற்கரிய யாவுள நட்பினது போல்' என்று சொல்லியிருக்கின்றனர். அத்தகைய நட்பு ஒருவர்க்கு வாய்க்கப் பெறுமேல், அவரால் ஆகாத காரியம் உலகில் எதுவும் இல்லை. அவர் செய்யும் காரியங்களை இடையிலே நின்று தடுக்க ஈசனும் ஆகாது. அதனால்தான் வள்ளுவரும் 'நட்பினதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு' என்றார்.

இவ்வளவு பெருமைவாய்ந்த நட்பு உலகில் அநேகமாய் இல்லையென்றே சொல்லலாம். ஒரு பெரியர், 'நட்பு என்பது கானல் நீர் போல இல்லாதது' என்கிறார். இந்நட்பாளர் தம் முக்கியமான இன்னொரு அம்சம் என்னவென்றால், இவ்விருவரில் எவர்க்கேனும் ஆபத்துநேரின், மற்றவரும் தமக்கு அவ்வாபத்து வந்ததாவெண்ணி உடனிருந்தே அநுபவிப்பர். ராஜா தேசிங்கு, மோவுத்துக்காரன் என்ற தோழர் இவ்வகையைச் சேர்ந்தவர்.

இப்படி ஒரே இனத்தவராகிய ஆண்களுக்குள்ளேனும் பெண்களுக்குள்ளேனும் இருத்தல் அருமை என்றெண்ணியே கடவுளது மாயாவிலாச முறைப்படி, ஆணுக்குப் பெண்ணையும் பெண்ணுக்கு ஆணையும் துணையாகச் சேர்த்து நீக்க முடியாத முடியொன்றினால் கட்டி விடுகின்றனர்.

ஆதலின், சகோதரி, தாலியின் அருமையும் அது கட்டியதின் நோக்கமும் நீ இப்பொழுது நன்றாய் அறிந்திருப்பாயென்றெண்ணுகிறேன். அதற்கு இரண்டகம் செய்வோர்க்கு இனியேனும் புத்திகூறு. மூன்றாவதாக, நீ உன் நாதனுக்கு தாய்க்குச்சமானம் எங்கெந்த விஷயங்களில்? தாயைக்காட்டிலும் குழந்தையினிடத்து அன்புள்ளவர் ஜீவகோடிகளுக்குள்ளேயே காணல் அருமை. தன் குழந்தை எத்துணை துஷ்டனாயினும் எத்துணை திருடனாயினும், இன்னும் தன்னைத் தலைமயிர் பிடித்து அடிப்பவனாயினும் அத் தாயன்பு அக்குற்றங்களையெல்லாம் நிமிஷத்திலே மறந்து பழையபடி சீராட்டிப் பாராட்ட முந்துகின்றது. இதனாலேயே, ஈசுவரனை வழிபடும் மார்க்கங்களிலெல்லாம் சிரேஷ்டமானது பால கிருஷ்ணனை வழிபடும் மார்க்கம்.



இங்கே நீ கவனிக்கவேண்டியது இது? உன் நாதன் என்ன குற்றஞ்செய்யினும் உடனே அன்பால் மறந்து அவனை ஆதரிக்கவேண்டும். பின் காலக்கிரமத்தில் அவ்வன்பு அவனது குற்றங்களையெல்லாம் நீக்கிப் பரிசுத்தனாக்கும். குற்றம் கண்ட உடனே அவனை விலக்க விரும்புவாயானால், அச்செயல் உனக்கு உன் நாதனுக்காகவே நாதனிடத்து அன்பில்லையென்று காட்டும்! குணத்தில் அன்பு வைத்திருக்கிறாய், குற்றத்தை வெறுக்கிறாய்.

இது தவறு. குணம் குற்றத்தை யொட்டியும் குற்றம் குணத்தை யொட்டியுமே யிருக்கும். ஒன்றினின்று ஒன்றைப் பிரிக்கமுடியாது. நீரினின்று நுரையையும், நெல்லினின்று உமியையும், நல்லிதழ்விட்டுப் புல்லிதழையும் பிரித்தல் முடியாதல்லவா? ஆதலால் உன் நாயகனிடத்தே கண்ணும் குணத்துக்காக அவனை நேசிக்கவும், குற்றத்துக்காக அவனை வெறுக்கவுஞ் செய்யாதே. அவனை உன் நாயகன், உன் துணைவன், எவரினும் உனக்கு இனியான், உனது மங்களங்களுக்கெல்லாம் ஆதாரம், உன் இன்பத்துக்கெல்லாம் அஸ்திவாரம், என்றெண்ணி அவன் உன்னை விரும்பினாலும் வெறுத்தாலும் அவனிடம் அன்புகொள். அத்தகைய அன்பு நாளடைவில் நீ அறிந்தோ அறியாமலோ உன் உள்ளத்தில் உதித்துவிடும். அத்தகைய நிலைமையில் உங்கள் இருவர்க்கும் சம்பந்தம் ஏற்பட்டு விட்டது.

இனி, 'தாயோ டறுசுவைபோம்' என்ற ஒருமுதுமொழி நீ கேட்டிருப்பாயே. அதன் பொருள் என்ன ? தாய் செய்யும் உணவு பீமபாகத்தையும் நளபாகத்தையும் தோற்கடித்து விடுமா ? தாயை மிஞ்சின சமையற்கார ரில்லையா ? இப்பொழுது நாம் மதுரை போகிறோம். திருச்சி செல்கிறோம். அங்கே ஒரு பிராமணன் சாப்பாட்டு விடுதியிலோ, மராட்டியன் கடையிலோ ' சாப்பிட்டு விட்டு, "'ஆஹா! இன்றைக்கு தேவாமிர்தமே சாப்பிட்டாற்போல் இருக்கிறது! என்ன ருசி என்ன ருசி !" என்று நாக்கைச் சொட்டிச் சொட்டிக் கொண்டாடுகிறோமே! இதைக்காட்டிலும் ருசியாகவா ஒவ்வொருவருக்கும் அவர் தாய் சமைத்துப்படைக்கின்றனள்? ஆம், என்று சொன்னால் யார் ஒப்புவார்? இல்லை இல்லை. இல்லவேயில்லை. ஆனால் தாயிடத்து வேறெந்தச் சாப்பாட்டு விடுதியிலும், வேறெந்த லோகங்களிலும் வாங்கமுடியாத ஒரு அன்பு இருக்கிறது. இது தான் அவ்வுணவுக்கு ருசியில்லாவிட்டாலும் சத்து அளிப்பது.

அவள், தன். பிள்ளையின் பக்கத்திலிருந்துகொண்டு, அவன் உண்டதறிந்து, உணவு தெவிட்டாதபடி சிறிது சிறிதாகப் படைத்து, தன் பிள்ளை சதை பிடிக்கவேண்டும் என்ற ஆழ்ந்த ஆசையோடு ஊட்டுகின்றாள். அவனுக்கு இதமானது இது என்று கண்டு, அதை நன்றாய்ப் பாகம்பண்ணி, வேண்டாம் வேண்டாம் என்று சொல்லச் சொல்ல, பேச்சினிடையில் அறியாமல் மிகச் சாப்பிடும்படி செய்துவிடுகின்றாள். ஒருவேளை அப்பிள்ளை வயிறார உண்ணவில்லையென்று கண்டால், வேறொன்றுசெய்து, எத்தனையோ வசை மொழிகளையும் ஏற்றுக்கொண்டு அவனுக்கு அதை ஊட்டி உறக்காட்டும்வரை அவளுக்குத் தூக்கம் பிடிப்பதில்லையென்றால் அவள்



உபசாரப் பெருமையை விளக்குவதற்கு வேறு என்ன சொல்ல வேண்டும்?

இதை நோக்கியே,

"ஒப்பொடு முகமலர்ந்தே உபசரித் துண்மைபேசி
உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே யமிர்தமாகும்."

என்று அனுபவிகளும் சொல்லுகின்றனர். ஆதலின், தாயைப்போல் உன் நாதனுக்கு, ருசியானது சமைத்து, அன்போடு அதிகம் ஊட்டி அவனைக் களிப்பில் இறுமாப்படையச் செய்வாயாக.

சகோதரீ, இங்கே நீ கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் ஒன்று உண்டு. சிலபெண்கள் தம் கணவர் வீடு தேடி வந்து, சாப்பிட இலை முன் உட்கார்ந்ததும், பத்து வருஷத்துப் பஞ்சமெல்லாம்கூறி, அவனுக்குச் சாதம் இறங்காமல் செய்து விடுகின்றனர். "நெல்காரன் ரூபாய்க்கு வந்து போனான், பால்காரிக்கு மூன்றரை ரூபா யாயிற்று. நாளைக்கு அரிசியில்லை, புளி இன்னும் நாலுநாளைக்குக் காணுமோ என்னவோ; தட்டான் இன்னும் தாலிக்கொடிக்கு நாலு பவுன் வேண்டுமென்கிறான்" என்று இடிமேல் இடி இடித்தாற்போல அடுக்கிவிடுகின்றனர். ஐயோ பாவம், என்செய்வார் ! விசாரம் தலைக்கேறிவிடுகின்றது. சாதம் வாய்க்குள் செல்லவில்லை. தண்ணீரைத் தண்ணீரைக் குடித்துவிட்டு மனம் புழுங்கி எழுந்திருந்து கை கழுவுகின்றார். பின் அப்பாட ! என்று திண்ணையில் சாய்ந்து எண்ணுவதெல்லாம் எண்ணி அலுத்து, சிறிது கண்ணயர்ந்து விடுகின்றார். எழுந்ததும் பழையபசி, புதிய கவலையோடு வெளியே போகின்றார். இது தானா உபசாரம் ! இதுதானா நாயகனுக்கு ஆறுதல் தேறுதல் சொல்லும் முறை ? இதுதானா இவர்கள் நகைக் குறையெல்லாம் சொல்ல ஏற்ற சமையம் !

தங்கையே, இப்படியெல்லாம் உன் நாயகனைத் துன்புறுத்தாதே. அவர் உண்டு இளைப்பாறிச் சந்தோஷமாயிருக்கும்பொழுது மெதுவாக, குசேலரிடம் அவர் மனைவியார் எடுத்துக் கூறியதுபோல, இதவசனங்களால் அவர் திடுக்கிடாதபடி முறையிட்டு, அக்குறைகளை நிவர்த்திபண்ண வழிதேடு.

இனி உன் நாதனுக்கு நீ வேலைக்காரிபோலப் பணிவிடைசெய்து அவரைக் களையாற்றுதல் வேண்டும். இது சொன்னவுடனே, தற்காலப் படிப்பிலே தலையிட்டுத் தற்கால நாகரீகம் பெரிதெனக் கொண்டாடும் மாந்தர் எல்லோரும் ஒரேபிடியாக "சீ இதென்ன கோட்பாடு இது! ஆணும் பெண்ணும் ஒருவர்க்கு ஒருவர் இன்றியமையாதவரே. ஏன் ஆணுக்குப் பெண் ஊழியம் செய்தல்வேண்டும்? சமத்துவம் அல்லவோ அறிவுள்ளவர் காட்டவேண்டும். இதென்ன பாரபக்ஷமான வழக்கு" என்று, சகோதரியே, உனக்கு ஏற்றுப் பேசுவதுபோல இத சத்துருவாக உன்னைக் கெடுக்க முயல்கின்றனர். இவர்கள் பேச்சுக்குக் காது கொடாதே.

ஏன்? காரணம் கேள். சொல்வோம். சமத்துவம் என்பது, எதிலே? எப்பொழுது?

புருஷனுக்கு அவன் மனைவி உணவு சமைத்து இடுவது கூடாதா? அவனுக்காக நீரெடுத்தும், அவன் உண்டபின் தான் உண்டும், அவன் உறங்கியபின் தான் உறங்கியும், எழுமுன் தான் எழுந்தும், வீட்டுக் காரியங்களை யெல்லாம் அவன் சுகத்தையும் நயத்தையும் உத்தேசித்தே செய்தல் கூடாதா? இப்படிச் செய்தால் சமத்துவம் கெட்டுவிடும் என்று சொல்லும் இம் மேதாவிகள், அப்புருஷர், தம் மனைவிகளுக்காகப் படும்பாட்டையும், கெடும் கேட்டையும் சற்றும் கவனிக்கின்றாரில்லையே. ஐயோ, அவர் பணம் தேடும் வழியிலே எத்தனை சங்கடங்கள்! எத்தனை மானக்கேடுகள்! எவ்வளவு பிரயாசை!



ஒரு சமைய மில்லாவிடில் ஒரு சமையம், "சீ! இதென்னடா தொல்லை! இரவு இரண்டு மணியாகியும் விடுகின்றாரில்லையே! கண்ணிலே எண்ணெய் விட்டாற்போல இமை கொட்டாது விழித்து விழித்து இமைகளெல்லாம் அப்படி அப்படி நின்றுவிடும் போலிருக்கின்றதே. ஒரு நாளா இரண்டுநாளா! இதுதானா என் தலையில் எழுத்தாகவேண்டும்? இம்மனைவி மக்கள் இல்லாவிட்டால் எவ்வளவு சுகமாகக் கஷ்டமின்றி வாழ்ந்திருப்பேன். 'பெண்டாட்டி யில்லாதவன் பிறவிச் செல்வப்பிள்ளை' என்ற வாக்கு உண்மைதான்" என்று ஒருவர் மனம் வருந்துகின்றார்.

ஒருவர், மெய் பொய் என்ற விஷயங்களிலே சிறிது பழக்கமுள்ளவர்; "அடடா! என்ன பொய்? வாங்கின விலை ஒன்று; வாங்கினதாக இவர்கள் எழுதச்சொல்லும் விலை மற்றொன்று; இதற்குமேல் லாபம். பல நயமற்ற சரக்குகளும் சேர்த்துக் கட்டியிருக்கும் இம்மூட்டைகளை நயமானதென்று எழுதச்சொல்கிறார்களே! என்ன செய்வது! இப்பொய்க்கெல்லாம் தண்டனை யிருந்தால் நமக்காக எந்த எந்த நரகங்கள் வாய்திறந்து கொண்டிருக் கின்றனவோ? இதை விட்டு வேறு ஏதாவது அற்ப வரும்படியுள்ள ஓர் அலுவல் பார்க்கலாமென்றாலோ அவள் பணம் பணம், நகை நகை என்று அடித்துக்கொள்கிறாளே! ஈசா! நான் இருதலைக் கொள்ளி எறும்புபோல் தர்மத்தைப்பற்றிய பயத்தால் ஒரு [illegible] வாடவும், அவள் (மனைவி) ஓநாய் மனத்தைத் திரு [illegible] செய்யும் ஆசையால் ஒருபக்கம் வருந்தவும் ஏற்பட்டதே! [illegible] வழியில்லையா? கடைக்கணிக்கலாகாதா?" என்று பிரலாபிக்கின்றனர்.

இப்படி வியாபாரிகள் மட்டுமல்ல. கணக்கர்கள் மாத்திரமல்ல. எத்தனையோ பிரவிருத்திகள் செய்யும் மாந்தர் எல்

லாம் தம் மனைவியின் மனத்தைத் திருப்திசெய்ய எண்ணி, மிகக் கஷ்டப்பட்டு அலுக் கின்றனர். தமது சுகத்தை இழக் கின்றனர். அரும்பெருங் குணங்களை விற்கின்றனர். மானத் தை விற்கின்றனர். இனி, கடைசியாகத் தம்மையே விற்கின் றனர்.

இவ்வாறெல்லாம் கஷ்டப்பட்டு, அரசிகள்போல் வீட் டைவிட்டு வெளியேறாது வீற்றிருக்கும் தம்மனைவிகளுக்காகப் பாடுபடும் இப் புமான்களுக்கு, அலுத்துவந்த சமயத்தில் இத வசனம் மொழிந்து, வாடிக்களைத்த மேனியை நீராட்டிப் புலர்த்தி, பசித்த வயிற்றுக்கு அன்போடு அருகிருந்து நவநவ மான ருசியுள்ள பண்டங்கள் படைத்து அருத்தி, உண்டபின் அலுத்த ஆயாசம் தீர விசிறிக்கொண்டு வீசி, கைகால் தடவித் தூங்கவைத்து உபசரிப்பதும் மனைவியர்க்குக் கேவலமாகுமா? சமத்துவத்தை ஒழிக்குமா?

அடடா! இந்த நாட்டிலும் தம் புருஷருக்கு ருசியான உணவு வகைள் செய்து படைத்து அருத்தும் சமையல் தொழில் கேவலமென்றும், அதற்காக அன்னியர் ஒருவரைப் பணியாளாக அமைத்துக்கொள்ளவேண்டியது இன்றியமை யாததென்றும் நினைக்கும் படியான காலம் வந்துவிட்டதே!

செல்வத்திலே வெறித்துக்களிக்கும் சகோதரியே, இந்த உத்தமமான தொழிலை வேலைக்காரரிடம் ஒப்புவித்து விட்டு நீ என்ன செய்யப்போகிறாய்? உனக்கு எப்படிப் பொழுதுபோ கும்? நாயகனிடம் உனது அன்பைச் செயல்மூலமாகக் காட்டு வதற்கான சமயங்கள் எப்பொழுதோ?

ஓயாமல் படிக்கப்போகிறாயோ? அல்லது ஊரார்க்கு வேண்டிய இதங்களெல்லாம் பிரசங்கம் செய்யப்போகிறாயோ? வேண்டாம். அதற்கு எத்தனையோ புருஷர்கள் இருக்கிறார்



கள். உன் வீட்டில் உன் உபதேசப்படி நடந்து வருகிற தா? நீ சொல்லப் போகும் புத்தி மதிகள் உன்னிடத்தில் ஏற் பட்டு விட்டனவா?

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

சரி, உனக்கு ஒரு வேலையும் இல்லை. வேலைக்காரி வீடு தெளித்து மெழுகிச் சுத்தம் செய்கிறாள். தண்ணீர் வண்டி யில் வருகிறது. சமையல் வேலைக்காரிபக்கம். சாப்பிட்டு விட்டு வேலை வேண்டுமே, சும்மாயிருப்பாயா? முடியாது. சும் மாயிருப்பது தான் உலகத்திலே அரிது, அதற்காகத்தானே இத்தனைபாடும்! அதற்கும் நமக்கும் வெகுதூரம். ஆதலால் "சோம்பேறிக்கு மூதேவி தீங்கு செய்யக் கற்றுக்கொடுக் கிறது" என்ற நீதி போல, நீ நாலுவீட்டுக் கிழவிகளோடு சேர்ந்துகொண்டு "வம்பர் மஹாசபைக்கு" த்தலைமை வகித்து ஊர்க்கதை களெல்லாம் பேச ஆரம்பித்து விடுவாய். பிறகு உனக்கு நேரங்கிடைப்பது அருமையாய்ப்போய் ஊர்மணியமே மணியமாய் விடும்.

ஆதலால், வீணே அனுபவமில்லாதார் சமத்துவக் கோட் பாட்டைக் கைக்கொண்டு உன் நாதனைப் புறக்கணித்து நீ சிறு மையை அடையாதே. அவனே உன் தெய்வம் என்பதற்கு ஆதாரம் பின்னர்க் கூறுவேன்.

இதை யொட்டிக் கடைசியாக இன்னொன்றும் சொல்லி றேன். ஆண் பெண் சமமே. ஒருவர்க்கொருவர் என் யவேண்டும், என்று யாரோ அன்பற்ற அன்னியர்களுக் குள் நேரும் சம்பந்தத்தை, உனக்கும் உன் புருஷனுக்கும் இடையே கொண்டுவரும் இவர்களும் காதுகொடுப்பார்களாக.

சரி, நீயும் உன்புருஷனும் சமமானவரே; அவர் சம்பா திக்கிறார், நீ சமைத்துப் படைக்கிறாய்; அவர் உனக்காகப் பல

கஷ்டங்களும், மானநஷ்டமும் அடைகிறார். நீ அவரிடத்தில் உனது மதிப்பை இழந்து பணிப்பெண்போல நடக்கவேண்டுமென்கிறார்கள். இவையெல்லாம் எதற்கு? வேண்டாம். இச் சம்பந்தத்தை நிறுத்திவிடுவோம். இன்று முதல் நீயும் பாடுபடப் புறப்படு. இருவரும் சம்பாத்தியம் பண்ணுங்கள். இருவரும் நீரெடுத்துச் சமையுங்கள். இருவரும் குழந்தை குட்டிகளைத் தோளில் தூக்கிக்கொண்டு வேலைக் கூடத்திற்குக் கொண்டுபோய் வேலையும் செய்யுங்கள். உனக்காக அவர் ஏன் பாடுபடவேண்டும்? அவர்க்காக நீ ஏன் அடுப்பூத வேண்டும்? நிறுத்து.

தங்கையே, இதெல்லாம் நடவாது. சமத்வத்தைப்பற்றிய ஆழ்ந்த அறிவில்லார் கூற்று இது. இப்படி நடப்பவர் தாம் அறிவு நாகரீகம் இவற்றின் தாழ்ந்த படியிலேயுள்ள தெருப்பெருக்கும் குறவர். நமக்கு இது ஏற்காது. நாம் உயர்ந்து விட்டோம், நாம் வேலையைப் பங்கிட்டுச்செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் நேரம் கண்டு உயர்வதற்கு முயற்சி பண்ணலாம். அப்படிச்செய்வது தாழ்வாகாது.

அன்றியும், புருஷன் உன்னைச் சமத்வ நிலையில் வைக்காமலா இருக்கிறார்? நீங்கள் என்று நீ பேசுகிறாய் அவரை. அவர் உன்னை நீ என்று பேசுகிறார். இதைத் தவிர வேறெந்த விஷயங்களிலும் நீங்கள் சமானஸ்தரே, ஒரே நிலையிலுள்ளவரே; இன்பதுன்பமோ, சுகதுக்கமோ, எவற்றிலும் சரிபாதி அநுபவிப்பவரே. ஆனாலும், நீ அவரைக் கனம் பண்ணு. அவர் படும்பாடு பெரிதென்று நீயே யோசித்து அறிந்து, அவர்க்கு இனிய மொழிகள், ஏற்றபுத்தி முதலிய இவற்றையெல்லாம் ஆறுத லளி. வீணே ஒரு நாட்டு நாகரீகத்தை வெளிப்பகட்டாலே மயங்கி இன்னொரு நாட்டிலே



[illegible]லையிலே வைத்துச் சுமத்த வரும் இவருக்கு இடங்கொ[illegible] பழைமை போதும். அதில் எல்லாம் இருக்கிறது, அ[illegible]வ நல்லது.

இனி, சமத்துவபோதகருக்கு ஓர் வார்த்தை. ஐயா, சமத்வம் என்பதற்கு நீர் கொண்டிருக்கும் பொருள் என்ன? எல்லோரும் ஒன்றுபோல இருக்கவேண்டும் என்று ஆழ யோசியாமல் மேலெழுந்தவாறாகச் சொல்கின்றீரா? ஒன்றுபோல என்றால் ஒரே மாதிரி சரீர அமைப்போடா? உம்மையும், என்னையும், மரத்தையும், புழுவையும் பேதம் அறியாதபடி எல்லோரும் ஒரே மாதிரி உருவம் பெற்றா? இது நடக்குமா? இரண்டு என்ற புத்தி நமக்கு இருக்கும் வரை இப்பேதம் ஒழியவே ஒழியாது. இச் சம புத்தி வரவே வராது. பேதம் வேறுபாடு, வித்தியாசமே சிருஷ்டியின் ரகஸ்யம். இது இல்லையாயின் சிருஷ்டியில்லை. முடிவு வந்துவிடும்.

அன்றியும், மனைவி புருஷனுக்கு அடிமையென்று கூறவரும் உமக்கு, புருஷன் மனைவிக்கு அடிமையாயிருப்பது தெரியவில்லையா? அரசனுக்கு வேலைக்காரன் அடிமை, பணம் கொடுப்பதற்காக. வேலைக்காரனுக்கு அரசன் அடிமை, மேல் பிடிப்பதற்கும், சாதம் சமைப்பதற்கும், இன்னும் எத்தனையோ இன்றியமையாத விஷயங்களுக்கெல்லாம்; இதுபோலக் கூட இல்லை, மனைவிக்கும் புருஷனுக்கும் ஏற்பட்ட சம்பந்தம். இங்கே அரசனுக்கும் வேலைக்காரனுக்கும் அன்பு காரணமில்லை; பணம் காரணமாய் நிற்கின்றது. ஆனால் மனைவி கணவன் என்ற சம்பந்தத்திலே பணத்தைப்பற்றிய பேச்சே யில்லா[illegible] அன்பே அவர்களுக்குக் காரணமாகின்றது. எது நல[illegible] நினைக்கின்றீர். துணைவரே, அன்புதானே? அது [illegible] வாழ்வதாக!

இனி, கடைசியாக, தங்கையே, நீ உன்புருஷரது மானம், பெருமை, மணிமுடி; நீ அவரை ஆக்கினாலும் ஆக்கலாம்; அழித்தாலும் அழிக்கலாம்.

“ புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை ”

என்றபடி நீ அவருக்குப் புகழ்தரும் காரியங்கள் செய்தால் அவர் தம் எதிரியின் எதிரே தலை நிமிர்ந்து கூசாமல் நடப்பார். இல்லையோ, நீ ஏறுக்கு மாறு செய்பவளாயிருந்து அவரது பெருமையை அழிப்பதற்கான தீயவழிகளிலே இறங்கிவிட்டாலோ அவருக்குக் கதி வேறொன்று மில்லை. தலையிலே துணிபோட்டுக்கொண்டு கூசாமல் சந்நியாசியாக வேண்டியது தான்.

இவ் வொப்புயர்வற்ற விலையில்லா மாணிக்கம், ராக்ஷதர்களுக்கு உயிர் இருப்பதுபோல, உனது கற்பாக உன்னிடத்தில் இருப்பதினால் தான், உன்னை வீட்டுப் பெட்டியில் வைத்துச் சீராட்டிப் பாராட்டுவது. ஆதலின் அம்மாணிக்கத்தின் அருமை இன்னதென்று உணர். அதுவே உன் படிப்பு.

“ தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண் ”

என்ற இந்த லக்ஷணத்தை மறவாதே.

உன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்றால், உனதுசரீரத்தைக் கணவனுக்கு முந்தி நல்ல ஊண்உடையாலே காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று எண்ணிவிடாதே. உன்னை என்பது உனது கற்பை. அது இல்லையேல் நீ பிணம். ஆதலால் உனது கற்பை முதலில் காத்துக்கொள். உன் கணவர் என்ன செய்தாலும் நீ உன் மானத்தை விட்டுவிடாதே. அவர் அப்படிக் கெடுகிறாரே, நான் ஏன் கெடக் கூடாது என்று கெட்டு விடாதே. கெடுவதிலே தானோ போட்டி



போடவேண்டும்? அவர் கெட்டால் உன் கற்பின் கூட்டுறவாலே உன் வழிக்கு வருவார். உன் கற்புக்கு வசப்படாதது உலகில் ஒன்றுமில்லை. திரிமூர்த்திகளைக் குழந்தைகளாகச் செய்யவல்லது அக்கற்பு. அவர் கெட்டாலும் அவரை உன் கற்பு காலாக்கிரமத்திலே மாற்றிவிடும். ஆதலால் அதை என்றும் மறவாது காத்துக் கொள்வாயாக.

இனி, உன் நாயகனைக் காப்பாற்றுவதைப்பற்றி முன் சொல்லி யிருக்கிறோம். இனியும் சொல்வோம். அவற்றை உள்ளத்தில் கொண்டு ஆதரி.

மூன்றாவதாக, ‘தகைசான்ற சொல்’ லைக் காத்துக்கொள். நீ கற்புடையவளா யிருக்கலாம், புருஷனைப் பேணுபவளாயிருக்கலாம்; மனத்திலே பரிசுத்தம் உண்டு. புருஷனிடத்தில் அந்தரங்க விசுவாசமுண்டு. என்றாலும், உனது வெளிச்செயல்களாலே உன்மீது ஊரார் சந்தேகப்பட்டுத் தூற்ற இடங்கொடுத்து விடாதே. இதனால்தான் பழிச்சொல் வாராதபடி காப்பாற்றிக்கொள் என்று சொன்னார். “நான் மனம் வாக்குக் காயம் என்ற மூன்றிலும் தூய்மையானவள்; என்னைப் பிறர் சந்தேகிப்பதால் எனக்காவது என் நாயகனுக்காவது என்ன கேடு” என்று நீ கேட்கலாம்.

கேடு உண்டு, கவனி. உன் நாயகன் உன்னைப்பற்றிச் சந்தேகிக்காதபடி அவ்வளவு செம்மையாக உன் குணத்தைக் கண்டறிந்தாலும், பிறர் சொல்லும் வார்த்தை சந்தேகத்தைக் கிளப்பிவிடும். எப்பொழுது நம்பிக்கையில்லையோ, சந்தேகம் வந்துவிட்டதோ, அப்பொழுது அவர் பாடு திண்டாட்டம் ஆய்விடும். அவர் மனம் மிகத் தவிக்கும். உன் உத்தம நாதனைப் பற்றி ஊரார் பழிச்சொல் சொல்லும்பொழுது, எத்தனை முறை அவர் சத்தியம் பண்ணியும் நீ நம்பாமல் இருந்திருப்

பாய் என்பதை இங்கே கொஞ்சம் யோசித்துப் பார். இனி ஊரார் பழிச்சொல் கூறாதபடி உனக்கும், உன் நாதனுக்கும் பெருமை தரும்படி நடந்துகொள். இப்படி, உன்னைப்பேணி, உன்னைக் கொண்டானைப்பேணி, பழிச்சொல் வராதபடியும் பேணும் வல்லமை உனக்கே யிருப்பதனால்தான் பெரியோர் "பேணுபவள்", "காப்பாற்றுபவள்" என்று அர்த்தமுள்ள பெண் என்ற வார்த்தையை உனக்குப் பேராய் அமைத்தனர்.

அம்மா, உன் பெருமை சொல்லிமுடியாதது. நீ இல்லாவிட்டால் மனிதருக்குள் ஒழுங்கேயில்லை, தானமில்லை, தவமில்லை, துறந்தோரில்லை, தூயோரில்லை. ஆதலால் உன் நிலையை எண்ணி அதற்கேற்ற படியில் உன்னை நிறுத்திக் கொள்வாயாக.

## 3. வீடு.

அம்மா, நீ இப்பொழுது ஒருவருக்கு மனைவி ஆய்விட்டாய். ஒருவர் வீட்டுக்கு நீ இன்று முதல் எஜமாட்டி. ஆயின், அவ்வீட்டு லக்ஷணங்களெல்லாம் நீ தெரிந்திருக்க வேண்டுமல்லவா? அவை என்னவென்று பார்ப்போம்.

இங்கே வீட்டுலக்ஷணம் என்றால் இத்தனை அடி நீளமும் இத்தனை அடி அகலமும் என்பதல்ல. அது இன்ன உருவத்தது என்பதுமல்ல. இவையும் முக்கியமானவைதாம். ஆயின் இவற்றினும் முக்கியமான சில அம்சங்களைப்பற்றியே இங்கே பேசுவோம்.

முதலாவதாக வீடு என்பது "கோடையிலே இளைப்பாறிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தரு".

எப்படி? உனது நாதன் வயிற்றுக்கு உணவு தேடும் நிமித்தம் எங்கெல்லாமோ சென்று என்னென்ன வேலைகளோ செய்து, எவ்வளவோ கஷ்டங்களெல்லாம் பட்டு அலுத்து வரு



கின்றார். அவர் உழைப்பு என்ற வெயிலிலே ஓயாது நடமாடி, எங்கப்பா விழுவது! என்று உடல் மெலிந்து மனம்வாடி வீடு புகுகின்றார். அவர் தம் சரீரம், மனம் என்ற இவற்றின் சத்தையெல்லாம் உழைப்பிலே செலவு செய்துவிட்டுச் சாரமற்ற சக்கையாக மீண்டு வந்திருக்கிறார். உலகத்திலே பிழைப்புக்காக நடக்கும் போட்டிப்போரிலே தலையிட்டு வெற்றி கிடைத்தால் உத்ஸாகவெறியால் அப்போரில் படும் உதைகளெல்லாம் மறந்தும், தோல்வி கிடைத்தால் மொழிக்கு மொழி அடிபட்டவன்போலத் துன்ப மிகுதியால் சரீரத்தையே தூக்கிக்கொண்டு வருபவனையொப்ப அல்லாடிக்கொண்டும் வருகின்றார்.

அவருக்கு இவ்வீடு எப்படி இருந்தால் ஆறுதலளிக்கும்? அவர் வீடு புகுந்ததும் இதுவரை உண்டான சரீர அலுப்பெல்லாம் தீரவேண்டும். அயர்ந்து இரவெல்லாம் தன்னை மறந்து நித்திரை செய்த ஒருவன், எப்படிப் புதுபலத்தோடு எழுந்து பழையபடி வேலைக்கு ஆயாசமின்றி உத்ஸாகமாகச் செல்கின்றானோ, அப்படியே அவரும் வெளியே செல்லவேண்டும். தன் எண்ணங்களும் உத்தேசங்களும் பலிக்காததாலே கிழத்தன்மையை அடைந்த ஒரு மனிதனைப்போல வீடு புகுந்த அவர் இப்பொழுதுதான் யௌவன தசைக்கு வந்துகொண்டிருக்கும் ஒரு வாலிபன்போல புது உத்ஸாகத்தோடும் புது நம்பிக்கையோடும் வெளியே போகவேண்டும். இதற்கு ஏற்ற அமிர்தம் இவ்வீட்டிலேதான் இருக்கிறது. அது என்ன என்பாயோ? அது உன் முக மலர்ச்சியும், இன்சொல்லும், பழியில்லாத பல உபசாரங்களுமே யாம்.

தங்கையே, உன் நாதன் வீடுநோக்கி வரும் சமயம் அறிந்து, அதற்கு முன்ன[illegible]ல், உண்டி பாகஞ் செய்தல் முதலிய[illegible]களெல்லாம் முடித்துவிட்டு, அவர்

வரும் வழிநோக்கிக் காத்துக்கொண்டிருக்க வேண்டும். தூரத்திலே வரும் உன்நாதன் உன் முகமலர்ச்சி கண்டு, கன்றைத் தேடிவரும் காராம் பசு போலச் சற்று வேகமாகவே அடியிட்டு வருதல்வேண்டும். உன் முகத்தில் லக்ஷ்மி தாண்டவமாடி, வரும் உன் ஆளனைத் தன்வசப்படுத்தல் வேண்டும். இம் முக மலர்ச்சியால் அவர் முக்கால் பங்கு அலுப்பும் மனவருத்தமும் நீங்கப்பெற்று வீடு புகுவார். அப்பொழுது உன் குமுதவாய் விண்டு "ஏன் இவ்வளவுநேரம்? இன்று நெடுநேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறேனே! என்ன முக வாட்டம்? ஸ்நானம் செய்து சாப்பிடுங்கள், வருவது வருமன்றோ? பெருமான் நமக்கு அப்படி யாதொரு குறையும் செய்யார். நமது குறுகிய அறிவுக்குக் கஷ்டமாகவே தோற்றிய போதிலும் அது நமது நலத்துக்காகவே இருக்கும். எல்லாம் ஒரு நன்மைக்கே! எல்லாம் அவன் செயலே". என்ற இரண்டொரு உபசார வார்த்தைகள் தேனென அவர் காதில் பெய்து, அவர் அலுப்பும் ஆயாசமும் முற்றிலும் மாற்றிப், பின் கிரமப்படி செய்யவேண்டிய ஸ்நானத்திற்குப் பணிப்பெண் போலவும், பானத்திற்கு தாய்போலவுமிருந்து, ஊட்டி உபசாரம் செய்தல் வேண்டும்.

அது முடிந்ததும் உண்ட இளைப்புத்தீரச் சற்று படு நாதனுக்கு அருகிருந்து, நீ படித்த இரண்டொரு உ மளிக்கும் கதைகளைச்சொல்லி, அவற்றின் உட்பொருளை அவர் உனக்குச் சொல்லக்கேட்டு நீ அறிவிலும் அவர் இன்பத்திலும்உயர அவரைத் தன்னைமறந்து தூங்கச்செய். இப்படியெல்லாம் அவருக்கு ஆறுதல் செய்யும் இடமாக உன்னையும் வீட்டையும் ஆக்கிக்கொண்டாலே உங்கள் வாழ்க்கை இன்பமயமாம்; கோடைகாலத்திலே வெயிலில் அலைந்துதிரிந்து வந்தவனுக்கு, எதிரே தளிர்த்துக் கிளைத்துப் படர்ந்த ஆலவிருக்ஷத்



தின் குளிர்ந்த நிழலாம். பின் எழுந்துபோகும் பொழுது, "ஐயோ, இவ்வீட்டை விட்டுப் பிரியவும் வேண்டுமோ?" என்று அவர் எண்ணி வருந்தும்படி அத்தனை உபசாரக் களஞ்சியமாயிருத்தல்வேண்டும்.

இதைவிட்டு. சிலர் நாயகன் வீட்டிற்குள் வந்து 'தண்ணீர் கொண்டுவா' என்று சொன்ன பின்னரும் தாம் ஏதோ அடுப்புவேலை பார்த்துக்கொண்டு, "நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்" என்றோ, அல்லது அதற்கும் மனமிரங்காது மௌனமாகவோ இருந்து விடுகின்றனர். இதுமட்டுமா? சிலர் முகத்திலே கோபதாபங்களெல்லாம் கூட்டிவைத்துக்கொண்டு, தம்மைப் பார்த்த அளவிலே அவர் வெளியே ஓடிவிடும்படியான அந்த நிலைமையில் இருக்கின்றனர்! இது மிகப் பரிதாபம்! இவ்வேலையில் வெளியே அலுத்தல்லவா வீட்டிற்கு வந்தார். இங்கும் அப்படியானால் இனி எங்கேபோவார்? அலுப்புமேல் அலுப்புத்தானோ இவ்வம்மையைக் கைப்பிடித்ததற்குப் பலன்? சுகமில்லையா? சந்தோஷமில்லையா?

இது கூடாது. இது நாளடைவில் புருஷனுக்கு வீட்டின்மேல் வெறுப்பை விளைத்து, அலுப்பாற்ற வேறு இடம் பார்க்கத்தூண்டும். பின் உன் வாழ்வு திண்டாட்டமாம்.

ஆதலின், அலுத்துவந்தவருக்கு ஆறுதலளிக்கும் இல்லை உபசார மொழிகள், இனியவசனங்கள் ஒன்றும் இல்லையாக்கி உனக்கும் நாயகருக்கும் துன்பத்திற்கே இல்லாக்கி விடாதே.

இரண்டாவது, வீடு ஒரு தர்மாலயம்; அது ஒரு தர்மச்சாவடி. மனைவி மக்களை விட்டுப் பேரின்பம் நாடித் தம் ஆசைகளை ஒடுக்கி அப்பியாசம் செய்யும் துறவிகளுக்கும், அங்கக்குறையாலோ புத்திக் குறையாலோ வயிற்றுக்கு உணவின்றித் திண்டாடி வரும் ஏழைகளுக்கும், இறந்துபோன நமது

வம்சத்திலுள்ள பெரியோரை எண்ணிக்கொண்டாடும் கொண்டாட்டத்திற்கும் இதுவே ஏற்ற இடமாம்.

இதை எண்ணியே நமது பெரியோர் வந்த விருந்தினரை உபசரிப்பதற்கென்றே வீடு கட்டல் வேண்டும்; தனக்கென்று ஒருவன் வீடு கட்டுதலும் பாவமாம் என்று சொல்லியிருக்கின்றனர்.

இதெல்லாம் என்ன? இதன் பொருள் ஒன்றும் விளங்கவில்லையே. நாம் படாதபாடு பட்டுத் தேடின பணத்தையெல்லாம் சோம்பேரிகளுக்கும் மற்றையோர்க்கும் கொடுத்துவிட்டு நாம் என்னசெய்வது? இது தெரியாதார் சொல்லும் வசனம். இது ஆகாது என்று பலர் இப்பொழுது ஆலோசிக்கலாம்.

தர்மம் என்பதென்ன? அதனால் நமக்கென்ன லாபம்? அது நாம் வருந்தித்தேடிக் குவிக்கும் திரவியத்திலும் உயர்ந்ததா?

ஆம். உயர்ந்ததுதான். அதனால் நமது பாவங்களெல்லாம், தீக்குணங்களெல்லாம் குறைய, புண்ணியத்திலும் நற்குணத்திலும் விருத்தியடைந்து மனம் பரிசுத்தம் அடைகின்றது. அது நெடுநாளாக நகையிலும் உணவிலும் பொருளிலும் தடவித் தடவித் தேடிக் காணுதலுத்த ஆனந்தத்தை எளிதில் அளிக்கின்றது.

எப்படி? அம்மா, ஒருசிறு கதை கேள். ஒருவாறு அதன் உண்மை விளங்கும்.

ஒரு பிராமணர். வேறொரு துணையும் இல்லை. ஏகாங்கி. தினந்தோறும், தனது காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, தெருநடுவே வீட்டு வாசலுக்கு வராமல் ராம மந்திரத்தை ஆனந்தமாகப் பாடிக் களித்துக்கொண்டே போவார். ஜனங்கள் கை நிறைய அரிசி கொண்டு அவரிடம் சென்று அவர் வைத்தி



ருக்கும் பாத்திரத்தில் பயபக்தியோடு போட்டுவிட்டுத் திரும்புவர். அவரும் அதைக்கொண்டு பாகம் செய்து அதிதிகளுக்குப் படைத்து, மிஞ்சியதைத் தாம் உண்டு ராம பஜனை செய்துகொண்டிருப்பர். அவர் மனத்திலே உலக விஷயங்களைப் பற்றிய கவலையே யில்லை. அவ்வளவு பரிசுத்தர். உயிரை உடலிலே வைத்திருப்பதற்காக உபாதானம் எடுத்துண்பதும் ஓயாது ராமநாம ஜெபம் செய்வதுமே அவர் வேலை.

இப்படி இருக்கையில் ஒருநாள் ஒரு லோபியின் மனைவி இவரது பக்திப்பெருமையில் வசப்பட்டு, எப்படியும் இவருக்குப் பிடி அரிசி போட்டுவிடவேண்டும் என்று தன் மனத்திற்குள் நடந்த பெரும் போராட்டத்தின் கடைசியில் முடிவுக்கு வந்தாள். மறுநாள் அப்பாகவதர்வரும் வழியை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தாள். பிராமணர் வந்தார். ஆனால் அன்றைக்கு வழக்கப்படியில்லாமல் மிக அவசரமாகத் தெருவூடே போய்விட்டார். அநேகர் அரிசி போடுவதற்கில்லை. இவளோ, விடாப்பிடியாகப் பின்தொடர்ந்தாள். அவர் அவ்வீதியின் கடைசியிலுள்ள ஒரு ஓடை யருகே போய்ப் பாலத்தின் மேல் செம்பை வைத்துவிட்டு நீர் கழிக்கச் சென்றார். இச்சமயம் பார்த்து அம்மாது தன் பிடி அரிசியை, அச்செம்பில் போட்டுவிட்டுத் திரும்பி விட்டாள். பிராமணர் இதையறியார், வீட்டுக்குப்போய் வழக்கப்படி பாகஞ் செய்து மற்றவர்க்கும் படைத்துத் தானும் மிச்சத்தை உண்டார். ராமநாம பஜனம் நடந்தது. இரவு வரவே, தூங்கிவிட்டார். நடுச்சாமத்தில் எழுந்தார். நீர்கழிப்பதற்காக வெளியே போன பொழுது, ஒரு திண்ணையில் ஏதோ ஒருமுடிப்புத் தெரிந்தது. இத்தனை நாளும் வேறொன்றையும் கவனியாத இவர் இன்று அதென்னவென்று பார்ப்போம் என்று எண்ணினார். நெருங்கினார். தொட்டார்; பணப்பை. அப்படியா, நல்லது என்று அதை எடுத்தார்.

தாம் இருக்கும் இடத்தில் கொண்டுபோய்த் தலைமாட்டில் வைத்துக்கொள்வோமென்று எண்ணினார். அப்படியேசெய்து கொண்டார். இதுவரை ஆசை வசப்பட்ட இவர் மனம் இவரது நெடுநாள் பழக்கம் மேலிட, திடுக்கிட்டு, இதென்ன? என்று மில்லாத ஆசை நமக்குஇன்றுவந்ததே. பணம் நமக்கெதற்கு? இது பயனற்றது; ஈஸ்வர பக்திக்கு விரோதமானது என்று எத்தனையோ வகைகளில் விசாரித்துக் கண்ட நாம் இன்று, ஏது இம்மயக்கத்தில் விழுந்தது? காரணம் என்ன? தெரியவி ல்லையே என்று எண்ணுவதெல்லாம் எண்ணி விடிந்ததும் அவ் வூர் அரசனிடம் அது கிடைத்த வரலாற்றைச் சொல்லி ஒப்பு வித்துவிட்டுப் பழையபடி, தாம் உபாதானம் எடுக்கப் போனார். முதல்நாள் போலவே இன்றும் வேகமாகச் சென்று பாத்திரத்தின் மேல் செம்பை வைத்துவிட்டு ஜலபாதைக்கு ஒதுங்கினார்! அன்றைப்போலவே, அவ்வம்மையும் பிடியரிசி கொண்டுவந்து போட்டாள். நூதனமாக நெடுநாளாக இல்லாமல் இத்தனை சிரத்தையோடு இன்று நடந்த இச்செய்தியைக் கண்டதும் திடுக்கிட்டெழுந்து அம்மையே, ஏழையிடத்தில், ஏது இதுவரை இல்லாத அன்பு என்று உபசாரம்கூற, அவள் தான் நேற்றும் இம்மாதிரியே, அரிசியிட்டதாகவும் இனிவரும்பொழுது அவள் வீட்டின்முன் சிறிது மெதுவாகப் போகும்படியும் வேண்டிக்கொண்டு போய்விட்டாள். பார்த்தார் முகத்தை. விசாரித்தார் அவ்வம்மை வீட்டுச் சரிதத்தை. காரணம் கண்டுகொண்டார். அவ்வுத்தமியின் நாதன் பரம லோபியென்றும், அப் பணப் பேராசையால் எத்தனையோ ஏழைகள் தலையைத்தடவி வந்தனென்றும் கேள்விப்பட்டு, "சரி, இந்த லோபியின் அன்னம் ஒருபிடி இவ்வயிற்றில் விழுந்ததாலல்லவா அப்பண முடிப்பைக்கண்டதும் இச்சையுண்டாயிற்று," என்று கருதி



அன்றுமுதல் அவ்வம்மை யிருக்கும் திசையையே எட்டிப் பார்ப்பதில்லை யென்று உறுதி செய்துகொண்டார்.

ஆதலின், தங்கையே, தர்மம் செய்யும் ஒருவன், தர்மத் தோடு தனது பாபத்தையும் கொடுக்கிறான் என்று தெரிந்து கொள். கொடுப்பவன் என்றும் உயர்கிறான்; ஏற்பவன் என் றும் தாழ்கிறான்.

இதோ பார். ஒருவன் மற்றொருவனுக்கு இனாமாகச் சிறிது பணம் உதவுகிறான். இப்பணம் பெற்றதும், இதுவரை அவனுக்குக் கடமைப்படாதிருந்த இவன், இன்று அவனுக்குக் கடமைப்பட்டு அவனுக்காகத் தன் நடு நிலைமையை விட்டுக் கீழிறங்கவேண்டுதல் அவசியமாகின்றது. இன்று ஏற்றவன் ஈந்தவனுக்கு அடிமையாய் விட்டான். இதற்கு முன்னெல்லாம் அவனுக்காக இரங்கியாவது ஏற்றுவது பேசாமல், பக்ஷபாதக மின்றிப் பேசும் இவன், இன்று சிறிது யோசித்தல் வேண்டும்.

தங்கையே, உனக்கு ஒரு வெற்றிலைக்காரி இனாமாகச் சில தளிர்வெற்றிலை தந்தாள் என்று வைத்துக்கொள்வோம். மற்றவர்க்கு அவள் விற்க ஆரம்பிக்கும்பொழுது நீ அவளுக் காக 'வக்காலத்து' வாங்கிக்கொண்டு, அவளுக்கு லாபம் சம் பாதித்துக் கொடுக்க அவ்வியாபாரத்தில் தலையிட்டு, மற்றவர்க் கெல்லாம் நஷ்டமும் ஏற்படுத்தப் பின் வாங்கமாட்டாயல்லவா? கேவலமான ஒரு வெற்றிலை இப்பாடு படுத்துமாயின் பணம் முதலிய விலையுயர்ந்த பொருள்கள் ஒருவரை எவ்வ ளவு தூரம் தம் உயர்நிலையை விட்டுக் கீழே இறக்கும் என் பதை இப்பொழுது யோசித்துப் பார்.

துஷ்டர், திருடர், அயோக்கியர், வஞ்சகர் என்ற எவ ரிடத்திலிருந்து நாம் ஒன்று பெறினும், அவருக்காக அவர் குணங்களை யெல்லாம் சிறிது தாங்கிப் பேசவேண்டி

யது நேரிடுகின்றது. இதுவரை முற்றிலும் வெறுத்துவந்த
அக்குணங்களை, இன்று இலேசாக வெறுக்கவோ, இல்லையேல்
அவர் முகங் கோணிவிடும் என்று அஞ்சி ஏற்றுக் தலையாட்
டவோ செய்கிறோம். இதிலும் வேறென்ன கேடு நமக்கு
வேண்டும்? இப்படி, கொடுப்பவருக்காக வாங்குபவர்முதலிலே
சிறிது தாக்ஷண்யம் காட்டி அவர் கெட்ட குணங்களிலே பங்கு
பெறவோ நடு நிலைமையை விட்டுத் தவறவோ செய்கின்ற
னர். ஏற்றவர் பாடு இவ்வாறாக, ஈந்தவர் பாடு என்னவென்
று பார்ப்போம்.

முதலாவதாக, ஈந்தவர் தமக்கு எவ்விஷயத்துக்கும் ஏற்
றுப் பேச ஒரு தோழன் சம்பாதித்துக் கொண்டார். இதுவரை
தம்மைப் பற்றிக் குறை கூறிக் கொண்டிருந்த ஒருவனை இன்று
இக் கைக்கூலியால் வசப்படுத்திக் கொண்டார். இப்படி ஒரு
லாபம்.

இனி உள்ளத்திலே இருவருக்கும் நேரிடும் லாப நஷ்டத்
தைப் பார்ப்போம். ஏற்பவனுக்கு வாங்குவதற்குப் பழக்கம்
ஆரம்பித்திருக்கிறது. இனி ஒரு தடவை. பிறகு மான
மற்று இழிவு பூண்டு, பல்லைத்திறந்து யாரிடமும் கேட்கத்
துணிந்து விடுவான். கொடுப்பவர்க்கும் பழக்கம் ஏற்பட,
அவர் மனம் இரங்கி எவர்க்கும் கொடுக்க ஆரம்பிக்கிறார். இப்
படி, கொடுப்பவர் குணத்தில் உயரவும் ஏற்பவன் குணத்தில்
தாழவும் செய்கின்றனர்.

இதிலிருந்து நீ என்ன அறிகிறாய்? ஏற்பவர் அறியாமை
யாலே தம்மைத் தாழ்த்திக் கொடுப்பவரை உயர்த்துகின்றார்
அல்லவா? இப்படிச்செய்யும் இவர்க்குக் கொடுப்பது தகுந்த
துதானா? அவசியம்தானா? இன்றியமையாதது தானா?



இதனாலேயே பெரியோர் ஏற்பவரை ஈசுவர சமானமாக
எண்ணிச் சகல உபசாரங்களும் பயபக்தியோடு செய்யும்படி
நமக்கு ஆக்ஞாபித்திருக்கின்றனர்.

இன்னொன்று கேள். பட்டினி கிடந்த ஒருவனுக்கு வயி
றார உண்டி படைத்துப்பார். அதிலே உள்ளூர மனத்திலே ஆந
ந்தம் ஒன்று உதிக்கிறதென்று பெரியோர் சொல்கின்றனர்.
அது மெய்தானா என்று நீயே அநுபவத்தால் உணர்ந்து
கொள். பிறகு வேண்டாமென்று சொன்னாலும் செய்யா
திருக்க மாட்டாயல்லவா? ஆதலால் அதையும் ஒருமுறை
செய்துபார்.

ஊரார்க்கு உதவுவதே இவ்வளவு லாபத்துக்குக் காரண
மாயின் உற்றார்க்கும் உறவினர்க்கும் செய்வதைப்பற்றிச்
சொல்லவும் வேண்டுமா?

மூன்றாவதாக, வீடு ஒரு பள்ளிச்சாலை. சாதாரணமாக,
பள்ளிக்கூடங்களிலே யிருக்கும் உபாத்தியாயர் பிள்ளைக
ளோடு சில மணிநேரங்களே சேர்ந்து படிப்பிக்கவோ, ஒழுக்
கத்துக்கு மாதிரிகாட்டவோ செய்கிறார். ஆனால், வீட்டிலே
யோ சதா அறுபது நாழிகையும் குழந்தைகளுக்குப் போதி
த்த வண்ணமாகவே இருக்க நேருகிறது. நீயும் உன் நாத
னும் புஸ்தகம் எடுத்துக் குழந்தைகளுக்குப் போதிப்பதில்லை.
[illegible] மிக எளிது. சொல்வது ஒன்றாயிருக்கலாம். செய்வது
[illegible]ச் செய்யலாம். பார், உபாத்தியாயர் பொய்யனாகவோ
குடி[illegible]ரனாகவோ வேறு, கெட்ட ஒழுக்கமுள்ளவனாகவோ
இருக்கலாம்; ஆனால் பள்ளிக்கூடத்திலே குழந்தைகளுக்கு
அத்தகைய கெட்ட பழக்கங்கள் கூடா என்பதற்கு நியாயங்
கள் சொல்லுவார்; அவற்றிலே தவறி வீழ்பவருக்கும் கண்
டனை தண்டனை செய்வர். ஆனால், உங்கள்வேலை இப்படிப்
பட்டதல்ல. நீயோ உன் நாதனோ என்னும் ஒவ்வொரு

எண்ணமும் பேசும் ஒவ்வொரு பேச்சும், செய்யும் ஒவ்வொரு செயலும் பள்ளிப் பிள்ளைகளாகிய உங்கள் குழந்தைகள் மனத்தில் அழுந்திப் பதிகின்றன. சில குழந்தைகளைப் பார்த்ததும் அவர்கள் பேச்சைக்கேட்டதும், தாய் தந்தையர் இத்தகையவர் என்று தீர்மானிப்பதற்கேற்ற நிழல்கள் போலத் தோன்றுகின்றாரல்லவா? கோபதாபத்தால் பற்கடித்துத் தன் நாயகனை வெருட்டும் நீலியின் குழந்தை, தன் விளையாட்டுத் தோழிடம் அப்பாவமெல்லாம் (பாவம்-அபிநயம்) காட்டுவதையும், பொம்மை கொஞ்சுவதுபோல நாணமின்றிக் குழந்தைகளின் முன்னிலையிலேயே கொஞ்சிப் பேசிக்கொள்ளும் தம்பதிகளுக்குப் பிள்ளைகளாயமைந்த "போனகிராப்" ஏக சந்தக் கிராஹிகள், அவ்வாறு கொஞ்சி விளையாடுவதையும் நீ பார்த்திருப்பாயே. இப்படிப் பலவகையிலும் தாய்தந்தையரின் குணப்பெருமையையோ, சிறுமையையோ கண்ணாடிபோலப் பிரதிபிம்பிக்கும் குழந்தைகள்—உன் பள்ளிப்பிள்ளைகள், கொஞ்ச நேரமல்ல உன்னோடிருப்பது; நாள் முழுதும், நிமிஷமேனும் பிரியாமல் இருக்கின்றனர். இப்பொழுது யோசித்துப்பார்; உன் வாத்திமைத் தொழிலின் அருமையை.

உங்கள் போதனாமுறை இவ்வாறாக, நீங்கள் படித்துக் கொள்ளவேண்டிய விஷயங்களைக் கவனிப்போம். உங்களுக்குப் புஸ்தகப் படிப்பே வேண்டியதில்லை. பொழுது போக்குக்காகக் கொள்ளலாமேயன்றி அதனால் யாதொரு பயனும் உங்களுக்கில்லை. ஆயிரம் புஸ்தகங்களைப் படித்து எல்லோர் மனத்தையும் கவரும்படி அழகாகப் பேசும் நாவன்மையிலும் ஒரு உண்மையை அப்பியசிப்பது மிக மேலானது. அது மனிதனைச் [illegible]பவனாகவும், அவ்வுண்மையைக் கண்கூடாகக் காண்பவனாகவும், பேசும் திறமமைந்த பொம்மைகளினின்று வேறானவனாகவும் செய்கின்றது. படிப்பது பெரிதாயின், விஷயங்களை மனத்திலே நிறைத்து வைப்பது பெரிதாயின், அவ்விஷயங்கள் நிறைந்த புஸ்தகங்களுக்கு எவ்வளவு பெருமை இருத்தல்வேண்டும்? அப்புஸ்தகங்கள் பல அடுக்கப்பெற்றிருக்கும் அலமாரிக்கு எவ்வளவு மதிப்பு ஏற்படவேண்டும்?



ஆதலின், படிப்புப் பெரிதன்று! விஷயங்களைத் தொகுத்து, புஸ்தகங்களை அடுக்கினாற்போலவும், பூமாலை தொடுத்தாற்போலவும் மணியும் பவளமும் கோத்தாற்போலவும், ஒழுங்காகவும் அழகாகவும் மனத்தைக் கவரும்படியாகவும், வைத்திருத்தல் படிப்பாகாது. புதுமுறையிலே வியாக்யானம் செய்தல் படிப்பாகாது. படித்தபடி நடந்து பழக்கத்திற்குக் கொண்டு வரல்வேண்டும். பொய்கூடாது என்பதற்குஇதுவரை சொல்லிவந்த காரணங்களும், திருஷ்டாந்தக் கதைகளும் இனிப் பயன்படா; நடந்து காட்டவேண்டும். இனிப் படித்ததற்குத் தக்கபடி நடக்கப் பழகவேண்டும். இதுதான் உங்கள் படிப்பு. இது எளிதல்ல. புஸ்தகத்தில் எழுத்துக் கூட்டுவதுபோல 'மடமட' என்று வேகமாய் ஓடாது. ஒரு கொள்கையை அப்பியாசத்திற்குக் கொண்டுவருவதற்குள்ளே சங்கடங்களெல்லாம் வந்து குவிந்துவிடும். ஆளைத் திகைக்கப்பண்ணும்; பலரையும் பகைக்கச்செய்யும். எத்த[illegible]யோ பாடு! என்றாலும் அதைத்தான் நீங்கள் செய்யவேண்டும். இதுதான் உங்கள் படிப்பு.

இப்படி ஒவ்வொரு குணங்களாக அப்பியசிப்பதற்கு வீடு தக்க ஆசிர்மமாம். காட்டிற்கு ஓடிப்போய்ப் பர்னசாலை (இலைக்குடில்) கட்டிக்கொண்டு வசிக்கும் முனிவர்களெல்லாம், இப்பொழுதே உங்களுக்கு ஒருவகையிலே சமானமாவர். ஆயின் உங்கள் பெருமை மிகமேம்பட்டது. பஞ்சாக்கினி மத்தியில் இருந்து தவம் செய்பவனைப்போல, ஆயிரம் கெட்ட சிந்தனைக

ளும், செயல்களும் பேச்சுகளும் கொண்டிருக்கும் மாந்தர் மந்தியிலிருந்து, நீங்கள் அச்சிந்தனை, அச்செயல் அப்பேச்சுக்களைப் பொருட்படுத்தா திருத்தல்வேண்டும்; சட்டைபண்ணு திருத்தல் வேண்டும்.

இது பெரிதோ? கெட்டவர் நடுவிலிருக்கப் பயந்து போய்த் தனியே காட்டில் மான் மரங்களுக்கிடையில் வசிப்பது பெரிதோ? இவ்வருமையை எண்ணியே, 'இல்லற மல்லது நல்லற மன்று' என்று ஒளவையாரும்.

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றில், புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ தெவன்?"

என்று திருவள்ளுவரும் கூறினர்.

ஆதலின், வீட்டுப் பள்ளிச் சாலைக்கு உபாத்தியாயரே, உமது கடமையைச் செவ்வையாய் நடத்துவீராக. தப்பித் தவறி, முகத்தை வலித்துப் பிறரைப் பழிக்கவோ, கெட்ட சொல் சொல்லவோ, கெடுநினைவு நினைக்கவோ செய்யாதீர். முத்திரையிட்டது போலக் குழந்தைகள் சித்தத்திலே பதிந்து செயலிலே வெளிப்பட்டுவிடும். பின் உமது மானம் போய் விடும். அந்தரங்கம் பகிரங்கமாய்விடும். ஜாக்கிரதை!

இனி, வீடு ஒரு சித்திரசாலை போன்றது. எப்படி? பல வர்ண மைகளும் எழுதுகோலும், திரைகளும் இன்னும் இவைபோன்ற சித்திரக்கருவிகளெல்லாம் இங்கே இருக்க வேண்டாம். ஆயின் சித்திரசாலைக்குள் புகுந்த ஒருவன், எப்படித் தன்னை மறந்து தன்வீடு, தொழில் என்ற எவற்றையும் மறந்து சித்திரங்களின் அழகைக் கண்டு களிப்பதிலேயே பிரமை கொண்டவன்போல மயங்கிக் கிடக்கிறானோ, அப்படியே உன்வீடு வந்தவர் சிறுஎண்ணங்கள் கொண்ட மனத்தைக் கட்டி உனது உயர்ந்த எண்ணங்களையே எண்ணும்படி செய்ய



வல்ல அழகுடையதா யிருத்தல் வேண்டும். அவ்வழகு கேவலமான இழிகுணங்களையும் காமவிகாரங்களையும் எழுப்பி, மனிதர் அறிவை மயக்கும் வேசையர் அழகுபோல இருத்தல் கூடாது. சித்திரம் எழுதுபவன் உள்ளத்தில் பூரண லக்ஷணங்களுள்ள சித்திரங்களைக் கண்டதும் என்னென்ன இன்ப உணர்ச்சிகள் உண்டாகுமோ, அவை உன் வீட்டிற் புகுந்த காமுகர்க்கும் உண்டாதல் வேண்டும். இதற்கென்ன செய்வாய்? காமுகர்க்குப் புத்தி வருத்தும் பெரியோர் நீதி வசனங்களை அங்கே எழுதித் தொங்க விடுவாயா? அல்லது தீயவர் படும்பாடுகளை விஸ்தரிக்கும் நரகவாதனைச் சித்திரங்களை சுவர்களில் கட்டித் தூக்குவாயா? வேண்டாம். இவற்றையெல்லாம் அவர்கள் திருந்தார்கள். இவற்றையெல்லாம் வீடு அழகு பெற்றுச் சித்திரசாலை யாகாது. இவை இவை செய்தல் வேண்டும்.

உன் வீட்டுச் சாமான்களை யெல்லாம் அவை அவை இருக்கவேண்டிய இடங்களில் இருக்கும்படி அழகாய் அமைக்க வேண்டும்.

சில வீடுகளிற்போல நீர்ப்பாண்டங்களையும் சமையற் பாண்டங்களையும், அடுக்குகளையும், விறகையும் ஓரிடத்தில் குவித்துப்பார்ப்பவர்க்கு அருவருப்புண்டாக்கல் கூடாது. இதிலே சுத்தமில்லை, அழகில்லை. ஆகாரம், நீர் என்ற இவைதாம் மாந்தர் சரீரத்துள் சென்று பலமும் அறிவும் அழகும் அளிப்[illegible] அவற்றிலே சுத்தமில்லை யாயின் இவர் சரீரத்தில் சுத்த[illegible]. அவற்றில் அழகில்லை யாயின் இவர் சரீரத்தில் அழகில்லை. ஆதலின் கூழாயிருப்பினும் பாங்காய்ச் சமைத்து, பாத்திரத்தைக் கண்டதும் உள்ளிருக்கும் அன்னம் மிக ருசியாயிருக்குமென்று எண்ணும்படி சுத்தமாய்ச் சுற்றிக் கழுவி, ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்த குறிகளிட்டு வைத்திருத்தல் வேண்டும்.

நீர்ப் பாண்டங்களோ நன்றாய்த் துலக்கப்பட்டுப் பார்ப்பவர் கண்ணைக் கவரும்படி அத்தனை சுத்தமாய்த் தெளிந்த நீர்-வடித்த ஜலம் நிறைந்திருத்தல் வேண்டும். உட்புறம் அடிக்கடி கழுவப்பெற்று, நீரிலுள்ள அழுக்குகள் படியப் பெறாது, வெளிப்புறம் போல் தெளிவாயும் சுத்தமாயும் இருத்தல் வேண்டும்.

வேறு, வீட்டிற்கு அவசியமான தட்டுமுட்டுகளெல்லாம் சுருக்கமாய், வந்த விருந்தினர்க்குப் பயனளிப்பதாய், அழகு காட்டிப் புத்தியை மயக்காது புத்திசொல்லிச் சன்மார்க்கத்தில் திருப்புபவையா யிருத்தல் வேண்டும். சுருங்கச் சொல்லில், பகட்டான சுத்தமின்றி உயர்ந்த உள்ளூறின சுத்தமும், வியாபாரம் செய்யும் கடைகள் போலப் பலசாமான்கள் அடுக்கப் பெறாமல் அவசியமான பாத்திரங்கள் அவற்றிற்கேற்ற இடங்களில் வைக்கப் பெற்று எளிமையும் காட்டத் தக்க ஓர் ஆலயம்போல் இருத்தல் வேண்டும்.

இப்படியின்றிச் சிலவீடுகளில் எதிரே பெரியதோர்நிலைக் கண்ணாடியும், சுற்றிச் சுவர்களி லெல்லாம் ராஜா ரவிவர்மாவால் எழுதப்பெற்ற விசுவாமித்திரர்-மேனகை, துஷ்யந்தன் சகுந்தலை, கீசகன்-விரதசாரிணி, சந்தனு-ஊர்வசி, கண்ணன்-கோபிகைகள், போன்ற காமவிகாரங்களை யெழுப்பும் பல படங்களும், நிலையிலோ அல்லது பிறர் பார்ப்பதற்கென்றே வாசலுக்கெதிரே வைத்துள்ள திறந்த அலமாரியிலோ அடுக்கப்பெற்ற சீதனமாக வந்த பல வெண்கலச் சாமான்களும், இப்படியே பல விலையுயர்ந்த ஆடைகள் விரித்துப் போடப்பெற்ற கொடிகளும் நிறைந்திருக்கின்றன. இதுவும் அழகுதான். ஆயின் இதன் நோக்கம் மிகக் கேவலமானது. பிறர் பார்த்துக் களிப்பதற்காகத் தன்னை அலங்கரித்துக் கொள்ளும் குணத்தினும் இழிவானது எதுவும் இல்லை. வேசியைப் பெரியோர்



நிந்திப்பது எதற்காக? தனக்காக அன்றிப் பிறர்க்காகத் தன்னை அலங்கரித்து, தன் குணத்தையெல்லாம் காட்டும் இக்காரணத்தால்தானே ?

சுத்தமும் அழகும், அவை சுத்தம் அழகு என்ற காரணங்களுக்காக இருத்தல் வேண்டுமேயன்றிப் பிறர் பார்க்க இருத்தல் கூடாது. ஆடம்பர எண்ணம் உள்ளவரே அடுத்த ஜென்மத்தில் வேசையராகப் பிறப்பவர்.

இனி, படங்களுக்கும் பாத்திரங்களுக்கும், நிலைக்கண்ணாடிக்கும் கொடிக்கும் வீட்டிலே இடங்கள் உண்டு. அவை எல்லார் கண்ணுக்கும் எதிரில் இல்லை.

ஒவ்வொரு வீட்டிலும் பிரத்தியேகமாகத் தனியே ஒரு படுக்கையறை இருத்தல் வேண்டும். இதிலே ஸ்திரீ புமான்கள் புகுந்ததும், உயர்ந்த காதலையும், வெளிப்பகட்டான அழகின்றி நல்ல தெய்விக அழகையும் விரிக்கக்கூடிய படங்களைத் தொங்கவிடவேண்டும்.

தற்காலத்திலே எல்லோரும் படங்கள் எழுதிவிடுகிறார்கள். சர்வகலாசாலைச் சங்கத்தார் புஸ்தகங்களை ஆதரிப்பது போல அப்படங்களையும் ஜனங்கள் வாங்கி ஆதரிக்கிறார்கள். அவற்றிலே அங்கங்களின் அமைப்பு ஏறுக்குமாறாய், தலைக்கேற்ற உடலும் உடலுக்கேற்ற கையும் கைக்கேற்ற காலும் காலுக்கேற்ற விரலும் இன்றிக் கோரமாய் இருக்கின்றன. நிதானமும் அங்கக்கணக்கும் அவற்றில் சிறிதும் இல்லை. இவற்றுடன் சில கோரரூபத்தோடு கூடி ஏற்கெனவே பயந்த மனத்தையுடைய பெண்களை இன்னும் பயமுறுத்துகின்றன.

இத்தகைய படங்களை முற்றிலும் விலக்கவேண்டும். இவற்றைப் பார்த்துப் பார்த்துப் பழகினதினாலேதான் தற்காலத்திலே அங்கங்களெல்லாம் அவற்றிற்கேற்றபடி அமை

யாமல் எங்கேனும் ஓர் குறையிருக்கும் அங்கவீனரான பிள்ளைகளே உலகத்தில் பல்குகின்றனர்.

தங்கையே, உனது மனத்தில் அழகில்லையாயின் உன் குழந்தைகளுக்கும் அழகில்லை யாய்விடும், குதிரைபோன்ற பல மிருகங்கள் குட்டிபோடுவதினின்றும் இதைத் தெளிவாய்க் காணலாம்.

ஆதலின் பூரண அழகமைந்த படங்களே அப்பள்ளியில் இருத்தல்வேண்டும். எக்காரணத்தையிட்டும் வேறெவரும் அவ்வறைக்குள் புகுதல் தகாது. அது மிகவும் சுத்தமாய் நல்ல காற்றோட்டமுள்ளதாய் உத்தமமான சித்திரக்காரரால் எழுதப்பெற்ற உயர்ந்த படங்கள் நிரம்பியதாய் இருத்தல் வேண்டும். நீயும் அங்கே அடிக்கடி போதல்கூடாது.

இவ்வாறே சமயலறையும் பிரத்தியேகமாய் அவசியமான சாமான்கள் நிரம்பியதாய் மனதிற்கு ரம்மியம் விளைப்பதாய் இருத்தல்வேண்டும்.

இனி உனது நாதரோடு சம்பாஷணை செய்யவரும் நேசரும், விருந்தினரும் தங்கியிருக்கத்தக்க ஒரு பொதுக்கூடம். இதிலே உலகத்துக் குழைத்த பரோபகாரிகள், சந்யாசிகள், அவதார புருஷர்கள், நாயன்மார்கள், இவர்கள் படம் தூக்கப்படவேண்டும். இவற்றைப் பார்த்தவர் மனத்தில் உயர்ந்த சிந்தனைகள் தம்மை அறியாமலே உதிக்கவேண்டும்.

தங்கையே, நீயும் உன் சித்தத்தை மிகப் புனிதமாய் வைத்துக்கொண்டு, வந்த எவரையும் வயதிற்குத் தக்கவாறு பெற்றோர், சகோதரர், பிள்ளை என்று எண்ணிப் பழகவேண்டும். உன் நாதனையன்றி மற்றவரையெல்லாம் இவ்வாறு நீ எண்ணிவந்த பழக்கத்தால், அவரும் நீ குடியிருக்கும் பதிவிரதாலயத்தில் புகுந்ததும் வேறு சம்பந்தங்களை



யெல்லாம் முற்றிலும் மறந்து உன்னைத் தாயாகவோ, சகோதரியாகவோ, குழந்தையாகவோ எண்ணி அன்பு பாராட்டவேண்டும். நீ என்ன நினைக்கிறாயோ அதுவே உனக்குத் திரும்பவரும். நீ எவரையும் நல்லவராக நினைத்தால் எவரும் உன்னையும் நல்லவராக நினைப்பார். வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினை விதைத்தவன் தினையறுப்பான் என்பதற்கு இதுதான் பொருள். ஆதலால் உன் நிலைமையைப் பற்றி நீ வெகு ஜாக்கிரதையா யிருத்தல்வேண்டும். இதனாலேதான் உன் வீடு மிகச் சுத்தமடைகின்றது. ஆதலின் இதை மறவாதே.

இப்பொழுது வீடு உன் உத்தேசத்துக்குத் தக்கவாறு அமைகின்றதென்று நீ நன்றாய் உணர்ந்தாய். உன் உள்ளத்திலே நல்லெண்ணங்களும், உன் சரீரத்திலே பகட்டான ஆபரணமோ உடையோயின்றி அவசியமானவையும், சுத்தம் நிறைந்தவையும் இருத்தல் வேண்டும். உன் நடை பிறர் பார்த்துக் கொண்டாடும்படி யின்றி உயர்ந்தோர், அறிவாளிகள் ஒழுக்கவான்கள் பார்த்து வணங்கத்தக்கதா யிருக்கவேண்டும். சுருக்கச் சொல்லில் சந்திரனது மோஹனமான அழகைப்போலின்றி சூரியனது கண்ணைக்கூசும்படி செய்யவல்ல அழகுபோலிருத்தல் வேண்டும். சந்திரனிலும் மிக அழகுடையது சூரியனல்லவா? ஆயினும் அதை அணுக எவரேனும் இச்சிப்பரா? அதுபோல உன்வீடு, நீ உனது செயல்கள் என்ற இவற்றின் அருகேவரும் எவரும் கெட்ட எண்ணங்களோடு நெருங்குவரேல் சுட்டுத் தஹிக்கவல்ல அழகாயிருத்தல் வேண்டும். இதுதான் உனது பதிவிரதாத் தன்மையின் முதல் லக்ஷணம். ஆதலின் உன் நடை உடை பாவனைகளைப்பற்றி மிகக் கவனமாயிருப்பாயாக.

இனி, வீடு ஓர் தேவாலயம் போன்றது. எப்படி படுப்பதற்கும் சமைப்பதற்கும் சாமான் தட்டுமுட்டுகள் வைப்பதற்கும் பிரத்தியேகமான இடங்கள் ஏற்படுத்திக்கொள்கிறோமோ அது போலச் சித்த சுத்திக்காகச் செய்யும் தெய்வ வணக்கத்துக்கும் ஓர் தனியறை இருத்தல் வேண்டும். வேறெது இருந்தாலும் இல்லாவிடினும் இது மிக அவசியமாய் இருத்தல் வேண்டும்.

இதிலே ராமபிரான், கிருஷ்ணமூர்த்தி, சிவபெருமான், சுப்பிரமணியர், உமை, லக்ஷ்மி, ஸரஸ்வதி, நாயன்மார் என்ற இவர்களின் படங்கள்-உத்தமமான ஓவியர்கள் எழுதியவை நிறைந்திருத்தல் வேண்டும். வேறெவ்வகைப்படமும் அங்கே இருத்தல் கூடாது. இதனை அடிக்கடி திறந்து எவரும் உள்ளே நுழைதல் கூடாது. அதிகாலையில் நீ எழுந்து ஸ்நானம் செய்து பரிசுத்தமான வஸ்திரம்தரித்து உன் நாதனுக்கும் அவ்வண்ணமே செய்வித்துக் குழந்தைகளுக்கும் பல்துலக்கிக் கால் முகம் கழுவி எல்லோருமாகச் சாம்பிராணி தூபத்தோடும் நல்லெண்ணத்தோடும் சக்ரவர்த்தி முன்செல்லும் பணியாளனைப் போல பயபக்தியோடும் உள்ளே நுழைதல் வேண்டும். அங்கே புகுந்ததும் நிசப்தமாக அப்பெருமான்களுக்குக் கற்பூரதீபம் காட்டி எல்லோரும் தரையில் உட்கார்ந்து அவரவர்க்கு இஷ்டமான தேவதையை நெஞ்சத்தில் இருத்தித் தாய் தந்தையர்கள்முன் தம் குறைதனை முறையிட்டுக்கொள்ளும் குழந்தைகள்[illegible] அகங்காரத்தையும் வெட்கத்தையும்விட்டுக் கண்மூடி பெ[illegible]மாய் முறையிட்டுக் கொள்ளவேண்டும். இப்படிக் கண்ணீ[illegible] ததும்பச் சுமார் கால்மணிநேரமாவது இருந்த இருப்பிலிருந்து தியானம் செய்தபின்னரே எழுந்து பழையபடி கற்பூரதீபம்காட்டி வெளிவந்து அவ்வறையைப் பூட்டிவிடவேண்டும். இப்படி ஈஸ்வர ஆராதனம் செய்த பின்னரே ஒவ்வொருவரும் தத்



தம் காரியத்துக்குச் செல்லவேண்டும். இப்படி மாலையிலும் ஒரு முறை. இதில் முக்கியமான அம்சம் என்னவென்றால் அவ்வறைக்குட் செல்லும் பொழுதும் இருக்கும் பொழுதும் எவ்வித கெட்ட சிந்தனைகளும் அணுகாதபடி செய்துகொள்ளல் வேண்டும். இச்சிந்தனைகளே அவ்வறையைக் கோவிலாக்குவது; பரிசுத்தம் செய்வது.

இப்படிப் பழைய புராணிகர் சொல்வதுபோல அதைச் செய்ய வேண்டும்; இதைச் செய்யவேண்டும் என்று கட்டாயம் செய்கிறீரே! ஏன் இப்படியெல்லாம் செய்யவேண்டும்? காரணம் உண்டா? என்று கேட்பாயாயின் சொல்கிறேன்.

தங்கையே! நீ கலியாண வீட்டிற்கு எப்பொழுதேனும் போயிருப்பாயல்லவா? அங்கே உன் மனதில் என்னென்ன எண்ணங்கள் தோன்றின? உன் செயல் எவ்வாறாயிருந்தது? என்பதைச் சற்று யோசித்துப்பார். புறப்படும்பொழுது வீட்டுவேலையில் அலுத்தோ, மாமியார் செய்த கண்டனை தண்டனையில் வருந்தி மனம் சலித்தோ, சம்மதமின்றிப் புறப்பட்டாய். அங்கு சென்றதும் இவ்வலுப்பும் இம்மனவாட்டமும் மெதுவாய் உன்னை யறியாது நழுவிவிட, கலியாணக் கொண்டாட்டத்தில் நீயும் கலந்து சந்தோஷிக்கிறாய். உன்னையொத்த பெண்களோடு கூடிப் பாடுகிறாய், ஆடுகிறாய், களிக்கிறாய். இப்படி உன்னை முற்றிலும் மாற்றினது எது? அக் கலியாண வீடுதானே! அவ்வீட்டிலுள்ளார் மனக்களிப்பும் ஆட்டமும் பாட்டுமன்றோ உன்னையும் அவ்வாறு செய்யும்படி தூண்டின.

இது போகட்டும். ஒரு துக்க வீட்டுக்கு நீ போகிறாய் என்று வைத்துக்கொள். அந்த வீட்டார் உனக்குப் பந்துக்களல்ல. அன்னியர் என்றாலும் ஒப்புக்காக அங்குபோன நீ

அத்துக்கத்தில் வசப்பட்டு அழுது பிரலாபிக்க ஆரம்பித்துவிடுகிறாய். அடக்குவாயாயினும் உள்ளூற மனமெல்லாம் துக்கத்தால் நிறைந்து கண்வழியாக நீராகத் துக்கம் வெளிப்பட ஆரம்பிக்கின்றது.

இதேன் இப்படி? கலியாண வீட்டில் மனத்தில் உற்சாகமும் துக்கவீட்டில் சோகமும் உண்டாகக் காரணம் என்ன? நன்றாய் யோசித்துப்பார். கலியாண வீட்டிலே எல்லோரும் சந்தோஷத்தில் களித்துக்கொண்டிருந்தனர். துக்கவீட்டில் எல்லோரும் துக்கத்தில் மூழ்கிக்கொண்டிருந்தனர். அங்கே சந்தோஷ எண்ணங்கள் அலையலையாகப் பறந்து வந்தவர் சித்தங்களையெல்லாம் அமிழ்த்தி வேறெவற்றையும் மறந்து சந்தோஷம் கொள்ளச் செய்தது. இங்கே துக்கவீட்டிலே மனமாறத் துக்கத்தில் அழுந்திய வீட்டார் சித்தஎண்ணங்கள் ஆகாயத்திலே மேகங்கள்போலக் காத்துக்கொண்டிருக்கின்றன. அவை வந்தவரை மூடிச் சோகப்படும்படி செய்துவிடுகின்றன. இப்படியே வலியுள்ளவன் மெலிந்தவனைச் சரீரபலத்தா லடக்கித் தன்வசப்படுத்திக்கொள்வதுபோல வலியுள்ளஎண்ணமும் மற்றவர் எண்ணத்தை அடக்கிச் சந்தோஷத்தையும் சோகத்தையும் தருகின்றது. இதனாலேயே தீயாரைக் காண்பது, அவர் சொல் கேட்பது, அவருடன் பேசுவது, அவரை எண்ணுவது முதலிய சகலமும் தீது என்றும் நல்லாரைக் காணல் கேட்டல் பேசல் எண்ணல் முதலிய சகலமும் நன்மையென்றும் பெரியோர் முறையிட்டிருக்கின்றனர்.

சகோதரீ, என் நீ நல்லெண்ணங்கள் எண்ணவேண்டுமென்பதும், வீட்டில் நல்லெண்ணங்களை வெளியிடும் படங்களைத் தொங்கவிடவேண்டுமென்பதும் தெய்வ வணக்கத்திற்குப் பிரத்தியேகமான அறை இருக்கவேண்டுமென்பதும் அவ்வறைகளுக்குட் புகும்பொழுது நீ கொள்ளவேண்டிய எண்ண



ங்கள் இவை யென்பதும் இப்பொழுது நன்றாய்த் தெரிகிறதா?.

நன்மையும் தீமையும் கெட்ட இச்சையும் பயபக்தியும் உன் உத்தேசப்படியே, உன் சித்தப்படியே என்பது இப்பொழுதேனும் நன்றாய்த் தெரிகிறதா? ஆதலின், எண்ணங்களில் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பாயாக. பூஜை வீட்டுக்குக் கெட்ட இச்சைகளோடு செல்லாதே. தீய சிந்தனைகளை உண்டுபண்ணும் படங்களை அங்கே தூக்காதே.

இப்படிச் சாமி வீடு நமக்கு அடிக்கடி தெய்வத்தை ஞாபகமூட்டி நமது குறைகளையெல்லாம் நிறைவேற்றி, நமது சித்தத்தைச் சுத்தப்படுத்தி எம்பெருமானை எழுந்தருளப்பண்ணத்தக்க ஆலயமாய், பிறப்பிறப்புக்களென்னும் துக்கத்தினின்று விடுவித்து அழிவற்ற இன்பமாகிய பேரின்பத்தையும் தருவதாலேயே அதற்கு "மோக்ஷம்" "விடுபடுதல்" என்ற அர்த்தமுள்ள வீடு என்ற பெயரைப் பெரியோர் பெயராய் அமைத்தனர்.

ஆதலின் பெரியோர் கருத்தையுணர்ந்து நீ குடியிருக்கும் வீட்டை நாயகர்க்கோ, விருந்தினர்க்கோ, சுற்றத்தார்க்கோ கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த குளிர்தருவாகவும், ஏழைகளுக்குத் தர்மாலயமாகவும் உங்களுக்கு மோக்ஷ வீடாகவும் ஆக்கிப் பேரின்பம் அடைவாயாக.

## 4. கற்பு.

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

'தெய்வத்தைத் தொழவேண்டாம். நாயகனே தெய்வமென்று எவள் தொழுகிறாளோ அவள் சொன்னபடி மேகங்களும் கேட்டு மழை பொழியும்' என்பது இதன் கருத்து.

இதை நமது நாட்டார் சொன்னதும் மேல் நாட்டு நாகரிகத்திலே ஆழ்ந்தழுந்திய சிலர் "அடாடாடா! இதென்ன புத்தியற்ற செய்கை. மனிதனைக் கடவுளாக எண்ணலாமா? புருஷனைத் தெய்வமாக நினைப்பது எத்தனை பாவமாகும். கடவுளை இது இழிவு படுத்துவதோடு, அவர் உபதேசங்களுக்கு முற்றிலும் மாறானது. வேறு எதை ஒப்புக்கொண்டாலும் இதை ஒப்புக்கொள்ளலாகாது. பெரும்பாவம்! மஹாபாவம்! இதைக் காதாலே கேட்பதும் தவறு" என்று கூறுகின்றனர்.

இவர்கள் சொல்வது எவ்வாறு நியாயமாகும்! இயேசு கிறிஸ்துவும் அவர் சிஷ்யர்களும் மனிதர்கள் தானே. மனித சரீரம் பெற்றிருந்தவர்கள் தானே. அவர்களெல்லாம் இவர்கள் கண்ணுக்குத் தென்படாத ஏதோ ஓர் ஆவி ரூபங்கள் அல்லரே. அவர்களை வணங்குவது நியாயமாகும். புருஷனை வணங்குவதுமட்டும் கூடாது! என்று எவ்வாறு கூறலாம்? இயேசு கிறிஸ்து "உனக்கு நோய் தீரவேண்டும். கண் வெளிச்சமாகவேண்டும். கால் முடம் நீங்கவேண்டும். மோக்ஷம் சித்திக்கவேண்டும்" என்ற எண்ணமிருக்குமேல் அப்படியாகும் என்ற நம்பிக்கை உனக்குப் பூர்ணமாயிருத்தல் வேண்டும். அப்பொழுதே என்னால் கூடும் என்று சொல்லிவிட்டாரே. இது ஏதனாலேயோ! நம்பிக்கை இருந்தவர்க்கு மட்டுமே இவர் அருள் முடிந்தது. ஏனோ! முடம் தீர்ந்துவிடும். மோக்ஷம் கிட்டும் என்ற நம்பிக்கை முடத்தைத் தீர்த்து மோக்ஷத்தை அளிக்கவல்லதாயின், "கடுகளவு விஸ்வாசம் மலையைக் கடலில் விழும்படி செய்யுமாயின்" மனைவி தன் நாயகனைத் தெய்வமாய் எண்ணுவதால் ஏன் தன் காரியங்களும் எண்ணங்களும் நிறைவேறப்பெற்று மழையைப் பொழியும்படி செய்யவல்லவளாகாள்?



எத்தனை அவதார புருஷர்கள், தேவகுமாரர்கள் உலகத்துக்கு எழுந்தருளி 'ஜனங்களுக்கு ஞானோபதேசம் செய்தபோதிலும் முக்தியையோ அல்லது தாம் வேண்டிய வேறு தேவ போகங்களையோ பெறுதற்கு ஒவ்வொருவரும்' தாமே பாடுபடவேண்டும். ஒருவர் நம்பிக்கை மற்றவர்க்குப் பலன் தராதல்லவா? ஒருவர் விசுவாசம் ஒருவருக்கு முக்தியளிக்காது. தருமாயின் கருணாகரமாய் எழுந்தருளிய புத்தர் போன்ற மஹான்களாலெல்லாம் இவ்வுலகம் சிரடையவில்லையே. ஏன்? எக்காரணத்தாலே?

ஆதலால் ஒவ்வொருவரும் தமது சித்தசுத்திக்குத் தக்கவாறு பலன் பெறுகின்றாரென்பது வெளிப்படை.

ஸ்ரீ ராமபிரானைத் தெய்வமாகக் கொள்ளும் ஒருவன் அவரது குண வைபவங்களிலே ஈடுபட்டு, அப்பெருமானை எவ்வழியிலும் முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றத் தயாராகின்றான். ஏக பத்னிவிரதனாய், பிதுர்வாக்ய பரிபாலனாய், நல்லவர்க்கு வந்த ஆபத்தைத் தனதாகக் கொண்டு அவற்றை நிவிர்த்திபண்ண மிகப் பாடுபடுபவனாய் அமைகின்றான். இக்குணங்கள் அவனிடத்தில் அமையவே, ராமனைப்போன்ற உருவமும் ராமனைப்போன்ற வல்லமையும் உண்டாகி, ராமனேயாகின்றான். இப்படியே ஒவ்வொரு மூர்த்தியையும் இஷ்டதேவதையாகப் பூஜிப்பவர் எவரும் பேறு பெறுகின்றனர்.

இங்கே ஒன்று ஞாபகம் வருகின்றது. சிலர் நெற்றியில் குறிகளிட்டுக்கொண்டு தாம் சைவரென்றும், வைணவரென்றும், குறியேயிடாது கிறிஸ்தவரென்றும் தம்மைச் சொல்லிக்கொண்டு மற்ற மதவாதிகளைக் கண்டிக்கவும் வருகின்றனர். ஏன்? இக்குறிகள் மாத்திரத்தாலேயே இவர்கள் அம்மதஸ்தர்களாய்விட்டார்களோ?

ஒரு சாதாரண மனிதனுடைய நேசத்தையோ கிருபையையோ பெற எண்ணும் ஒருவன், அவன் மனத்திற்கிசைந்தது செய்ய முயலுகின்றான். அவன் செய்வது செய்து அவன் நேசத்தைப் பெறுகின்றான். இதுவல்லவோ அவர் நேசத்தைப் பெறுவதற்கு உண்மையான ஒரே வழி. வேறொன்றாலும் அவன் அருள் கிட்டாதே. ஆயின் சைவன் என்று தன்னைப் பெருமைப் படுத்திக்கொள்ளும் ஒருவன், சிவபெருமானது துறவையன்றோ கைக்கொண்டு ஆசைகளைச் சுட்டுச் சாம்பலாக்கி அணிதல்வேண்டும்! அதுவன்றோ அவனைச் சைவனாகச் செய்யும்? விஷ்ணுவை உபாசிக்கும் ஒருவன் அப்பெருமான்போலக் காத்தல் தொழிலைச் சிரசாலேற்று, ஜீவகோடிகளுக்கெல்லாம் இதத்தைச் செய்து தனது அகண்டாகார வடிவத்தை எங்கும் காணல்வேண்டும். அந்தோ! அப்பெருமான் ஜீவர்களை ஆண்டனுக்கிரகிக்கும் பொருட்டு, பல தடவை மானிடசரீரத்தை எடுத்துக்கொண்டுவந்து படாத சங்கடங்களெல்லாம் பட்டும் தம் பக்தர்க்கு வழிகாட்டுகின்றனரென்றால் அவரது கருணைப் பிரவாஹத்தை என்னவென்று வர்ணிப்பது? இங்ஙனமே இயேசுகிறிஸ்துவை உபாசிக்கும் ஒவ்வொருவனும் அவ்வருளாளர்போலப் பிறர்க்காகத் தம் ரத்தத்தைச் சிந்தவும் சிலுவையென்னும் முட்கழுவில் அறையப்படவும் இடும்பைக்குக் கொள்கலமாகவும் தயாராயிருக்க வேண்டாமா? இதுவன்றோ உபாசனா மார்க்கம்? இதைவிட்டுக்குறிகளிட்டோ இடாமலோ தன்னை ஒரு பெரிய மதத்தன், உபாசகன் என்று சொல்லிக்கொண்டு மற்றவரைத் தூஷிப்பதில் யாது பயன்?

இன்னும் கேள். தங்கையே நீ கண்ணப்பர் சரிதம் கேட்டிருக்கின்றாயா? கொலைத்தொழில் புரியும் வேடர்



வேட்டைக்காகக் காட்டுக்குச் சென்றார். அங்கே ஓர் கற்சிலை இருந்தது. சிவலிங்கத்தைக் கண்டதும் அவர் மனம் முழுதும் அதனிடத்திலே பற்றிவிட்டது. வீட்டையும் வேட்டையையும் பற்றிய ஞாபகம் முற்றிலும் நீங்கி அதற்கு வாயில் நீரெடுத்து அபிஷேகம் பண்ணுவதிலும் தலையில் பூக்கொணர்ந்து அர்ச்சனை செய்வதிலும், வேட்டையாடிப் பாகம் பண்ணின மாம்சத்துண்டுகளை மென்று ருசிபார்த்து ஊட்டுவதிலுமே காலம் கழிந்தது. இப்படியிருக்கும்பொழுது ஒருநாள் அவ்விக்ரகத்தின் ஒரு கண்ணினின்று ரத்தம் வடியக்கண்டு மனம் தாளாது வேடர் வைத்திய முறைப்படி, அம்பால் தன் கண்ணைக் கோலி, அக்கண்ணிருந்த விடத்தில் வைத்து அகம் மகிழ்ந்தார். ஆனால் அந்தோ! அவரது பூரணபக்தியையும் எம்பெருமான் வெளிப்படுத்த விரும்பி, மற்றொரு கண்ணும் ரத்தம் கொட்ட, அவ்வப்பன் உடனே "என்பெலாம் நெக்குடைய ரோமம் சிலிர்ப்ப உடல், இளகமன தழலின் மெழுகாய், இடையறா துருகவரு மழைபோலிறங்கியே இருவிழிகள் நீரிறைப்ப" அழுது பிரலாபித்து, பின் தமது வைத்திய முறையை யெண்ணிப் பேரானந்தம் கொண்டு "அரும்பொன்னே, மணியே, என் அன்பே, என் அன்பான அறிவே, என் அறிவில் ஊறும் ஆனந்தவெள்ளமே" என்று குதித்துத் தனது ஒரு செருப்புக்காலால், ரத்தமோடும் கண்ணருகில் இடம் தெரியும்படி மிதித்துக்கொண்டு அம்பினால் மற்றொரு கண்ணை எடுக்கவே எம்பெருமான், தமது பக்தர்க்குத் தூணென்றும் துரும்பென்றும் பாராது வெளிப்பட்டருளும் கருணாலயமாகையால் அச்சிவலிங்கத்தினின்றும் தோன்றி உடனே அவர் கையைப் பிடித்துக்கொண்டு "அப்பா! என் கண்ணப்பா! வேண்டாம். அக்கண் அப்படியேயிருக்க. மற்றொரு கண்ணும் கொடுத்தேன்" என்று அருளி அவரை ஆண்டார்.

இங்ஙனம், கல்லென்றும், புல்லென்றும், கட்டையென்றும் பாராது அருளும் பெருமான் உயர்ந்த பிறவியெனக் கொண்டாடப்பெற்ற மானிடசரீரத்தில், மாதர்க்குத் தம் புருஷனிடத்தில் வெளிப்பட்டு அவளை அருளுதல் கூடாதா? அது அவர்க்கு இழிவாகுமா? அல்லது கல்லிலும் கட்டையிலும் தாம் வேண்டிய ஈஸ்வர அம்சங்களை வெளிப்படுத்தும் இவர்கள் நம்பிக்கை, தமது அருமையான நாயகனிடத்தில் மாட்டேனென்று எதிர்த்து வாய்பேசுமோ?

இதெல்லாம் நம்பிக்கையில்லாதார், உண்மை யறியாதார் கூற்று. நாயகனிடத்துப் பக்திபூண்டு அவன் அறிவற்ற மூடனாயினும், அழகற்ற விகார ரூபியாயினும், தொழுநோயால் ஒவ்வொரு அங்கமாக அழுகிவிழும் மகாபாவியாயினும், அவனைத் தெய்வமாகக் கொள்ளும் நாயகி, அவன் மூலமாக ஈஸ்வரனை வெளிப்படுத்த வல்லவள். சூரிய சந்திரர்களின் தினகதியையும் மாற்றத்தக்கவள். ஒரே பரம்பொருள் அவரவர் எண்ணியவாறு வெளிப்பட்டு அவரை ஆளும் சக்தியுள்ளதென்று கொள்ளும் ஆஸ்திகபுத்தியுடைய நாம், நாயகி எண்ணியவாறு புருஷனிடத்தில் புருஷரூபமாய் வெளிப்படமாட்டாதென்று ஏன் அப்பெருமானது சக்தியைக் கட்டுப்படுத்துகின்றோமோ தெரியவில்லை.

மேலும் ஒருமுகப்பட்ட மனத்தின் பெருமையை இவ்வளவென்று கணிக்க இயலுமா?

வானஜோதிகளின் உண்மையை அறியவேண்டுமென்று அறிய விரும்பிய ஜோதிஷன், தன் மனத்தை ஒருமுகப்படுத்தி அவற்றின் ரகஸ்யங்களை அறிந்து விடுகின்றான். ஒரு கணக்கைச் செய்து தீரவேண்டுமென்று ஆசைகொண்ட கணக்காளி, மூச்சும் விடாமல், பக்கத்தில் நடப்பதின்னதென்று



கண்ணாலும் காதாலும் அறியாமல் கருத்தை ஒரு வழிப்படுத்தி அக்கணக்கைச் செய்து முடித்துவிட்டுப் பின் பெருமூச்சுவிடுகின்றான். நீயும் உன் நாயகனுக்கு ருசியான உணவு பாகஞ்செய்ய எண்ணினால், வேறு எதையும் மறந்து அதிலேயே மனத்தை ஒரு வழிப்படுத்தவேண்டியிருக்கிறது. இல்லையேல் உப்பு இரண்டு தடவை போட்டுக் கைப்பாக்கியோ, புளியே போடாமல் மறந்து ருசியில்லாது பண்ணியோ ஆபாசப்படுத்தி விடுகின்றாய்.

இவ்வாறு லேசான வெளிக்காரியங்கள் மட்டுமல்ல; மனத்தையும், ஆத்மாவையும் பற்றிய அந்தரங்க காரியங்களும் மனம் ஒருப்பட்டால் தம் உண்மையை விளக்கி, தாம் எண்ணியதை ஆக்குகின்றன.

தமயந்திக்கு நளன் கிடைத்ததும், சீதைக்கு ராமன் கிடைத்ததும் இவ்வோயாத ஒழியாத ஒருமுகப்பட்ட நினைப்பினால்தானே. ஒழுக்க மற்றவனாயிருக்கும் உன் நாதனும் நல்லவனாகவேண்டும் என்ற ஓயாத உன் சிந்தனையால் நல்லவனாவன் என்றால் அவ்வொருமுகமான மனத்தின் திறத்தை எவரே அறிவர்?

அன்றியும், காணாததோர் தெய்வத்துக்குக் கைங்கர்யம் (பணிவிடை) செய்வதும், அதைக் கொண்டாடிப் புகழ்வதும் மிகவும் அரிது. தற்காலத்தில் இக்காரணத்தை முன்னிட்டே அநேகர் கடவுளை வழிபடுதலின்றிச் சும்மாயிருப்பது, வீணே [illegible]ரயம் செய்வது; மெய்ப்புக்காக கோவில் போயினும் [illegible]த் தெய்வத்தை வழிபடல் இயலாதது. ஆனால் உன் காதன், உன்னை நல்ல வழியிலே செலுத்தத் துணையாயிருப்பவன், உனது பஞ்சேந்திரியங்களாலும் அநுபவிக்க ஏற்றவன், உன் தெய்வமாகப் பேசுபவனாயிருப்பின், நீ உனது குறைகளை அவனிடம் சொல்லி நிவிர்த்தி செய்துகொள்ளவோ, எந்நேர

ழும் மனதார வழிபட்டு உன்னை உயர்த்திக் கொள்ளவோ இயலும். இது பற்றியே உனக்குப் பிரத்தியக்ஷதெய்வமாக உன் நாயகனை வைத்தது. அன்றியும், உன்நாதன் பல சங்கடங்களும் பட்டுப் பணம் சம்பாதித்து உன் கையிற்கொடுத்து "நீ உன்னிஷ்டப்படி தர்மகாரியங்களிலே செலவிட்டு உன்னையும் என்னையும் உயர்த்துவாயாக" என்று உபதேசமும் செய்வானாயின், அவனை நீ தெய்வமென்று கொண்டாடக் கூடாதா? ஒரு சிரமுமின்றி, பணத்தை வைத்துக்கொண்டு உன்னிஷ்டப்படி நல்ல காரியங்களில் செலவிட்டுக்கொண்டு நன்மையுற உனக்கொரு தெய்வம்போல உதவும் அவனைக் காட்டிலும் உனக்கு இனியவர் யார் உண்டு? உயர்ந்தோர் யார்? உபகாரி யார்? அவனைத் தெய்வமென்று கொண்டாடுதல் உனக்குக் கேவல மாமா?

மேலும் இப்படி உனது நாதனுக்குப் பணிவிடைசெய்யும் இக்கடமையையே பெரிதென்று நீ கொண்டாயாயின் காட்டில்போய் மனத்தை ஒடுக்கிக் கஷ்டப்பட்டுத் தேடும் சந்நியாசியின் தேட்டத்தைப் பார்க்கினும் நீ உயர்ந்த சக்திகளும் பேறும் பெறுவாய். "கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா" என்ற ஒரு பெருமாட்டியின் வரலாறு கேட்டதில்லையா? சொல்லுகிறேன் கேள்.

ஒரு பால சந்நியாசி காட்டுக்குப் போய், தியானம் செய்து, பூசைபண்ணி, நெடுங்காலம் யோகமும் பழகினார். வருஷக் கணக்காகக் கடினமான தவஞ் செய்தபின் ஒருநாள் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது காய்ந்த சருகுகள் சில அவர் தலைமேல் விழுந்தன. பார்த்தார் மேலே. மரத்தில் ஒரு கொக்கு உட்கார்ந்து கொண்டிருந்தது. அவருக்குக் கோபம் பொங்கிவிட்டது. ஏறிட்டுப்பார்த்தார். உடனே அவர் கண்ணினின்று எழுந்த



[illegible]றி அப்பறவையை எரித்துவிட்டது. இது யோகிகளின் சக்தி. கோபமே வராத ஒருவனுக்குக் கோபம் வந்தால் அதைத் தாங்க முடியாது, எதிர்க்க முடியாது என்று ஜனங்கள் சொல்வதை நீ கேட்டிருப்பாயே. அன்றியும், நீர் போக்கு வழிகளை யெல்லாம் அடைத்து ஒரு குளத்தில் நீர் கட்டி நிறைந்தபின் ஒரு வழி திறந்தால் அதன் மூலமாக எவ்வளவு வேகமாய் ஜலம் போய்ப் பலன் தரும் என்பது நீ நன்றாய் அறிந்ததுதானே. அதுபோலத் தவம் செய்யும் ஒருவன் தன் ஆசைகளையும் கோபத்தையும் அடக்கி ஒரு சமையம் வெளிப்படுத்துவான். அது பெருங் கேட்டை விளைக்கும். இதையே சாபம் என்று சொல்வது. இப்படி அச் சந்யாசி சாபமிட்டதும் கொக்கு சாம்பராய்க் கீழே வீழ்ந்தது. பார்த்தார் சந்நியாசி. தமது தவம் பூரணம் அடைந்ததாக எண்ணி உடனே நாட்டிற்குப் புறப்பட்டு விட்டார். வந்தார் ஒரு வீட்டிற்கு. "அம்மா பிக்ஷை" என்று சொல்லிவிட்டு நெடுநேரம் வாயிலே காத்துக்கொண்டு நின்றார். "சற்றுப் பொறு மகனே" என்று உள்ளிருந்து மிகக் கம்பீரமான தொனியில் பதில் வந்தது. அவருக்குக் கோபம் பொங்கிவிட்டது. "எத்தனை துணிவு இவளுக்கு? என்னை, சற்றுப்பொறு என்று இவள் சொல்லிக் காக்கவைப்பதா? இவளுக்கு நமது மகிமை தெரியாதுபோலும். இருக்கட்டும் சொல்லுகிறேன்" என்று கோபாவசத்தராய் எண்ணிக்கொண்டிருக்கையில், மறுபடியும் "[illegible]தாய், உன்னைப்பற்றி மிகப் [illegible]மாதமாக எண்ணிச் [illegible]டையாதே! இங்கே கொக்குமில்லை, குருவியுமில்லை" என்று மிகச் சாந்தமான தொனியில் பதில் வந்தது. பார்த்தார் சந்நியாசி. திடுக்கிட்டார். அதிக ஆச்சரியமடைந்து அவ்வம்மை வரும் வரை நெடுநேரம் காத்துக்கொண்டுநின்று, வந்ததும் சாஷ்டாங்கமாகக் காலில் விழுந்து "அம்மையே

இது தங்களுக்கு எப்படித் தெரிந்தது? அருளல்வேண்டும்" என்று விண்ணப்பம் செய்துகொண்டார். அதற்கு "அவ்வம்மையார் மகனே, நான் உன் யோகமும் அறியேன், தவமும் அறியேன். நான் ஒரு சாதாரண ஸ்திரீ. என் நாதனுக்கு நோய். நான் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன். அதனால்தான் உன்னைக் காத்து நிற்கச்சொன்னது. என் ஜீவகாலமெல்லாம் என் அன்பர்க்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்ய என்னால் ஆனவரை பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். எனக்கு மணம் புரிவதற்குமுன் நான் தாய்வீட்டிலிருந்த அக்காலத்திலும் என் தாய் தந்தையர்க்கு ஏற்பட்ட கடமையை நிறைவேற்றிக்கொண்டுவந்தேன். இப்பொழுது நான் ஒரு புமானுக்கு மனைவியாயிருப்பதால் அப்பெருமானுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்துவருகின்றேன். இதுதான் நான் செய்யும் யோகம். ஆனால் எனக்கு ஏற்பட்ட கடமையை நான் செய்துகொண்டுவருவதால் எனக்கும் அறிவு உதயமாயிருக்கின்றது. தூரதிருஷ்டி முதலிய சக்திகளெல்லாம் எனக்குத் தாமாகவே ஏற்பட்டிருக்கின்றன. அதனாலேதான் நீ எண்ணிய எண்ணங்களை நான் அறிந்ததும் நீ காட்டில் செய்த காரியத்தை நான் கண்டதும். இன்னும் அதிகமாக நீ அறிய விரும்புவையேல் சமீபத்தில் ஒரு ஊர் இருக்கிறது. அதில் ஒரு வேடன் கசாப்புக்கடை வைத்துக்கொண்டிருக்கிறான். அவனைக்கேட்டுத் தெரிந்து கொள்வாய். மகனே, போய் வா. எனக்கு நேரமாகிறது" என்று சொல்லிவிட்டு அப்பதிவிரதா சிரோன்மணி தன் வீட்டுக் காரியங்களைப் பார்க்கப் போய்விட்டாள்.

தங்கையே, பதிவிரதா தர்மம் இதுதான். நாதருக்குச் செய்யவேண்டிய கடமைகளைக் குறைவறச் செய்யின் இத்தனை யோக சக்திகளும் தாமே மனைவிக்கு அமைகின்றன.



அவள் மேகத்தைப் பார்த்து "மேகமே, மழை பொழி" என்றால் மழை பொழியும் என்பது இப்பொழுதாவது உனக்கு நிச்சயம்தானா? பொய்க்கதை யில்லையே. நிஜமாக உன் கண்ணால் அச் சக்திகளை யெல்லாம் கண்டு அனுபவிக்க வேண்டுமாயின் நீயும் அத்தர்மத்தை அநுஷ்டித்து அப்பேறுகளைப் பெற்று உலகத்துக்கு உபகாரம் செய்து உத்தமியாய் இருப்பாயாக; இதுவே எனது வேண்டுகோள். இனி உனக்கு அக்கதையை முற்றிலும் அறியவேண்டுமென்று ஆசை உண்டாகிறதல்லவா? சொல்கிறேன் கேள். பிராமண சந்நியாசிக்கு இடிவிழுந்தது போலாயிற்று. இதென்ன உத்தமமான பிரசங்கம். இவ்வம்மையின் மகிமைதான் என்ன! என்று வியந்து கொண்டாடிக்கொண்டு, அவன் கொலைத் தொழில்செய்து ஜீவனம் செய்யும் கிராதகனா யிருந்தாலும் அத்தாய் உத்தரவுப்படி அவனைப் பார்த்துத் தீரவேண்டும். இல்லையேல் நமக்கு ஏதேனும் கேடுவரும் என்று பயந்துகொண்டே அவ்வூருக்குப் போய் அவ்வம்மைசொன்ன குறிப்படி மாம்ச வியாபாரம் பண்ணும் வேடனருகே செல்லக் கூசிக் கூசிப் போனார். அங்கே வேடனோ மாம்சம் அறுத்துக்கொண்டும், விற்றுக் கொண்டும் இருக்கிறான். பார்த்தார், அடாடா! ஈஸ்வரா! இவனா எனக்கு உபதேசம் செய்பவன்? இவன் பிசாசு உருவெடுத்தது போலிருக்கிறானே, என்று தனக்குள் எண்ணாததெல்லாம் எண்ணித் தயங்கிக்கொண்டு நிற்கையில் வேடன் ஏறிட்டுப் பார்த்தான்.

"ஸ்வாமி வாருங்கள்; அந்த அம்மாளா தங்களை அனுப்பினார்கள்? இதோ வந்துவிட்டேன். இப்படி யிருங்கள்" என்று ஓர் ஆசனத்தைக்காட்டி இருக்கச் செய்துவிட்டுப் பழையபடி தன் காரியத்தில் புகுந்தான். சந்நியாசிக்கு ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமும், அச்சத்தின்மேல் அச்சமும்

உண்டாய்விட்டன. என்றாலும் "இக்கிராதக னிடமிருந்தா வதேனும் உபதேசம் எனக்குக் கிட்டும்? அறிவு பிரகாச மடையும்?" என்று என்னவெல்லாமோ எண்ணிக்கொண்டு, ஆணைக்குப் பயந்து உட்கார்ந்திருந்தார். வேடனுக்கு வேலை முடிந்தது. "வாருங்கள் ஐயா, வீட்டுக்குப் போகலாம்" என்று கூட்டிக்கொண்டுபோய் முன் கூடத்தில் ஓர் ஆசனத்தில் இருத்திவிட்டுச் 'சற்றுப் பொறுங்கள்' என்று வீட்டுக்குள் நுழைந்தான்.

அவனுக்கு வயது சென்ற தாய் தந்தையர் இன்னும் இருக்கின்றனர். அவர்களுக்கு, ஸ்நானம் செய்துவைத்து ஆகாரம் அளித்து, வேறு இதமான உபசாரங்களெல்லாம், பணிவிடைகளெல்லாம் செய்து முடிந்ததும், சந்யாசி அருகே வந்து, "ஐயா, நீங்கள் என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்களே, தங்களுக்கு நான் என்ன செய்யவேண்டும்? என்னால் ஆனது என்ன" என்று மிகவும் உபசாரமாகக் கேட்டான்.

பின், சந்யாசி ஆத்மா, கடவுள் என்ற இவற்றைப் பற்றிச் சில சந்தேகங்கள் கேட்டார். வேடனும், தன் கையிலுள்ள பணத்தை, முதல் வள்ளல் எங்ஙனம் தட்டுத் தடங்கலின்றி இறைப்பானோ, அங்ஙனமே அநாயாஸமாக, சிறிதும் சந்தேகமின்றி அவ்விஷயங்களைப்பற்றி மடமடவென்று பிரசங்கமாரி பொழிந்தான்.

இதுவே இன்றைக்கும் மஹாபாரதத்திலே 'வியாத கீதை' என்று சொல்லப்படுவது. இதிலே வேதாந்தத்தின் அதி சூக்ஷ்மமான அம்சங்களெல்லாம் நிறைந்திருக்கின்றன.

இப்படி வேடன் பிரசங்கம் செய்து நிறுத்தியதும், சந்யாசிக்கு ஆச்சரியம் எல்லை கடந்துவிட்டது. திகைத்துப் போய், 'பெரியரே, ஏன் இத்தனை ஞானநுபவத்துடன் இந்த



சரீரத்தில் இருக்கிறீர்? இத்தகைய கேவலமான கொலைத் தொழில் செய்து ஜீவிக்கிறீர்" என்று கேட்டார். உடனே வேடன் பதில்கூற ஆரம்பித்து "ஐயா, எந்தக் கடமையும், எந்தத் தொழிலும் கேவலமானதன்று; எந்த தர்மமும் அசுத்தமானதன்று. என் பிறப்பு இப்படி என்னை இந்த நிலைமையில் இவ்வாறு செய்யும்படி ஆக்ஞாபித்திருக்கின்றது. என் இளமையிலே நான் இவ்வியாபாரம் கற்றுக்கொண்டேன். எனக்கு இதில் யாதொரு பற்றும் இல்லை. என் கடமையை என்னாலானவரை செம்மையாக நிறைவேற்றப் பிரயாசைப் பட்டுக்கொண்டிருக்கிறேன். நான் கிரஹஸ்தனுடைய இல்லற தர்மத்தைக் கைக்கொண்டிருக்கிறேன். என்னாலான மட்டும் என் தாய் தந்தையர்க்குச் செய்யவேண்டிய கடமையைக் குறைவறச் செய்துகொண்டு வருகிறேன். அவர்களைத் திருப்தி செய்யவேண்டு மென்பதே எனது லக்ஷ்யம்; அவர்களே என் தெய்வம்; உமது யோகம் நான் அறியேன்; உம்மைப் போலத் துறவியாகிக் காட்டிற்குப் போய் நான் தவம் பண்ணினதுமில்லை. என்றாலும், நீர் பார்த்தது கேட்டது எல்லாம், என் ஜாதிக்குத்தக்க கடமையைக் கிரமமாகப் பற்றின்றிச் செய்ததாலேயே நான் அறிந்தேன். இதுதான் என் வரலாறு" என்று சொல்லி முடித்தான்.

அம்மா, இப்பொழுது உனது தர்மத்தின் பெருமை தெரிகின்றதா? மாந்தர் தத்தமக் கேற்பட்ட கடமையைப் பற்றின்றிக் கடனென்றெண்ணிச் செய்வாராயின், பஞ்சேந்திரியங்களை யடக்கி மிகக் கொடுமையான தவம் செய்யும் யோகிகளென்ன, ஞானிகளென்ன, இவர்களின் சக்தி அவர்க்கும் வருகின்றதென்பதை நீ அறிகிறாயா? இப்பொழுதேனும், உனது கடமையை நீ செவ்வையாகச் செய்வாயாயின், 'மழை

உன் ஆக்கினைப்படி பெய்யும்' என்பது உண்மையாகத் தோன்
றுகிறதா ? ஆதலின் உனது பெருமையை உணர்ந்து, அதில்
நின்று, உத்தமமான உயர் பதவியை அடைவாயாக !

## 5. மாமன் மாமியர்க்குச் செய்யவேண்டிய கடமை.

அம்மா, நீ சிலகாலம் உன்னைப் பெற்று வளர்த்த பெரிய
ரைத் தாய்தந்தையர் என்றழைத்து, அவர் சொற்படி கேட்டு,
அவருக்கு இதமானவைகள் செய்து, பிறந்த வீட்டிலே ஒரு
வாறு உன்கடமையை நிவர்த்திசெய்து வந்தாய். பின் காதல்
என்னும் பேரன்பு உன் நாதன்மீது உதிக்க, அவரையே தெய்
வமென்று கொண்டு அவர் இருக்கும் இடம் ஒரு சிறுகுடிலாயி
னும், உன் தாய்தந்தையர் வசிக்கும் மாடமாளிகையும் விட்டு,
அவர் பின்வந்து அக்குடிலுக்கு எஜமானியாயும் இருக்கிறாய்.
அவரது நன்மை தீமை, சுகதுக்கம் இவற்றை உன் சொந்தமெ
ன்றுகொண்டு இப்பொழுது காலம்கழித்து வருகின்றாய். இப்
பொழுது உனக்கு உன் தாய்தந்தையரிடத்துள்ள அன்பெ
ல்லாம் உன் நாதரிடத்தில் உண்டான பேரன்பில் கரைந்து
பெயர் மாத்திரையாய் விட்டது. உன் நாயகனோடு வாழ்ந்து
களிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் உன் தாய்தந்தையரை முற்
றிலும் மறந்துவிட்டாய். நீ எஜமாட்டியாகி ஒரு வீட்டின்
காரியங்களை ஏற்றுக்கொண்டு அவற்றைக் குறைவறச் சீராய்
நடத்தும் இந்த அவசரத்தில் தாய் தந்தையர், சகோதரர்
என்ற சம்பந்தங்களை யெல்லாம் சிறிது நழுவவிட்டாய். உன்
மீது இது தவறென்று குறைகூற வரவில்லை. இது அன்பின்
இயல்பு. அன்பிற்கு இரண்டிடத்தில் பற்றும் திறன் இல்லை.
இப்படி உண்டாக வேண்டுமென்பதே உன் தாய்தந்தையரின்
நோக்கம். இதற்காகவே உனக்கு அவர் இதுவரை கற்பித்து



வந்த கல்வியும், செய்துவைத்த பழக்கமும். அவர்க்கு அது
சந்தோஷம்தான். உனக்கும் அது இயல்பே. அதற்காக
வருந்தாதே.

ஆனால் நீ சிறுபெண். இப்பொழுதுதான் புருஷனோடு
கூடிவாழ ஆரம்பித்து, உன் நாயகனிடத்து இயற்கையில்
உண்டான அன்பு காரணமாக வீட்டுக் காரியங்களை மேற்பார்
த்தும் வருகின்றாய். என்றாலும், உலக அநுபவம் உனக்குச்
சிறிதும் இல்லை. இன்ப துன்பத்தில் அடிபட்டு மனம் இன்
னும் தெளிவு பெறவில்லை. நன்மை தீமை கண்டு அதில்
தைரியம் பிறக்கவில்லை. ஆதலின், உனக்குத் தக்கதுணைகள்,
இயற்கையில் உன்னைப் பிள்ளையெனப் பாவித்து நடத்த
ஏற்ற தாய்தந்தையர் அவசியமான நிலைமையிலேயே இன்னும்
நீ இருக்கின்றாய். தனியே வீட்டில் இருக்க நேரினும் பயப்ப
டும் பருவத்திலேயே இன்னும் நீ இருந்துகொண்டிருக்கிறாய்.
இந்த நிலையில் உனக்கு ஒரு தாய், தந்தை இருந்தால் நல்லது
தானே. அவரும் உன் அன்பனுக்கு மிக நெருங்கியவ ராயின்
உனக்குப் பேராநந்தம் அல்லவா ?

உன் நாதனுக்கு உற்ற தோழராய்வரும் ஒருவரிடத்தில்
இயற்கையிலேயே உனக்குச் சகோதர வாஞ்சை யேற்பட,
அவரை அண்ணா என்று மனமாற அழைத்து, அவருக்கு உன்
நாயகன் சொற்படி வேண்டிய உபசாரம்செய்ய முந்துகின்றா
யல்லவா ? அப்படியிருக்கும் நீ, உன் அன்பன், உன் இன்னு
யிர் நாதன் என்ற உன்னுயிரை உனக்களித்த உன் மாமன்
மாமியரைத் தாய்தந்தையரென்று எண்ணி அவர்க்கு வேண்
டியன செய்து உபசாரம் செய்ய மனம் கோணமாட்டா யல்
லவா ? அவரை உன்தாய்தந்தையரினும் மேம்பட்ட தாய்தந்
தையரென்று நினைக்க உன்மனம் பின்வாங்காதல்லவா ?

தங்கையே, இனி அவரே உனக்குத் தாய்தந்தையர். அவரே உன்னைப் பெற்றெடுத்து வளர்த்த பெற்றாரினும் இனியர். ஆயின் அவர்க்குச் செய்யும் உபசாரங்களைப்பற்றி உனக்குச் சொல்லவேண்டியதில்லையே. உன் நாதன் அவர்களை ஆதரிப்பதைப் பற்றி உனக்கு அடிக்கடி ஞாபகமூட்ட அவசியமில்லையே? உன் தாய்தந்தையர்; உனக்குப் புருஷன் அளித்தவர்; அவரை நீ பரிபாலித்து உன் நாதனை மகிழச் செய்தாலும் சரி; அசட்டைபண்ணி உன் நாதனைத் துன்பத்தில் வீழ்த்தினாலும் சரி, எல்லாம் உன் பொறுப்பு.

ஆனால், உன் நாதனுக்குப் புகழ்ச்சிதரும் காரியங்களை நீ செய்யக் கடமைப்பட்டவள். அவரை ஊரார் முன் தலைநிமிர்ந்து நடக்கும்படி செய்யவல்ல மந்திரசக்தி உன்னிடத்திலேதான் உண்டு. அக்காரியங்களில் முதலாவது கற்பு; இரண்டாவது நாதனுக்குரிய பணிவிடை; மூன்றாவது உன்வெளிச் செயல்கள்; நான்காவதாக உன் மாமன் மாமியரைப் பேணி வழிபடல்.

சோம்பலாலோ அசட்டையாலோ நீ இது செய்யவில்லையாயின் ஊராரும், அறிஞரும் உன் நாதனைத் தூற்ற ஆரம்பித்துவிடுவர். உன் நாதனும் நீயும் சேர்ந்து செய்யும் வேறு எந்தத் தர்மகாரியங்களும் பயன்படமாட்டா. தன்னைப் பெற்ற தாயார் கிண்ணிப் பிச்சை எடுக்கிறாள்; 'தம்பி கும்பகோணத்திலே கோதானம் செய்கிறான்' என்று உன் நாதன் செய்யும் வேறெந்த தர்மத்தையும் ஊரார் பரிகசிப்பர். அப்படி அவர் கண்டிப்பதும் நியாயமே. ஏன்? உன் அன்பனைப் பெற்று, வளர்த்து, வாலிபனாக்கி, உனக்கு ஆளாகத் தந்த இவர்க்கே இப்பாடாயின் வேறெவர்க்கு நீ ஆறுதல் தேறுதல் சொல்லி அன்னமளிக்கப் போகிறாய்? நீ செய்யும் வேறு தர்மங்க



ளெல்லாம் ஆடம்பரத்துக்காக அன்றி, உள்ளூற உன்னை இருக்கவொட்டாமல் செய்யும் இரக்க சிந்தனையாலல்ல. இத்தகைய தர்மத்தாலே உங்களுக்கு யாதேனும் சுக முதிக்குமோ? சந்தோஷமுண்டோ? பலனுண்டா? இல்லவே யில்லை.

பார், ஊரார் தன்னை மதிக்கவேண்டுமென்றெண்ணி நாலு பேர் தன்னைச் சூழ்ந்திருக்கும்பொழுது ஒருவன் யாசகர்க்கு ஒரு ரூபாயோ இரண்டு ரூபாயோ கொடுத்துவிடுகிறான். பின் நாளெல்லாம் இவன் மனம் இவனை மென்று தின்ன, ஓயாது அதே சிந்தனையாய் ஆகாரமும் செல்லாமல், சாமான் வைத்த இடமும் இருந்த இடமும் மறந்து, ஏதோ பிள்ளைசாகக் கொடுத்தவன்போல் வருந்தி மடிகிறான். இதேன் இப்படி? யார் இவனை வற்புறுத்தினது? ஆடம்பரத்துக்காகத் தர்மம் செய்ததற்குப் பலன் இது. ஆதலாலேயே, நமது மூதாட்டியாரும் முதலாவதாக 'அறஞ்செய விரும்பு' என்றார்.

மனத்திலே தர்மம் செய்யவேண்டும் என்று, ஓயாது எண்ணி எண்ணி, மனத்தை அதற்குப் பழக்கின பின்னரே தர்மம் ஒருவனுக்குத் தன்னையறியாமலே செய்யத் தோன்றும்; பிந்திய கஷ்டமும் இல்லை. இப்பழக்கத்துக்கு அஸ்திவாரம் உன் வீட்டிலேதான். உன் நாதனை ஈன்றளித்த தாய் தந்தையரிடத்திலேதான். அவர்க்கே நீ தொண்டுசெய்து உன் மனத்தைப் பழக்கவில்லையாயின், வேறெங்கே உன்மனம் விரியும்? ஆதலின், அவர் பட்டினிகிடக்க வேறு தர்மங்கள் செய்கிறோம் என்று நீயும் உன்நாதனும் சொல்லும் வார்த்தை ஏமாற்றேயாகும். உங்கள் மனத்தையே நீங்கள் ஏமாற்றிக் கெடுகிறீர்கள். இது தகாது. உண்மையில் நீங்கள் மேன்மையடைய விரும்பினால் அப்பெரியர்க்கு வேண்டியன செய்து அவரைக் கோயிலென வைத்துக் கொண்டாடுங்கள். அப்பொழுதே

உங்கள் சித்தம் சுத்தமடையும்; அப்பொழுதே உங்களுக்குச் சகல ஆசிர்வாதமும் கிடைக்கும்.

இன்னொன்று கேள். இதை முன்னே கேட்டிருக்கிறாய். ஒருவர் செய்யும் நன்மை தீமைக்குத் தக்கவாறு பலன் வருகிறது. எப்படி? ஒரு தொழிலாளி வேலைக்குப் போகிறான். காலை முதல் மாலைவரை வேலைசெய்கிறான். அவனுக்கு ஒரு நாள் கூலி அரை ரூபாய். வேலைசெய்ததும் அப்பணத்தை அவனுக்கு வேலைவாங்கினவன் கொடுக்கக் கடன்பட்டவனாகிறான். இதை இல்லையென்று சொல்ல அவனால் ஆகாது. இவனும் வாங்காமல் விடமாட்டான். ராஜாங்கத்தாரும் அவனுக்கு வாங்கிக் கொடுத்து விடுவார்கள். இப்படி வேலைக்குக் கூலி உண்டு. கர்மத்துக்குப் பலனுண்டு. இது சரீரவேலைக்கு மட்டுமல்ல; மன வேலைக்குமுண்டு. நல்ல வேலைக்கு மட்டுமல்ல. கெட்ட வேலைக்குமுண்டு. பலநாள் திருடன் ஒருநாள் அகப்படுவது உண்மைதான்.

சரி. இனி நீ செய்யும் வேலையைக் கவனிப்போம். இன்றைக்கு உன் மாமன் மாமியர்க்கு உபசாரமொன்றும் செய்யாமல் வயிற்றுக்கஞ்சியும் இல்லையென்று சொல்லிவிடுகிறாய். நாளைக்கு உனக்கும் இதே கதிதான். எது எப்படியாயினும், இது தவறாது நடந்து தீரும். அவரவர் செய்த நன்மை தீமைக்குத் தக்கவாறு அவரவர் பலன் அநுபவிப்பர். இதற்குக் கதைகள் வேண்டியதில்லை. கண்ணாலே நேரில் பார்த்துக் கொள்ளலாம். துன்பம் அனுபவிக்கும் ஒவ்வொருவரையும் பற்றிய முன் சரித்திரத்தை விசாரித்துப்பார். அவர் படவேண்டியது நியாயமே என்று தெளிவாய் அறிவாய்.

ஆதலால், நீ உன் புதுத் தாய் தந்தையரை உல்லங்கனம் செய்வாயானால் உனக்கும் அது நிச்சயம். இதில் எள்ளளவும் சந்தேகம் வேண்டாம். கேள், ஒரு சிறு கதை.



ஒரு ஊரிலே ஒரு கிழவர்; மிக வயதானவர். மகனும் மருமகளும் அவருக் குண்டு. இவர்கள் மிகச் செல்வத்தில் செழிப்பாய் வாழ்கின்றனர். ஆனால் இவர்கள் உண்டு மீந்த இலையையும் அப்பெரியர்க்குக் காட்டுவதில்லை. அவருக்கென்று ஒரு ஓடு கொடுத்து, அதிலேதான் நாய்க்குக் கஞ்சி வார்ப்பது போலக் கஞ்சி ஊற்றுவது வழக்கம். என்று அவர் தலை எண்ணெய் கண்டதோ? மேல் தண்ணீர் கண்டதோ! இது ஒரு கேடா இவர்க்கு! இப்படி நெடுநாளாக நடந்துவந்தது. இப்புண்ணியர்களுக்கு ஒரு மகன். இவன் ஒருநாள் தன் பாட்டனார் அருகிற்போய், நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து, தன் தாய் தந்தையின் நடத்தையை ஒருவாறு உணர்ந்துகொண்டான். இவனுக்கு அது சிறிதும் மனம் பிடிக்கவில்லை. ஒரு வழி யோசித்தான். உடனே அப்பெரியரை அறியாமல் அந்த ஓட்டை எடுத்துக்கொண்டுபோய்ப் பத்திரமாகத் துணிகளால் சுற்றித் தன் பெட்டியில் வைத்துப் பூட்டிவிட்டான். கஞ்சி ஊற்றும் வேளை வந்தது. மருமகள், 'எங்கே சட்டி, உன் இழவுக்குக் கொட்டித் தொலைக்க?'' என்று மிக்க உபசாரமாகக் கேட்டாள். கிழவர் அங்குமிங்கும் தேடினார். காணோம். இவள் வாயில் வந்தவாறெல்லாம் வைது அவரை ஆசிர்வதித்துக்கொண்டிருந்தாள். இதன் மத்தியில் புருஷனும் வந்துவிட்டான். என்ன என்றான். நடந்ததைச் சொன்னாள். அவனும் வாயால் செய்யவேண்டிய உபசாரங்களெல்லாம் செய்துவிட்டு, கையாலும் தடியெடுத்துக் கனம் பண்ண ஆரம்பித்தான். இதுவரை பார்த்தும் கவனியாததுபோலிருந்த பையன் இப்பொழுது ஓடோடியும் வந்து அம்மா, அப்பா, என்ன! என்ன! ஏன் இப்படி அவரை வெருட்டுகிறீர்கள்? நடந்ததென்ன? என்று மிகப் பரபரப்பாய்க் கேட்டான்.

தாய் ஒட்டைப் போக்கடித்த குற்றத்தைப்பற்றி நீண்டதோர் பிராது வாசித்தாள். உடனே பையன் அவர்களை நோக்கி, "அவசரப்படாதீர்கள். அது எங்கும் போய்விடவில்லை. நான்தான் வைத்திருக்கிறேன்; வாருங்கள், எடுத்துத் தருகிறேன்" என்று பெட்டியண்டை கூட்டிக்கொண்டு போய், அதை மிகப் பத்திரமாக எடுத்துக் கையில் வைத்துக்கொண்டு, "தாய் தந்தையரே, நீங்கள் தாத்தாவைப்போல் கிழவரான பொழுது வேறு ஓடி தேடவேண்டிய வேலையும் சிரமமும் எனக்கு நேரிடுமே. இது பழகினதா யிருக்கிறதே. புதிது இதைப்போல் பலப்படுமோ என்னமோ என்றெண்ணித்தான் இதை நான் எடுத்து இவ்வளவு பத்திரப்படுத்தி வைத்தேன்" என்று பையன் மிகச் சாவதானமாகப் பதிலளித்தான். பார்த்தார்கள் இருவரும்; இடிவிழுந்ததுபோலாயிற்று. அன்றுதான் தாங்கள் செய்தது தங்களுக்கே என்ற புத்தி பிறந்தது. அதுமுதல் அக்கிழவரைக் கழுவிக் குளிப்பாட்டி, நல்லுடை உடுத்தி, நல்லுணவருத்தி மிக உபசாரம் செய்து வந்தனர்.

தங்கையே, வேறெந்த நியாயங்கள் உன் காதில் ஏறாவிடினும், "நீ செய்தது உனக்கு, உன் புருஷனுக்கு" என்ற இந்த நியாயமாவது உன் மனத்தில் இருக்கட்டும். உன் உண்மைத் தாய் தந்தையராகிய மாமன் மாமியர்க்கு வேண்டியன செய்து அவர் ஆசீர்வாதத்தைப் பெறு. அதுவே உனக்குப் பின்னால் உதவும்.

## 6. சுற்றம் தழுவு.

அம்மா, இங்கே உனக்கு மேல்நாட்டாருடைய வாழ்க்கையின் லக்ஷ்யத்தையும், நமது லக்ஷ்யத்தையும், அவற்றின் தாரதம்யங்களையும் நன்றாய் விளக்கிக் காட்டிவிடல்வேண்டும்.



இல்லையேல் அவர் தேசத்துக் கடுத்த லௌகிக நாகரிகம், அடிக்கடி உனக்குச் சந்தேகத்தை எழுப்பி நமது புராதனமான வைதிக நாகரீகத்தை இகழ்ந்து தள்ளுமாறு தூண்டும். சற்று கவனமாகக் கேள்.

அவர் ஒவ்வொருவரும் தத்தமக்கு உரியர்; அவர்க்கு நன்மை இப்பொழுதே கைமேல் பணமாகவோ, வயிற்றுக்கு உணவாகவோ வேறெவ்வித சௌகரியமாகவோ கிட்டவேண்டும். இல்லையேல் அதை வெறுப்பர். அவருக்கு அவர் மதப்படி, இம்மை, இவ்வுலகம், இப்பிறப்பு என்ற ஒன்றுதான் உண்டு.

நமக்கு அப்படியில்லை. நமது புராணங்களிலே 'தனக்கெனவாழான்; பிறர்க்கே உரியன்' என்றும், பிறர்க்கு உதவும்பொருட்டுத் தன் உயிரை நீத்தான், தன் முதுகெலும்பைக் கொடுத்தான் என்றும்; மனிதனுக்கு மட்டுமல்ல, ஜீவகோடிகளுக்கெல்லாம் தன்னால் இயன்றவரை அருளை விரிக்கவே மனிதன் பிறந்தானென்றும்; புறாவுக்காகத் தன் உடலை அரிந்து கொடுத்த சிபிச்சக்கரவர்த்தியே அரசனென்றும்; கேவலம் தமது காம இச்சையைத் திருப்திசெய்ய எண்ணிப் புரியும் மணம் மஹா பாதகமென்றும்; பரோபகார சீலனாய், உத்தமோத்தமனாய் விளங்கும் பிள்ளையை உலகத்துக்கு உபகரிப்பதற்காக வன்றிக் கேவலம், தனது காம இச்சையை நிறைவேற்ற எண்ணித் தன் மனைவியை ஒருவன் கூடுவானாயினும் அது வியபிசாரமாம் என்றும்; இப்படிப் பலவகையாக அந்த மேனாட்டாருடைய கொள்கைக்கு முற்றிலும் மாறான தர்மங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

தாய்க்கு மாதத்துக்கு இவ்வளவு என்று கொடுத்து உபசாரம் பண்ணிய ஒரு மகனது தயாள சிந்தையின் பெரு

மையைப்பற்றிப் புஸ்தகம் புஸ்தகமாகக் கொண்டாடி எழுதும் அவர்களது கொள்கை எங்கே! 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்,' 'தாய்சொற் றுறந்தால் வாசகமில்லை' என்ற இவைபோன்ற கொள்கைகளைக் கொண்டாடும் நமது கொள்கை எங்கே! ஏணியிட்டாலும் எட்டுமோ?

அம்மா, இனி, சுற்றத்தை ஏன் தழுவவேண்டும்? அதனால் நமக்கென்ன லாபம்? என்று பார்ப்போம். முதலிலே, நீ சிறு பெண்ணாயிருந்த காலத்தில், உன் சரீரமே பெரிதென்றெண்ணி அதைப் போஷிப்பதிலும், உடுத்துவதிலும், அலங்கரிப்பதிலுமே காலத்தைக் கழித்து பிறரைப்பற்றி எண்ணவும் சக்தியற்றிருந்தாய். பின் ஒரு நாதனைக் கைப்பிடித்தும் உனக்கு இயற்கையில் அவர்மாட்டுண்டான காதலால் உன்னை மறந்து அவரைப் போஷிப்பதிலும் அவருக்கு இதம் செய்வதிலுமே காலங் கழிந்தது. இங்கே அன்பு சற்று முதிர்ந்தது. பின் குழந்தைகளைக் காணவே அது இன்னும் விரிந்தது. இனி மாமன் மாமியரைப்பெற்றோரென்று கருதி அவருக்கு உள்ளபடி உபசாரம் பண்ண ஆரம்பித்தாய். இதனாலே அது பின்னும் கொஞ்சம் விரிந்தது. இனி உற்றார் உறவினரை உபசரிக்க ஆரம்பித்த காலத்து உன் அன்பு மிக விசாலித்து அவ்வுபசாரத்தாலடையும் பேரானந்தத்தையும் அடையும். இது முற்றினதும் தான் நீ எவர்க்கும் உதவி செய்ய ஆரம்பிப்பாய்.

இதுவரை உன் நாதனுக்கிட்டு, உன் மாமன் மாமியார்க்குப் படைத்து மிச்சமிருந்தால் உண்டாய்; இல்லையேல் இருந்தது கொண்டு திருப்தியடைந்தாய். இனி, சுற்றத்தாருக்கு இடுதலும் உனது கடமையாகிறது. விருந்தில்லாச் சோறு உனக்கு இப்பொழுது தான் மருந்தாகின்றது. அவ்வளவு தூரம் நீ அன்பிலே விரிந்துவிட்டாய். அவ்வளவுக் கவ்வளவு



உன் சரீரத்தைப் பற்றிய உணர்ச்சி நீங்க, உனது இயற்கை ரூபமாகிய ஆத்மாவை மனித சரீரங்களிலே கண்டு களிக்கின்றாய். அம்மா, இது முதிர்ந்ததும் தான், உனது இயற்கை அருள் நிலை பூரணமாய் வெளிப்பட்டு, யோகியரும், ஞானியரும் மிகக் கஷ்டப்பட்டுக் காணும் பரமாத்ம தரிசனம் உனக்கும் மிக எளிதிலே கிட்டுகின்றது.

இன்னும் இதிலே நீ பேரானந்தமும் அடைகின்றாய். பார், உன் நாதனுக்கு ஊட்டி உன் மாமன் மாமியர்க்குப் படைத்து மிஞ்சினாலும் மிஞ்சாவிடினும் அதனால் விளையும் ஆநந்தத்தையே ஆகாரமாகக் கொண்டு வளர்ந்தாய். இப்படியே பிறர்க்கும் இட்டு உன் ஆநந்தத்தை இன்னும் கொஞ்சம் விருத்தி பண்ணுதல் நலமல்லவா? இப்படியே ஞானிகளும் அருள் நிலையில் வளர்கின்றனர். பக்தர்களும் ஜீவித்திருக்கின்றனர்.

இங்கே, இந்த உனது தர்மத்தின் பெருமையைப் பற்றி ஒரு சிறு கதை சொல்கிறேன். கவனமாகக் கேள்.

'குருக்ஷேத்திர யுத்தத்துக்குப் பின், பாண்டவர் பெரியதோர் யாகம் செய்து ஏழைகளுக் கெல்லாம் அவரவர் மனம் ரம்மியமடையும்படி தானங்கள் செய்தனர். உலகமெல்லாம் அந்த யாகத்தின் மஹிமையைப் பற்றிக் கொண்டாடியது. அதுவரை இப்படி யாகம் ஒருவரும் செய்ததில்லை. ஆனால் இது நடந்து முடிந்ததும் ஒரு சிறு கீரிப்பிள்ளை அங்கே வந்தது. அதன் மேனி பாதி தங்க நிறம்; பாதி தன் நிறம். அது யாகசாலையில் எங்கும் புரண்டு புரண்டு எழுந்து தன் மேனியை ஒரு முறை முடியப் பார்த்து அங்குள்ளாரை நோக்கி, "நீங்கள் மிகப் பொய்யர்கள். யாகத்தின் லேசம்கூட இல்லாத இதைப் பெரியதோர் யாகமென்று பொய்யாகக் கொண்டாடுகிறீர்கள்" என்று பலவாறு கூறிப் பழித்தது.

"என்ன! இதையா நீ யாகமில்லை என்கிறாய்! எத்தனை பணம்! எத்தனை பசு! எவ்வளவு பூமி! ஏழைகளுக்குத் தான மீந்தனர். இனி உலகத்தில் ஏழைகளே இல்லையே. எல்லோரும் ஆநந்தமாய்த் தமது காலத்தைக் கழிக்க வேண்டிய அளவு பணம் பெற்று இறுமாந்திருக்கின்றனரே; இதையா நீ பழிக்கிறாய்? நீ ஒன்றும் அறியாய். என்னவோ பிதற்றுகின்றனை" என்றனர் அங்குள்ளோர்.

ஆனால் கீரி சொல்ல ஆரம்பித்தது:—கேளுங்கள், பெரியோரே, ஒரு ஊர்; அதிலே ஓர் எளிய பிராமணன். அவனுக்கு ஒரு மனைவி, மகன், மருமகள். இவர்கள் நால்வருமாக ஒரு சிறு குடிசையில் வசித்து வந்தனர். இவருக்கு ஸத்விஷயங்களைப் பிரசங்கம் செய்வதும், அறியாதார்க்குக் கல்விபுகட்டுவதுமே தொழில். இதற்காக ஊரார் தரும் அற்பதானத்தை ஏற்று மிகக் கஷ்ட ஜீவனம் செய்து வந்தனர். அவ்வூரில் ஒரு காலத்தில் மூன்று வருஷம் சேர்ந்தாற் போல பஞ்சம் வந்து விட்டது. அவ் வெளிய பிராமணர் குடும்பத்தின் பாடு இன்னும் திண்டாட்டமாய் முடிந்தது. நாள் கணக்காகப் பட்டினி.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலை கொஞ்சம் கோதுமைமா எங்கேயோ கிடைக்க, அதைக் கொண்டு பிராமணர் வீட்டுள் நுழைந்தார். அதைப் பாகம் செய்ததும் நால்வரும் ஒன்றாய்க்கூடி நாலுபாகமாக்கி ஆளுக்கொன்று கையில் எடுத்துக் கொண்டனர். இன்னும் வாயில் போடவில்லை. இதற்குள் கதவை யாரோ தட்டின சப்தம் கேட்டது. பிராமணர் போய்க் கதவைத் திறக்க ஒரு விருந்தினர் வாயிலில் நின்றார். அவரைக் கண்டதும் மிக உபசாரமாக 'வாருங்கள், உள்ளே வாருங்கள்' என்றழைத்து ஓர் ஆசனத்திருத்தி, தன்



பங்கை அவர் முன் படைத்தார். அதை உடனே வாயிற்போட்டுக் கொண்டு "ஐயோ, நீர் என்னைக் கொன்றுவிட்டீரே, பத்து நாளாக நான் பட்டினி. நீர் கொடுத்த இப் பிடியன்னம் என் வயிற்றில் விழுந்ததும், பசி அதிகரிக்கிறதே. என்ன செய்வேன்? பொறுக்க முடியவில்லையே" என்று அலறினார்.

உடனே மனைவி தன் கணவனை நோக்கி, நாதா, இதையும் கொடுங்கள். தாங்கள் செய்யும் தர்மத்துக்கு நானும் துணையல்லவா? ஸஹதர்மசாரிணி என்பது வெறும் பெயர் மாத்திரத்தில் தானோ? அவர் பசி எப்படியோ! என்று பரிதபித்துத் தன் பங்கையும் நீட்டினாள். அதையும் உண்டார் விருந்தினர். வயிற்றுக்குக் காணவில்லை. பசி மிகக் கொடுமையாகின்றதென்றார்.

பின்பு, "என் பங்கையும் கொடுங்கள்; தந்தை காரியத்தில் பிள்ளைக்கும் பங்குண்டல்லவா?" என்று அதையும் கொடுத்தான் மகன். அதுவும் காணாமையால் மருமகளும் தன் நாதன் தர்மத்தில் தனக்கும் பங்குண்டென்று தன் பாகத்தையும் கொடுத்தாள். இப்பொழுது தான் ஒருவாறு விருந்தினர் பசி தணிந்து, ஆசீர்வதித்து விட்டுச் சென்றார்.

அன்றிரவு அந்நால்வரும் பசி பொறுக்கலாற்றாது இறந்தனர். அவ்வீட்டிற்கு நான் போயிருந்தேன். அங்கே சிந்திக் கிடந்த ஒன்றிரண்டு மாத்துளியில் புரண்டேன். அதனால் தான் எனக்கு இத் தங்கமேனி யானது. நானும் அது முதல் மற்றப் பாதியையும் தங்கமாக்குவதற்கு உலகமெல்லாம் சுற்றிக்கொண்டு வருகிறேன். எங்கும் காணேன். இங்கும் வந்தேன். புரண்டு புரண்டு பார்த்தேன். ஒரு ரோமம் கூடத் தங்கமாகவில்லை. அதனாலேதான் நான் இது யாக மாகாது என்று சொன்னேன்" என்று கீரிப்பிள்ளை சொல்லி முடித்தது.

தங்கையே, நீ இதிலிருந்து தெரிந்ததென்ன? மஹாத் தான யாகங்கள் செய்து பெறும் புகழ்ச்சியிலும் புண்ணியத்திலும், உள்ளது கொண்டு, அது அற்பமாயினும், உபசரித்து அடையும் புகழ்ச்சியோ புண்ணியமோ பெரிதென்று காண்கிறாயல்லவா?

தர்மம், தானம், தவம் என்ற இவற்றின் பலனெல்லாம் தன்னை, தனது அஹங்கார எண்ணத்தை, தனக்கென்ற முற்றிய ஆசையை ஒழித்து, பிறர்க்குத் தன் உயிரை உதவும்வரை மனம் விரியப் பெறுவதேயாம். மனம் விரிய விரிய மனத்திலே ஒருவகை ஆநந்தமும் பெருகுகிறது.

மனத்தையும் அதில் நடக்கும் விருத்தியையும் பொறுத்தமட்டில் இவ்வாறாக, இனி லோகத்திலே இச்சுற்றம் தழுவுதலால் நாம் அடையும் பயன் ஏதேனும் உண்டா என்று பார்ப்போம்.

அது, உலகத்திலே பலரையும் நமக்குத் துணையாக்கி, நமது காரியங்களையும் கஷ்டங்களையும் எளிதாக்கி, நமக்கு இவ்வுலகத்திலாகவேண்டிய இதங்களெல்லாம் செய்து கூட்டுகின்றது.

அடிக்கடி சண்டையிட்டுக் கொள்ளும் உற்றார், உறவினர் சுற்றத்தாரைப் பெற்றிருக்கும் ஒருவனை யாரேனும் எதிர்ப்பாராயின், அப்பகைவனை எதிர்க்க அவர் அவர்க்குள்ளிருக்கும் மாத்சரியங்களை மறந்து ஒன்று கூடுகின்றனர். இதையறிந்து, எத்தகைய வலியனாயினும், ஒருவன் சுற்றம் நிறைந்த ஒருவனை எதிர்க்கச் சற்றுத் தயங்கி யோசிக்கிறான்.

அன்றியும், எத்தனை பணம்பெற்று ஊழியத்துக்கு அமரும் வேலைக்காரனிலும் இச்சுற்றத்தார் இயற்கையிலேயே அன்புள்ளவரா யிருக்கின்றனர். இவர்க்கு, "தாம் ஆடாவிடி



னும் தம் சதை ஆடுகின்றது. இதை அநேக குடும்பங்களிலே நீ பிரத்தியக்ஷமாய்க் கண்டிருப்பாய். நான் கண்டதொன்றும் சொல்கிறேன், கேள்.

ஒரு குடும்பத்திலே ஒருவருக்குக் காசநோய் கண்டுவிட்டது. இந்நோயைப் பற்றிய பயம் நம்மவர்க்குள் மிகுதியாக இல்லையாயினும் புது வைத்திய முறையிலே தேர்ந்த பண்டிதர்கள் இதைப் பிரமாதமாக்கி யிருக்கின்றனர். இந்நோயாளர் எச்சிலை மிதிக்க நேரினும் இது பற்றி விடுகிறதென்பது அவர் துணிபு. விரிப்பானேன்! இந்நோயாளர் இறந்தால் இவருக்கு உத்தரகிரியைகள் நடத்தும் எவரும் இந்நோய்க்குள்ளாவார் என்று நமக்குள் இத்தனை தூரம் பயம் அதிகரித்திருக்கிறதென்றால் வேறு இதைப் பற்றி விசேஷமாய்ப் பேசவேண்டியதில்லையே.

இப்படி நோய் கொண்ட இவருக்கு இந்நோய் முற்றி
இவர் துப்பும் சளியும் மிக நாற ஆரம்பித்து விட்டது. இதற்கு
முன்னெல்லாம் சுற்றத்தார் இவருக்கு உபசாரம் செய்தது
பெரிதில்லை. இப்பொழுது இப் பிணியாளரைச் சுற்றி இரவு
பகலென்றில்லாமல் சுமார் மூன்றுமாச காலமாக மூன்று நாலு
பேர் இருந்துகொண்டு அவருக்குக்கேட்டது கொடுத்து அவர்
சளியைத் தம் துணியினும் துடைத்து உபசாரம் செய்தனர்
என்றால் இச்சுற்றத்தாரின் அன்பின் பெருமையை வேறு
எப்படி விஸ்தரிப்பது? அந்தோ! அவ்வம்மைக்கு நாள்தோ
றும் இரவு பகலென்றில்லாமல் ஐந்து ஆறு முறை புதிதாகச்
சமைத்து ஊட்டியும், அவ்வலுப்பின் மிகுதியால் எப்பொழு
தும் தூக்கக் கண்ணோடேயே மிகத் துன்பப்பட்டுக் கொண்
டிருந்தும், அவள் கூப்பிடுவதற்குள் 'ஆ' என்று அலறி எழுந்து
உபசரிப்பரென்றால் சுற்றத்தார்க்கு இயற்கையிலேயே இருக்
கும் அன்பைக் குறிக்க வேறு என்ன சாக்ஷிவேண்டும்?

இத்தகைய அன்பினர் சுற்றத்தார். இதை உணர்ந்தே பெரியோரும், இவரை ஆதரித்து இவர் அன்பைப் பெறுதல் அவசியம் என்று காட்டச் 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்' என்றும் 'சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்' என்றும் கூறியுள்ளார்.

இது இவ்வாறாக, சுற்றத்தாரை உபசாரம் செய்யாத ஒரு பிரபு வீட்டிலே நடந்த சங்கதி கூறுகிறேன். அதையும் கேட்டு நிதானி. இப்பிரபுவுக்கு வெறும் ஜ்வரம். இவருக்குத் தாய், தம்பி, தங்கை என்ற மூவர் மிக நெருங்கினவர். ஒரே வீட்டில் வசிப்பவர். தாயுடன் பிறந்த மாமனும் அவரைச் சார்ந்த அத்தை, மக்கள் என்ற சிலரும் உண்டு. சுற்றத்தார் அநேகர்.

இந்த ஜ்வர நோயால் இவர் மிகப் பயந்து விட்டார். புலம்பவும் ஆரம்பித்து விட்டார். இந்தச் சமையம் இவர் பக்கத்திலிருந்து உபசாரம் பண்ணவோ தைரியம் கூறவோ இவர்களுள் எவரும் வரவில்லை. வந்தாலும், சில நிமிஷங்களே நின்றுவிட்டு, தமது சௌகரியங்களுக்கு இடைஞ்சலில்லாது தமது இருக்கைக்குப் போய்விடுவர். பகலில் இது. இரவு வந்ததும் எட்டு மணிக்கு ஒரு முறை இவரருகில் வந்து நின்று பார்த்துவிட்டு, ஒவ்வொருவரும் தத்தம் படுக்கையறைக்குப் போய்விடுவர். இவர்மேல் சிறிதும் குற்றமில்லை. [illegible] ஐந்து நிமிஷம் விழித்திருப்பின், தமக்கும் ஏதேனும், ஜ்வரமோ, தலைவலியோ வேறெதுவோ வந்துவிடும் என்று பயந்தவர் இவர். ஆதலால் அவர் போனது சரியே.

ஆயின் இப்பிரபு தமது சுற்றத்தாரை ஆதரிப்பதில்லை என்ற குறையாலும், அவரைச் சில காரணங்களால் தம்மினும் தாழ்ந்தவர் என்று கருதும்படி நேரிட்ட தவறாலும்,



அச்சுற்றத்தார் பிரபுவின் வீட்டில் நுழைவதற் கில்லை. அன்றிரவு அந்த லக்ஷாதிபதி மனத்தில் என்னவெல்லாம் எண்ணியிருப்பாரென்று நீயே யோசித்துக்கொள்.

வேலையாள் ஒருவர் உண்டு. இவர் தாம் எத்தனையோ மனவருத்தத்தோடு ஒரு சமையம் 'ஊம்' என்று கேட்டும், ஒருசமையம் கேளாமலும், வெந்நீர் வேண்டியபோது கொடுத்தும் கொடாமலும் அவ்விரவு கழிந்தது. இப்படிப் பல சங்கடங்கள்.

தங்கையே, சுற்றத்தார் அநேகர் இருந்தும் அவரை உபசாரம் பண்ணித் தம்மவராக்கிக் கொள்ளாத குறையால் ஒரு லக்ஷாதிபதியே இவ்வாறு அலக்ஷியம் செய்யப்படுவாராயின் மற்றவர் பாடு என்னாகும்?

ஆதலால், சுற்றத்தாரை உபசாரம் செய்யப் பிந்தாதே. உன் முகமலர்ச்சியாலும் இன்சொல்லாலும் அவருக்கு ஆறுதலளி. தம்மவர் என்ற நினைப்பை ஊட்டு. எப்பொழுதும் இல்லாவிடினும், கலியாணம், சீமந்தம் முதலிய நல்ல காரியங்களிலும், இறந்தோரை எண்ணிக் கொண்டாடும் வருஷக் கொண்டாட்டத்திலும், இன்னும் உன் வீட்டில் நடக்கும் எந்தக் களியாட்டிலும் அவருக்கு உண்டி முதலியன அளித்து உபசரி. இந்நோக்கத்தோடு தான் பெரும்பாலும் இக் கொண்டாட்டங்களே ஏற்பட்டன.

இவற்றிலும், சிற்சில சமைய விசேஷங்களிலும் வீட்டாரையும், சுற்றத்தாரையும் ஏழைகளையும் அருத்திய பின்னரே, நீ உண்ணும் வழக்கம் உனக்கு இருப்பதாலே தான் "உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு" என்று இதை உனக்கு அழகாக்கி வைத்திருப்பது. இதில் இல்லற தர்மத்தை அழகு படுத்துவதோடு, உனது சரீரத்திலே கொழுத்த உண

வால் ஏற்படும் அசுத்தமான அழுகை மாற்றி, இச் சுற்றத்தாரை ஊட்டும் தவத்தால் மெலிந்த சௌந்தரிய தேவதையாக உன்னை ஆக்கும். அன்றியும் இவ் வுண்டி சுருக்கலே உலகத்தாரெல்லாம் உன்னைக் கொண்டாடும்படி செய்ய வல்ல புத்திரப் பேற்றுக்கும் ஒரு காரண மாவது.

புத்திரப்பேற்றை விரும்புவோர் ஸ்நானம் செய்து, உலராத ஈர வஸ்திரத்தை இடுப்பில் இறுக்கி உடுத்து, அரசமரத்துப் பிள்ளையாரைச் சுற்றிவந்து, ஒரு வேளை உண்டி யருந்தி மற்ற வேளைகளில் பட்டினி கிடப்பதும் இதற்காகவே தான். பெண்கள் சரீரத்திலே ஊராருக் கிடாது உண்ட ஆகாரத்தால் ஏற்பட்ட கெட்ட, கொழுத்த தசையைக் குறைக்கும் இந்த நோக்கத்தோடு தான் இவ்விரதாதிகள் ஏற்பட்டன. மலட்டுத் தன்மையுள்ளோர் கொழுப்பதும், கொழுத்தவர் மலடாவதும் நீ கண்டிருக்கலாமே.

ஆதலால், தங்கையே சுற்றத்தைத் தழுவி, பிறர்க்கும் உன்னால் இயன்ற அளவு இட்டு, யாவரும் புகழும்படி தர்ம சிந்தனையோடு வாழ்வாயாக. இதுவே உன் பிறப்பின் பயன்.

## 7. கர்ப்ப சமையம்.

அம்மா, இதுவரை நீ உன் நாதனிடத்தில் உனது கடமையென்று பக்திபூண் டொழுகினாய். அவர் செய்யும் தர்ம களிலே, உன் உள்ளத்தில் இல்லாவிடினும் அவர் மனத்தை திருப்தி செய்யும் பொருட்டு, பங்கு பெற்று வந்தாய். சில சமையம் ஏதேனும் ஒரு சிறு தவறு உன் நாதனிடத்துக் கண்டாலும் அதற்காக அவரை வெறுத்துப் பார்த்தாய். இப்படிப் பல குறைகள் உன் உள்ளத்திலே இதுவரை இருந்தன.

ஆனால், இனியோ, நீ முற்றிலும் மாறப்போகிறாய். உன்னை அறியாமலே உன் நாதனிடத்து அழியாத பக்தி ஏற்படும்



காலம் நெருங்கி விட்டது. குற்றத்திற்காக ஒருவரை வெறுப்பதும், குணத்திற்காக ஒருவரை விரும்புவதும் இனி உன்னால் முடியாது என்று அந்த உத்தம பதவி சமீபத்தில் உனக்கு வரப்போகின்றது. மிகுந்த பாடுகளெல்லாம் முடிவிலே பலனாக ஒரு பேரானந்தத்தைத் தரும் என்ற உண்மை இப்பொழுது தான் உன் அநுபவத்திற்கு வரப்போகின்றது. பத்து மாசம் மிகவும் வருந்தி அலுக்கும் நீ மடியிலே ஒரு குழந்தையைக்கண்டு, அத்தனை கஷ்டத்தையும் நிமிஷத்திலே மறக்கப்போகின்றாய். ஒரு சமையம் 'சீ, இதென்ன வாழ்க்கை. இவ்வளவு வேதனையும் அநுபவிக்கும் ஸ்திரீ ஜன்மம் மகா பாவத்தால் வந்ததே. இனிப் புருஷனும் வேண்டாம், பிள்ளையும் வேண்டாம்' என்று வெறுத்து, வேதனைக்குத் தக்கவாறு மனத்திற்குள் உறுதியும் (சத்யம்) செய்து கொள்ளும் நீ இனி எவரும் அநுபவித்தறியாத ஒரு பேரானந்தத்தில் வீழ்ந்து திளைக்கப் போகின்றாய். உன் கையிலுள்ளது உண்வோ சிற்றுண்டியோ வேறெதுவோ பிறர்க்குக் கொடுக்க இதுவரை யோசித்துக்கொண்டிருந்த நீ உன் தசையைக் கரைத்து, உன் ஜீவாதாரமாகிய ரத்தத்தையே மாற்றி, பாலாக அந்நிய மானதோர் (அந்நியம் என்ற வார்த்தை இப்பொழுது கர்ணகடூரமா யிருக்கிற தல்லவா?) குழந்தைக்கு ஊட்ட வல்ல மந்திரக்காரியாகப் போகிறாய். அசுத்த எண்ணம் உன் மனத்திலிருந்து, உன்னை அறியாமலே சில பதார்த்தங்களைக் கண்டதும் 'ஆய்' என்று சொல்லி வெறுத்து 'எல்லாம் நான்' என்ற ஈச்சுர வாக்கை இதுவரை உல்லங்கனம் செய்து வந்தா யல்லவா? அதற்காக நீ அநுபவிக்க இருந்த 'புத்' என்னும் நரகம், இனித் தான் உனக்கில்லாமல் [illegible] போகின்றது. இதற்கு முன்னெல்லாம் [illegible] உன் [illegible] னும் உனக் கும் சிறு சண்டைகள் [illegible] ஆகி, சில நாட்கள் [illegible], அறி

128554

யாமையாலே அவர்து சுகத்தையும் கவனியாமல் அசட்டை செய்து வந்த நீ, இனி அவரது நிழலேயாகிய உனது மகவால் அத்தகைய சிறு குணங்கள் நீங்கப் பெற்று அறிவிலும் அன்பிலும் உயரப் போகின்றாய்.

அர்த்தமாகாமல் பலரையும் திகைக்கச் செய்கின்ற 'அன்பின் பொருட்டு அன்பு', 'தர்மத்தின் பொருட்டுத் தர்மம்', 'கர்மத்துக்காகக் கர்மம்' என்ற பெரிய பெரிய உண்மைகளெல்லாம் இனிமேல்தான் உனக்கு நன்றாக, பிரத்யக்ஷமாக விளங்கப் போகின்றன. 'குழலும் யாழும் இனிது, என்று கொள்ளுவார் கொள்ளட்டும். எனக்கு அவை என் மதலையின் குதலை மொழி போல் இன்பம் தரவில்லை' என்று சொல்லும் காலம் இதோ வந்து விட்டது. இனிமேல்தான் அகங்காரம் உன்னைவிட்டு நழுவிப் பிறரை ஊட்டுவதும் உறக்காட்டுவதும் உனது இயற்கையாக அமையும்.

இப்படிப் பலவகையிலும் உன்னை மாற்றி, மனிதர்க்கு இது முடியாது என்று எண்ணி மலைத்த அநேக அசாத்தியமான காரியங்களையெல்லாம் சாத்தியமாக்கவல்ல காலம் உன் கையில் இருக்கின்றதே. நீ என்ன செய்யப் போகிறாய்?

உனக்கும் பிறக்கும் சுகும் உண்டு பண்ணும் மார்க்கத்திலே உன்னைச் செலுத்திக் கொள்ள வேண்டும். உன் வயிற்றில் பிறக்கும் மதலையை நீ ஆக்கினாலும் ஆக்கலாம்; அழித்தாலும் அழிக்கலாம். ஞானியாக ஆக்கலாம்; சூனியமாக அழிக்கலாம். எது செய்வையோ? உன் இஷ்டம்.

அம்மா, "தாயைப் போல பிள்ளை; நூலைப்போல சேலை" என்பது நீ கேட்டிருப்பாயே. அதை நீ என்றேனும் எண்ணிப்பார்த்ததுண்டா? சில சமையம் சில தாய் தந்தையர் "சீ! இதென்னடா தொல்லை! இப்பிள்ளையை ஈசன் எனக்கென்று



எப்படிப் படைத்தானோ தெரியவில்லையே! வழியிலு மில்லை, என் வம்சத்திலு மில்லையே! இந்தத் துடுக்கு எங்கிருந்து வந்ததோ?" என்று சொல்லி வருந்துவதை நீ கேட்டிருப்பாயே. நீயும் அவர்கள் சொல்வது சரிதான்; இது எங்கிருந்து வந்தது! என்று கூட எண்ணி ஆச்சரியப்பட்டதுண்டு. சேலை நூலைப்போலத்தான் என்பது உனக்குப் பிரத்யக்ஷம். அதை யார் மறுத்தாலும் நீ ஒத்துக் கொள்ளமாட்டாய். இது உறுதிதான். ஆனால், தாயைப் போலே பிள்ளை யென்பது மட்டும் உனக்கு இன்னும் தெளிவாகவில்லை.

தங்கையே, குழந்தைகள் தாய் தந்தையரின் அம்சம். அவர்களிடம் இல்லாதது குழந்தைகளிடம் உண்டாவதேயில்லை. விரையொன்று போடச் சுரையொன்று முளைப்பதில்லை. ஆனால், இத் தாய்தந்தையர் தாங்கள் இன்ன விதை யிட்டோம் என்பதையே மறந்து விடுகின்றனர். அக்காலத்தில் இவர்கள் சரீரத்திலேயிருந்த ஊக்கம், அசதி, மனத்தில் இருந்த திருப்தி, பொறாமை, வஞ்சகம் என்ற இவை தாம் இப் பிள்ளைக்கு வித்து.

திருதராஷ்டிரன் குருடனானதும், பாண்டு மகாராஜன் நோயாளியானதும், விதுரன் அங்கக் குறையோ அறிவுக் குறையோவின்றிப் பூரண ஞானியானதும் நீ கேட்டிருப்பாயே. இவை பொய்க்கதைகள் என்று எண்ணி, நம் பெரியோரைப் பழித்து உன்னையும் ஏமாற்றிக் கெடாதே. இவ்விதி என்றும் மாறுவதில்லை. இது மாறாத நியதி.

தாய் தந்தையர்க்கு அக்காலத்திலே இருந்த குணமோ, குற்றமோ, நன்மையோ தீமையோ, வடித்தெடுத்த ரசம் போலக் குழந்தைகளின் உள்ளத்திலே பதிந்து, உடலில் வெளிப்பட்டு விடும்.

உனக்குப் பிரத்தியக்ஷமான ருஜு வேண்டுமாயின், குதிரை குட்டிபோடுவதைப் பற்றி நன்றாய் விசாரித்துப் பார். தாய்க்குதிரை கொண்ட எண்ணமே குட்டியாகின்றது என்பது தெளிவாம்.

அம்மா, இங்கே ஒரு முக்கியமான விஷயம் சொல்கிறேன் கேள். பிள்ளைகளுக்கு வேண்டுமட்டும் திரவியம் தேடித் தந்தோம்; அது தந்தோம்; இது தந்தோம் என்று இறுமாந்திருக்கும் தாய்தந்தையரே, நீங்களும் கேட்பீர்களாக. பிதுரார்ஜிதமாகத் தாய்தந்தையர் பணம் கொடுப்பது உண்மை தான். உறுதி தான். அதற்காக, தாய் தந்தையரே, உங்களுக்குப் பிள்ளைகள் நன்றி பாராட்ட வேண்டியது அவசியமே. உங்களைத் தினந்தோறும் பூ இட்டும் போற்றி செய்தல் வேண்டும். ஆனால், ஐயோ! உங்கள் கெட்ட எண்ணங்களையும், பேராசைத் தரித்திரத்தையும், தீராத நோயையும் குழந்தைகளுக்குப் பிதுரார்ஜிதமாகக் கொடுக்கிறீர்களே. இதற்கு என்ன செய்வது! ஐயோ! எத்தனை குழந்தைகள் பிறக்கும்பொழுதே குருடாய், முடமாய் அங்கப்பழுதாய்ப் பிறந்து, ஊரார் நகைக்க, உற்றார் சிரிக்க ஆளாகின்றனர். எத்தனை குழந்தைகள், சிவ சிவ! சொல்லவும் கூசுகின்ற குஷ்டம், மேகம், காசம், குன்மம் முதலிய கொடிய வியாதிகளால் பிடிக்கப்பட்டுப் பிறந்தது முதல் சாவது வரை மிகத் துன்ப வாழ்க்கையே நடத்துகின்றனர். அந்தோ! தற்காலத்திலே வைத்தியர்கள் சொல்வது உண்மையாயின், மேகநீர்ச்சம்பந்தமான நோய் இல்லாதவரே இல்லையாமே! இதை எதைக் காட்டுகின்றது? நீங்களே யூகித்து அறிந்து கொள்ளுங்கள்! தந்தை தாயரே, உங்களுக்குப் பிள்ளைகளாய் அமைந்த இவர்க்கு நீங்கள் தேடித் திரட்டிய பிதுரார்ஜிதம் இத்தகைய நோய், ஊக்கமற்ற மனம், எதிலும்



நிலையற்ற மனம், துன்பமுறும் மனம் என்பதையும் நீங்கள் சற்றுத் தயை செய்து எண்ணிப் பார்க்க வேண்டும், அடடா! தாய் தந்தையர் பிறரை மோசம் பண்ணித் தேடும் திரவியம், பிள்ளையையும் மோசம் பண்ணி ஓடுவதோடு, வேறொரு தொழிலுக்கும் உதவாத 'உப்பிலி'—பிரயோஜனமற்ற சக்கை—யாகவும் செய்கிறதென்றால், பணம் தேடும் வழியைப் பற்றித் தாய் தந்தையர் எவ்வளவு கவனமாயிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகின்றதா?

ஆதலின், பெற்றோர் பதவி மிக எளிய பதவியல்ல. பிரமாவின் சிருஷ்டித் தொழில் அது. உத்தமமான பிள்ளை வேண்டுமானால் மாசு மறுவற்ற உத்தமமான மனமும், நோயணுகாத புனிதமான சரீரமும் தாய்தந்தையர் பெற்றிருத்தல் வேண்டும். மாசு, மறு, கள்ளம், கபடற்ற மனம் வாய்த்தல் எவ்வளவு அருமையென்பதைத் தாய் தந்தையரே, எண்ணிப் பாருங்கள்.

இனி ஒரு சமயம், உங்கள் மனம் மாசற்ற நீரோடை போலத் தெளிந்திருக்கும். ஆனால் அடியிலே அழுக்கெல்லாம் திரண்டு நிற்கும். இதுவும் பயனற்றது. மனம் பூரணமான பரிசுத்தம் எய்தினாலன்றிக் கள்ளம் கபடு குழந்தைகளிடம் இல்லாமல் போகா என்பது நன்றாக உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும்.

சுகர், வேதவியாசர், வள்ளுவர், ஔவை, சம்பந்தர் ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகாநந்தர் போன்ற பெரியர் உதித்த இடங்களை உற்று நோக்குங்கள். ஈசுவரனே உங்கள் வயிற்றில் தங்கி, உலகத்துக்கு உபகாரம் செய்ய வரலாம். காலமெல்லாம், பரோபகார நிமித்தம் கருணைமயமாகிய பெருமான் அவ் வக்காலத்துக்குத் தக்கவாறு கோலங்கொள்ளத்

தயாராயிருக்கின்றார். உங்களைப் புனிதமாக்குங்கள். அவன் உங்களிடமிருந்தும் வருவான்.

நமது புராணங்களிலே கண்ட கதைகளெல்லாம் பொய், ஊரார் சொல்வதெல்லாம் மெய் என்ற குறுகிய அறிவை இனியேனும் விட்டொழியுங்கள். காலம் செல்லச் செல்ல அவற்றின் மெய்ம்மையைக் காட்டுவதற்கு, இதுவரை அவை பொய் என்று சொல்லி வந்த அவரே காரணங்காட்டி வருகின்றனர் என்பது உங்கள் ஞாபகத்தில் இருக்கட்டும். பாரதப் போர், ராமாயணப் போர் பொய்யென்ற உங்கள் அறிவு இன்றைக்கு "அவை ஏன் நடந்திருத்தல் கூடாது" என்று சந்தேகிக்கின்றது. போனது போகட்டும்; இனியேனும் அவ்வாறு எண்ணி மோசம் போகாதீர்கள். நிற்க.

ஈஸ்வரன் 'அவதாரம் செய்கிறேன்' என்று வரமளித்தார்' என்று புராணங்கள் கூறு மேல், யோசனையின்றி 'அசம்பவம்' (நடக்காது) என்று கொண்ட நீங்கள் இன்றைக்கு வங்க நாட்டிலே போய் அங்கு பிறந்து உலகத்தை நாஸ்திகமென்னும் அந்தகாரத்தினின்று எடுத்துக் காத்த ஸ்வாமி விவேகாநந்தரின் பிறப்பைக் கேளுங்கள்.

அவரது தாயார்க்கு இவருக்கு முன் இரண்டு பெண் மக்கள் உண்டு. ஆண்பிள்ளை யில்லையே என்னும் குறை இவ்வன்னையின் மனத்தில் விடாமல் உறுத்திக் கொண்டே வந்தது. தம் பெண் மக்களின் புத்திக் கூர்மையையும் சுறுசுறுப்பையும் கண்டு களிக்கும் இத் தாயார், திடீரெனப் பிள்ளைக் கலி ஞாபகத்துக்கு வர, உலகத்தையே மறந்து என்னென்னமோ எண்ணிப் பெருமூச்சுவிட்டு அயர்வர். இப்படி வருந்தும் இவருக்குக் காசிவிசுவேசர் சந்நிதானம் ஒருநாள் ஞாபகத்துக்கு வர, அங்கு அப்பெருமானது முகூர்த்தத்திற்கு அர்ச்சனை செய்யுமாறும், தம் வேண்டுகோளை அத் திருவாளர்முன்



முறையிடுமாறும், அங்கிருந்த தமது அத்தையார் ஒருவருக்குக் கடிதம் எழுதினர். இங்ஙனமே சிலநாள் நடந்து கொண்டு வந்தது.

இவர் உள்ளத்திலும் எப்படியோ உறுதி ஏற்பட்டு இனி அக்கவலையே மாறி, அவ் விசுவேசப் பெருமானை எண்ணியெண்ணிக் களிப்பதிலேயே காலம் கழிந்தது. அவர் கேட்ட வரம் அளிக்கப்பட்டதுபோல (அவ் விசுவேசப் பெருமானின் மற்றொரு முகூர்த்தமாகிய வீரேசுரர் தம் உதரத்தில் உதிப்பது போல) அவர் மனம் திடமும் திருப்தியும் எய்தியது. அவ்வீடு, இனிச் சாந்தாலயமாய், கவலையிருள் நீங்கப்பெற்று அங்கு நுழைந்தார்க்கும் என்றுமில்லாத ஒரு புது அழகும், புது உற்சாகமும் தோன்ற இடமாயிற்று. இதுதான் எம் பெருமான் விவேகாநந்தர் வரலாறு. பின் அவர் பிறந்ததும், அவருக்கு வீரேசுவரர் என்று நாமகரணம் அமைந்ததும், அவ் வீசுவரனைப் போல ஞான மூர்த்தியாய் அவர் உலகுய்ய உபகரித்ததும் எல்லோரும் அறிந்ததுதான்.

இப்படித் தாய் வேண்டுகோளுக்குத் தக்கவாறு—அது நிலைத்த பக்தியோடு கூடியதாயின்.—குழந்தைகள் பிறக்கின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மை.

இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, எத்தனையோ திருஷ்டாந்தங்கள் நீங்களே கேட்டும் பார்த்துமிருப்பீர்கள். பிள்ளை [illegible] குறையைப் பெரிதென்று கொண்டு அதை நீக்க [illegible]த் தரைமெழுகிச் சாதமிட்டு, புறங்கை கட்டி உண்ணுதல் போன்ற அருமையான விரதங்களை அநுஷ்டிக்கும் பெருமாட்டிகளுக்குக் குழந்தைகளாய் அமைபவர் தூர்த்தர்களுக்கும், பிறர் பார்க்கத் தம்மை அலங்கரிக்கும் பேதைகட்கும் பிறக்கும் பிள்ளைகளினும் எத்தனையோ பங்கு உயர்ந்து குண

வான்களா யிருக்கின்றனர் என்பதை நீங்கள் இன்றும் கண்ணாரப் பார்த்தறியலாம்.

ஆதலின், அம்மா நீ உனது மனத்தை மிகப் புனிதமாய் உன் நாயகன்மாட்டு கள்ளம் கபடற்ற அன்புள்ளதாய் வைத்துப் பெரியோர் பிறப்பதற்கு ஏற்ற இடமாக்கிக் கொள்வாயாக. பொய்யன்பு காட்டி, உள்ளத்தில் நாயகனையோ தர்மத்தையோ புறக்கணிக்கும் பேதையரை அவர் வயிற்றில் உதிக்கும் பிள்ளைகள் அறை பறை போல வெளியே காட்டிவிடுவர்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்.”

இனி, கர்ப்ப சமையத்திலே நீ கவனிக்க வேண்டிய சில அம்சங்களைப் பற்றிப் பேசுவோம். குழந்தை உற்பத்தியான நாள் முதல் அது பிறக்கும் காலம் வரை, நீ கீழான ஆசைகளுக்கும், இழிகுணங்களுக்கும் உன் மனத்திலே இடம் கொடாமல் தவம் செய்யும் ரிஷிகளைப் போல இருக்க வேண்டும். இப்பொழுது உனது சரீரம் மிக இளகி நிற்கின்றது. மனம் மிக மென்மையாய்ச் சிறு கடுஞ்சொல்லையும் ஏற்கத் திறனற்று நடுங்குகின்றது. இக்காலத்திலே உனது சரீரத்திலும் மனத்திலும் உண்டாகும் ஒவ்வொரு சலனமும் அக்குழந்தையின் சரீரத்திலும் மனத்திலும் தைத்து அதை வடுப்படுத்தக்கூடும். நல்ல எண்ணமாயின், நல்ல கேள்வியாயின் அதற்கும் நன்மை பயந்து, மற்றவையாயின் அதற்குத் தீமையே புரிகின்றது. இதை உத்தேசித்தே உன்னை ஒருவரும் கடுஞ்சொல் சொல்லாமலும், அசதி மறதியில் பயப்படுத்தாமலும் ஆதரிக்கின்றனர். அந்தோ! உன் உள்ளத்தில் ஒரு சிறு குறையிருப்பினும், அது அச் சிசுவின் உள்ளத்தில் அழுந்தத் தைத்து அதை ஊனமாக்கி விடும் என்ற காரணத்தாலல்லவா உனக்கு ராஜோபசாரமும், அறுசுவை யுண்டியும் உதவித் திருப்தி செய்வது!



ஆதலின் எத்தகைய குறைகளுக்கும் உன் உள்ளத்திலே இடங்கொடாதே. பூரணமாய் நிறைந்து, திருப்தியாயிரு. அச்சிசுவும், ஆசைச் சுழலிற் பட்டு அலைந்து கவலைப்படாமல் சுகமாய் ஆநந்தமாய், திருப்தியாய் வாழட்டும்.

இனி, இப்பருவத்திலே நல்ல கேள்விகளைக் கேள். கெட்ட பேச்சுக்கும் கெடுமதிக்கும் காதுகொடாதே. நமது நாட்டிற்கே விலை மதிக்க வொண்ணாப் புதையல்கள் என்று சொல்லத்தக்க இதிகாசங்களும் புராணங்களும் உண்டு. ராமாயணம் படிப்பதையோ, கேட்பதையோ உனது பொழுதுபோக்காக வைத்துக்கொள். ராமரையும் சீதையையும் எண்ணி யெண்ணிக் களி. உன் உள்ளத்திலே இவர்தம் பெருமை நன்றாக அழுந்தப் பதியும்படி ஓயாது திரும்பத் திரும்ப அவற்றைப் பாராயாணம் செய். சுபத்திரை வயிற்றில் அபிமன்யு இருந்த காலத்தில், அர்ஜுனன் வில்வித்தையின் ரஹஸ்யங்களைப் பற்றித் தன் மனைவிக்குச் சொன்னதும் அதை அச்சிசு கவனித்து வந்ததும், பின் கிருஷ்ணன் வந்து (அக் கர்ப்பத்திலிருக்கும் சிசு முழுதும் கேட்குமாயின் தன் எண்ணம் நிறைவேற மார்க்கமிராது என்று) தடுத்து அர்ஜுனனை அவ்வளவில் நிறுத்தித் தன்னுடன் அழைத்துச் சென்றதும் பொய்க்கதை யல்ல. இன்றைக்கும் நடக்கின்ற மெய்க் [illegible]தான். உண்மை உரைதான். நீ கேட்பது, எண்ணு[illegible], செய்வது[illegible]ன்ற எல்லாம் அச்சிசுவின் உள்ளத்திலும் நன்கு பதியும். உன் குணமே அதன் குணமாம். உன் ரத்தத்தால் வளரும் அது, உன் ஸ்வபாவத்தை ஏற்றுக்கொள்ளாது என்று சொன்னால் நீ நம்புவாயா? புலி வயிற்றில் பிறந்த குட்டி ஆடுகள் மத்தியில் வாழ்ந்தாலும் தனது இயற்கையை மறக்குமா? மாற்றுமா? மாற்றாதல்லவா?

இனி, இப்பருவத்தில் மற்றைக்காலங்களிலெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாது வெறுத்துத் தள்ளும் சிறு பொருள்களும், இப்பொழுது உனக்கு விருப்பை விளைக்கின்றன. மண்ணென்றும், சாம்பலென்றும் இழித்து, அவற்றை முன்னெல்லாம் வாயிலிடக் கூசிய நீயே, இன்று அவற்றைப் பிறர் அறியாமற் சேமித்துவைத்து, தின்பண்டங்களினும் பெரிதாகத் தின்று களிக்கிறாய். சிறிதெல்லாம் இப்பொழுது பெரிதாகின்றது. வெறுப்பெல்லாம் விருப்பாகின்றது. ஆகாததெல்லாம் ஆகின்றது. இவையெல்லாம் உன் வயிற்றிலிருக்கும் குழந்தை பண்ணும் கூத்து.

ஆயின், இம் மண் தின்னல் மிகக் கேட்டை விளைக்கும். கஷ்டப் பிரசவத்திற்கும், குழந்தைகள் ரத்தமற்ற சக்கைகளாய்ப் பிறப்பதற்கும் இதுவே காரணமென்று வைத்திய நூலார் எல்லோரும் ஏகோபித்துச் சொல்கின்றனர். அன்றியும், ஈரமண்ணில் நெடுநேரமிருப்பவன் கால்கள், ரத்தம் உறிஞ்சப்பெற்று வெளுத்துப் போயிருப்பதை நீ நேரே கண்டிருக்கலாம். மண்ணுக்கும், சாம்பலுக்கும் நீரை யுறிஞ்சும் சுபாவம் உண்டாகலின், நீ உண்ட இவைகள், உன் வயிற்றிலும் அச் சிசுவின் மேனியிலும் உள்ள நீரை உறிஞ்ச, உன் சரீரத்தில் ரத்தம் இறுகிக் கட்டிப்பட ஆரம்பிக்கின்றது. ஆதலின் இதை அடியோடு நிறுத்திவிடு.

இனி, சில செல்வவந்தர் வீட்டுப் பெண்களை, யாதொரு வீட்டலுவல்களும் செய்யவிடாது, அசைந்தால் மேனி அலுக்கும், நடந்தால் சரீரம் குலுங்கும் என்று பொன்னே பூவே போல் அளவுக்கு மிஞ்சிய சௌக்கியத்தில் இருத்தி, நாளேற நாளேற இருந்த இடத்தை விட்டு அசையவும் அசக்தர்களாக ஆக்கிவிடுகின்றனர். இது மிகக் கேடுதரும். இத்தகையார் பிரசவ காலத்தில் படும் வேதனையை ஒரு முறை பார்ப்பவர்



ரும் ஐயோ ஐயோ என்று சொல்லிக் கண்ணீர்விடுத்துப் பரிதவிப்பர். இது இயற்கைக்கு முற்றிலும் மாறான செய்கை. இதற்காகவே அவர்கள் இவ்வாறு தண்டிக்கப்படுகின்றனர். சாக்ஷி வேண்டுமானால் கூலி வேலை செய்து பிழைக்கும் குறவர் முதலிய ஜாதியாரைப் பார். அவர்களுக்கு இப் பிள்ளைப் பேறு சுமையிறக்குவதுபோல அத்தனை எளிதாய், அநாயாஸமாய் அமைகின்றது. அடுத்த க்ஷணத்தில் அவர்கள் அன்றன்று வேலை செய்து வரும் கூலிகொண்டே பிழைக்க வேண்டியவர்களாயிருத்தலின் முன்போலத், தங்கள் வேலைபார்க்கப் போய் விடுகின்றனர். பழுத்தால் பழம் எவ்வாறு அநாயாசமாகச் சிரமமின்றி, தானே உதிர்ந்து விழுமோ, அவ்வாறே பிள்ளைப் பேறும் இருத்தல் வேண்டும். அப்பொழுதே, அக்குழந்தைக்கு யாதொரு வடுவும் இன்றி, குறைவற்ற அங்கங்கள் அமையும்.

இப்படிப் பணக்காரர் வீட்டுப் பெண்கள் ஆஸ்பத்திரிக்குச் சென்று ஆயாஸத்தோடு பிள்ளை பெறுவதும், ஏழைகள், கூலிவேலை செய்பவர் சிரமமின்றிப் பிரஸவிப்பதும் உன் சொந்த அநுபவந்தானே.

ஆதலின், உன்னால் இயன்றவரை வேலைசெய்து கொண்டே வா. ஆனால், உனது சரீரத்தை உலைத்து வருத்தும் நெல் குத்துதல் போன்ற வேலைகளைக் கனவிலும் எண்ணாதே. அத்தனை ஏக்கம், பெருமூச்சு, உழைப்பு இப்பருவத்திற்குத் தகாதவை.

இனி, இப்பருவத்திலே உன்னையொத்தார்க்குத் தினந்தோறும் வெந்நீரில் ஸ்நானம் செய்வித்து, நல்லாடை உடுத்தி, நல்லணிபூட்டி, பூச்சூட்டி, தாய் முதலியோர் கண்ணாரக்கண்டு களிப்பதை நீ கண்டிருப்பாயே. இது ஆடம்பரம், அநாவசியம் என்று எண்ணிவிடாதே. இது மிக அவசியம். இது அச்சிசுவை அழகும், களிப்பும் உள்ளதாக ஆக்க ஏற்றவழி.

நீ ஏழுமாசம் வரையே உன் நாதனுடன் வாழத் தக்கவள். பின் உன் வயிற்றிலிருக்கும் சிசுவுக்கான உபசாரங்களெல்லாம் செய்யவேண்டும். அதற்கே காலம் காணல் அருமையா யிருக்கும் பொழுது உன் நாதனுக்கு எங்கே உபசாரம்! பணிவிடை! ஏழாமாசச் சடங்கு கொண்டாடி உன்னை உன் தாயார் தம் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கு இதுதான் காரணம். அங்கே நீ உன் சரீரத்தை மிகவும் போற்றிப் புனிதமாய் வைத்திருத்தல் வேண்டும். தினந்தோறும் ஈசுவரன் இருக்கும் ஆலயத்தைத் துலக்குவதுபோல உன்னையும் ஸ்நானஞ்செய்வித்து, அதை அலங்கரிப்பதுபோல உன்னையும் அலங்கரித்து, மனத்திற்குச் சிறிதும் கவலையின்றி, சந்தோஷமாயிருப்பாயாக. இதற்காகவே நீ இஷ்டப்படுவதெல்லாம் உனக்கு அளிப்பது.

அன்றியும், தங்கையே, இப்பருவத்திலே உன்னைப் போன்றார்க்கு ஏற்படும் அழகு வேறு எப்பருவத்தி லேனும் நீ கண்டதுண்டா? இவ் வழகு நீ ருதுவான அக்காலத்து மில்லை. நாயகனைக் கண்டு களிக்கும் நற்காலத்து மில்லை. இனி எக்காலத்து மில்லை.

ஆதலால், அவ் வியற்கை விதியையொட்டி, உன்னை ஸ்நானத்தாலும், உடையாலும் அணியாலும்—எவற்றிற்கும் மேலாக—நடையாலும் அழகுபடுத்து. தினம் தவறாது குளி. புதிய உடை உடுத்து.

அம்மா,

நல்ல காற்று! நல்ல காற்று!! நல்ல காற்று!!! இது வரை உனக்கு மட்டும் வேண்டிய காற்றை நீ உட்கொண்டாய். இனி இன்னொரு குழந்தைக்கும் வேண்டிய காற்றை நீ தான் ஏற்றுக் கொடுக்கவேண்டும். இதுவரை உன்சரீரம் சற்று பலமாய், எதையும் ஏற்றுக்கொள்ளத்தக்க நிலையில்

இருந்தது. இனி அது இளகிவிட்டது. உள்ளிருக்கும் சிசுவோ மிக மென்மையானது. காற்றிலுள்ள விஷஜெந்துக்கள் மிக எளிதாக உங்கள் சரீரத்திலே தீமைசெய்தல் கூடும். ஆதலின் காற்றைப்பற்றி மிகக் கவனமாயிரு. உணவு, நீர், காற்று என்ற இம் மூன்றிலும் காற்று மிக உயர்ந்தது!

மனத்தை, மிகச் சீராய் வைத்திரு. அன்பால் அதை நிரப்பு. இன்சொல்லால் அதை வெளிப்படுத்து. கோபமும் கடுஞ்சொல்லும் உன் அருகிலும் அண்டவிடாதே. ஒருவேளை உன் நாதன் வீட்டில் இவை வெளிப்படும் என்று எண்ணியே, உன்னை இங்கே தாய்வீட்டில் கூட்டிவந்து, இத்தனை உபசாரமும் செய்வது.

ஆதலின், ஸகோதரீ, நீ மிகவும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும். உண்பது, உடுப்பது, அணிவதைப்பற்றிச் சற்றுக் கவனக்குறை யேற்படினும், எண்ணுவதைப்பற்றி மிக மிக விழிப்பா யிருக்கவேண்டும். உண்டி, உடை, அணி, இவை குழந்தைகளின் சரீரத்தை மாற்றும். எண்ணமோ அதன் உள்ளத்தை மாற்றிவிடும். ரோகியாயிருந்தாலும், அது திருப்தனாய், ஆநந்தனாய், அறிஞனாய், கவலையற்றவனாய் உலகில் வாழலாம். ஆனால், அதிருப்தனாய், ஞானசூனியனாய்ப்போய், அரோகியாய், திடகாத்திரனாயிருந்து யாதுபயன்? மிருகங்களும் பறவைகளும் மனிதரைப்போல அதிகமாக நோய் கொள்வதில்லையே. எனினும் எப்பிறவி மேம்பட்டது? மனிதப் பிறவி தானே!

## 8. ஸ்நானம்.

தங்கையே,

முன்னமே ஸ்நானத்தால் உண்டாகும் பயனைப்பற்றி விஸ்தாரமாகச் சொன்னோம். கேட்டிருக்கிறாய். அது சரீரத்தின்மேல் கசியும் வியர்வை என்னும் விஷநீரைக் கழுவி,

சிறங்கு முதலிய தொத்து வியாதிகள் வராமல் தடுக்கின்றது. இப்படிப் பல நன்மைகள்.

இனி அந்த ஸ்நானத்தாலே உன்னை யொத்த பெரியர் சரீரத்துக்கு உண்டாகும் சுகத்தையும் மனம் அடையும் நிலையையும் யோசித்துப் பார்ப்போம்.

சில நாட்களில், சற்று மந்தமான ஆகாரம் உண்ட உனக்கு வயிற்றில் பல வகையான விகாரங்கள் உண்டாகி, வாய்வு இம்சைகள் மிகுதிப்பட்டு, 'கடபுட' என்ற சப்தத்தோடு, வயிறெல்லாம் ஏதோ ஒரு பெரிய அமர்க்களமாயிருக்கக் கண்டிருப்பாயல்லவா? அக்காலங்களிலே, சுக்கோ, இஞ்சி லேகியமோ, வெள்ளரிக்காயோ தின்று அதைச் சமாதானப் படுத்த எண்ணி முயன்றிருப்பாயே. இரவெல்லாம் வருந்தி வழியறியாது புரண்டு கொண்டிருந்த நீ, காலையில் வழக்கப்படி ஸ்நானம் செய்த பின்னர், இத் தொல்லைகளெல்லாம் நீங்கப் பெற்று, மிகச் சுகமாக ஆகாரம் கொள்ளத் தயாராகின்றாய். இனி, பசி அதிகப் படுகின்றது; இரவெல்லாம் வயிறு, வயிறு என்றெண்ணித் திண்டாடி, வேறொன்றிலும் நிலைக்கத் திறனற்றிருந்த உன் மனம், இப்பொழுதுதான் 'அப்பாட' என்று பெருமூச்செறிந்து சாந்தி யடைகின்றது.

மேலும் விலாப்புடைக்கத் தின்று, மூச்சு விடவும் இயலாது மிகத் 'திணறும்' ஒருவன், நீரில் இறங்கி, சுமார் ஒரு மணி நேரம் நிற்பின், அத்துன்பங்கள் நீங்கப் பெற்றுச் சுகமடைகின்றான். சரீரமெல்லாம் ரத்தம் ஆறாக ஓடும்படி அடிக்கப் பெற்ற ஒருவனைப் பழைய ஜமீன் 'தர்பார்' களிலெல்லாம், உடனே நீரில் இறங்கி நிற்கச் செய்து, அந்நோவைச் சாந்தப்படுத்துவது வழக்கமா யிருந்திருக்கின்றதே.

இப்படி ஸ்நானம் அஜீரண தோஷத்தை நீக்கும் சக்தி பெற்றிருப்பதோடு, சரீர அலுப்பையும் மாற்றுகின்றது என்



பது வெளிப்படையன்றோ? ஆயின், அது எவ்வளவு அவசியம் என்பதைச் சொல்லவேண்டுமா?

மேலும், அது மனத்தைச் சமநிலைக்குக் கொண்டுவரும் அபார சக்தியும் வாய்ந்தது. இதனாலேயே பூஜை முதலிய மனோ வியாபாரங்களில் தலையிடும் பெரியோர், முதலில் ஸ்நானம் செய்துகொள்வது. இதனாலேயே, துக்க வீடு சென்றால் குளிப்பதும். இவர்க்கும் அத்துக்கம் தைத்து மனத்தில் சம நிலை வராதிருந்தது. குளித்தபின்னர் அது தானே வந்து அமைகின்றது. இதை நீயே உன் அநுபவத்தில் கண்டிருக்கலாம். இக்காரணத்தை முன்னிட்டே, துக்கத்துக்கு மிக நெருங்கிய சம்பந்தமுள்ள பந்துக்கள் பத்தோ, அல்லது பதினாறு நாட்களோ, கோவில் முதலிய புண்ய ஸ்தலங்களுக்குப் போகாதிருப்பதும், பூஜை முதலிய மனம் சம்பந்தப்பட்ட காரியங்களைச் செய்யாமல் இருப்பதும். துக்கத்தினாலே வாடித் தவித்துக் கொண்டிருக்கும் இவர் மனம் எப்படிச் சம நிலை பெறும்? சமநிலை யில்லாவிட்டால் எதைப்பற்றியும் நிச்சயிக்க அவர் மனம் எப்படி ஒருப்படும்? ஒருமுகப் படாத மனம் பூஜைக்கு ஏற்றதாகுமா?

இப்படிச் சிலர்க்கு—துக்கத்தில் நெருங்கிய சம்பந்தமில்லாத சிலர்க்கு—குளிப்பொன்றே மனத்தைச் சமநிலைக்குக் கொண்டுவர வல்லதாகின்றது. மற்றவர்க்கோ, நாட்கள் செல்லச் செல்ல மறதி தலைப்பட வேண்டியதாயிருக்கிறது.

ஆதலால், தங்கையே, ஸ்நானம், மனத்தையும் புனிதமாக்கி, துக்கம், கோபம் போன்ற பல சங்கடங்களில் அகப்பட்டுத் தன் நிலையையே மறந்திருந்த மனிதனைத் திரும்பத் தன் நிலைக்குக் கொண்டு வரும் வல்லமை வாய்ந்ததா யிருக்கின்றது.

இன்னொன்று. பல்லி முதலிய சில பிராணிகள் சரீரத்தில் சில அங்கங்களிலே வீழ்ந்தால், அவற்றைக் கழுவினால் போதும் என்றும், சில அங்கங்களில் வீழ்ந்தால் உடனே ஸ்நானம் செய்து தீர வேண்டும் என்றும் சொல்கின்றனர். இது தற்காலத்தில் நகைப்புக் கிடமாயிருக்கின்றது. ஆனால், பல்லி எச்சம் விழுந்தால் சரீரத்திலே 'பத்து' விழுந்து பொறிந்து போவது எல்லோர்க்கும் தெரியும். அவ் வெச்சம் சரீரத்துக்கு ஏற்காத ஏதோ ஒரு வகை விஷ நீர். ஆயின், அப்பிராணி எத்தகையது என்று சொல்லவும் வேண்டுமோ? அது உடம்பில் விழுந்தால் கழுவ வேண்டியது இனியேனும் அவசியம் என்று தோன்றுமா?

ஆனால், சில இடங்கள் நரம்புக்கூட்டங்கள் ஒன்று கூடியவையாயும், சில அவ்வாறின்றி அவ்வங்கங்களுக்குச் சம்பந்தப்பட்ட நரம்புகளே நிறைந்தவையாயு மிருக்கின்றன. முன் சொன்ன இடங்களில் பட்ட எதுவும், உடனே சரீரம் முழுதும், உள்ளிருக்கும் சில உட்கருவிகளிலும் பரந்து சென்று அதனாலுண்டாகிய கேட்டையோ நலத்தையோ தரும். அதற்காகவே கேடே தருவதாகிய பல்லி சில இடங்களில் வீழ்ந்தால் சரீரம் முழுதையும் கழுவச் சொல்வது, ஸ்நானம் செய்யச் சொல்வது. மற்றவை அப்படியல்ல. அவ் வங்கங்கள் மட்டும் சம்பந்தப்பட்டவையாதலின் அவற்றைக் கழுவினால் போதும்.

இங்கேயும், ஸ்நானத்திற்கு எவ்வளவு வல்லமை உண்டு என்பதைக் கவனி. இன்னும் கேள்; சரீரம், மனம் என்ற இவை சம்பந்தப்பட்ட எவ்வகை வேலையிலும் மனிதன் அலுத்து விடுகின்றான். எனினும், இவன் குளித்த பிறகே ஆகாரம் உட்கொள்ளல் நம் நாட்டு வழக்கமாயிருக்கின்றது. ஏன்? குளிப்பானேன்? குளியாமலே உண்டாலென்ன? என்



றால் குளித்த ஒருவனுக்குச் சரீரம் மனம் என்ற இவற்றின் ஆயாசம் நீங்கி, [illegible] அதிகப்படுவதோடு உண்ட உணவை ஜீரணம் செய்யவல்ல சக்தியும் சரீரத்தில் எழுந்து காத்து நிற்கின்றது. நீரில் பிராண சக்தி மிகுதியாக நிறைந்திருக்கின்றது. இதை, தன் மேனி மீது ஊற்றிக்கொள்ளும் ஒருவன், அச் சக்தியையும் தன் உடம்பில் சேர்த்துக்கொள்ள, அது இவனுக்குப் புதிய அழகையும் ஊக்கத்தையும் தருகின்றது. வாடிக் களைத்த ஒருவன் ஸ்நானம் செய்தால் அவ்வாட்டம் நீங்கப் பெறுகிறான்; வறண்டுபோயிருந்த அவன் முகம் பின் மலர்ந்து பிரகாசிக்கின்றது. மடிந்து வதங்கிக்கிடந்த அவன் மனம் பின் ஊக்கத்தால் நிமிர்ந்து எதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராய்த் தலையெடுத்து நிற்கின்றது. இதை உத்தேசித்தே மஹா கவியாகிய கம்பரும் ஈசனை "உண்ணும் நீர்க்கும் உயிர்க்கும் உயிரவன்" என்றார்.

அன்றியும், தற்காலத்திலும் புதிதாக 'வசியம்' முதலிய சக்திகளில் மேனாட்டு வழிகளில் அப்யாசம் செய்யும் எவரும், ஸ்நானம் செய்யும்பொழுது, 'நான் இத்தண்ணீரிலிருந்து பிராண சக்தியை அதிகமாக ஏற்றுக்கொள்கிறேன்' என்று எண்ணிக்கொள்கின்றனர்.

இப்படி, ஸ்நானம் மாந்தர்க்கு உழைப்பில் இழந்த பலத்தைத் திரும்ப அளித்து முகத்தை வசீகரமாக்கி உயர்த்துகின்றது. ஆனால் சிலர் ஆடைகளைத் தோய்ப்பதேயில்லை. குளித்த பின்னும் பழைய அழுக்குப்படிந்த ஆடையையே உடுத்திக்கொள்கின்றனர். இது சுசியாகுமா?

சரீரம் மலப்பை போல, அடிக்கடி கழுவப்பெறாவிட்டால் நாற்ற மெடுக்க ஆரம்பிக்கின்றது. இதைப் போர்த்திருந்த ஆடையும் அன்றன்று களையவில்லையேல் நாறும் நாற்றம் சகிக்க இயலவில்லையே. சுத்தப்படுத்தின சரீரத்தில்

அசுத்தமானதும் துர்க்கந்தமயமானதுமான ஆடையை உடுத்த எப்படி மனம் துணியும்? அன்றியும் வெயர்வை நீரால் நனைந்து அழுக்கான அவ்வாடை சரீரத்தில் வெயர்வையுண்டாகும்பொழுது நனைந்த அழுக்கு ஊறி வெயர்வை வரும் அவ்வாய்க்கால்களை அடைத்து விடுமல்லவா? பின் சரீரம் நோய்களுக்கு ஏற்ற களம் தானே.

இவற்றையெல்லாம் உத்தேசித்தே நமது பெரியோர் "கந்தையானாலும் கசக்கியுடு; கூழானாலும் குளித்துக் குடி" என்று நமக்கு ஆக்ஞாபித்தார்கள். இதனாலேயே, 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்றார் ஒளவையார். ஊருக்கு அழகிருந்தது மில்லை. அது பாழாவது மில்லை. மனிதர்தாம் அதை அழகாக்குவதும் அதைப் பாழாக்குவதும். எப்படி? அவர் நன்றாய்க் குளித்து, வஸ்திரம் தோய்த்துச் சுத்தமாயிருப்பதற்கு அவ்வாறு மிகத் துணை புரிகின்றது. சுத்தமாயிருப்பவர் அழகாயிருப்பார் என்பதற்குச் சாக்ஷி வேண்டியதேயில்லை. நம் நாட்டிலே அழகாயிருப்பவர் பெரும்பாலும் பிராமண ஜாதியாரேயாவர். இவரது சுத்தம் உலகறிந்தது. ஆதலால், ஊரை அழகுபடுத்துவது ஆறு என்று சொன்னது மிகப் பொருத்தமானது.

இனிச் சிலர், இப்படி ஸ்நானம் செய்யும்பொழுது மஞ்சளரைத்துப் பூசும் நமது புராதனமான வழக்கத்தை அடியோடு விட்டு விட்டனர். சிலருக்குச் சந்தேகத்திலிருக்கிற[illegible] இவர்கள் மஞ்சள் பூசுவதால் உண்டாகும் நன்மையையேனும் தீமையையேனும் தீர விசாரித்தறியாமல் விடத்துணிந்தது மிகவும் பரிதாபமான விஷயம்.

அந்தோ! தற்காலத்திலே நமது இஷ்ட தேவதை பூஜையையும், தமது புராதனமான அநுஷ்டானங்களையும் மனிதர் சற்றும் விசாரியாமல் விட்டு விட்டு அந்நிய மதங்களில்



தம்மை நுழைத்துக்கொள்கின்றனர். சகல மதங்களும் ஈசுவரனை அடைவதற்கு ஏற்பட்ட மார்க்கங்கள் தாம். ஆயின், ஒன்றைவிட்டு மற்றொன்றைக் கைக்கொள்ளும் இவர், அவசியம் முந்திய தமது மதத்தை விசாரிக்கக்கடமைப் பட்டவரன்றோ? ஏனெனில் மதங்களில் தாரதம்ய அறிவு கொள்வதற்கு அவற்றை நன்றாய்த் தீர விசாரிக்க வேண்டாமா? தீர விசாரியாமல் இவர் கொள்ளும் கோட்பாடு (மதம்) பின் தன் விசுவாசமுள்ள நாயைக் கொன்ற வர்த்தகன் பட்ட பாட்டினும் மிக வருத்துமே! ஐயோ பாவம்! மாந்தர் என் யோசியாமல் இவ்வாறு தம்மை வருத்தத்துக் குள்ளாக்கு கின்றனரோ!

[illegible] இப்படித் தீர விசாரியாமல் நிறுத்திய வழக்கங்களில் மஞ்சள் பூசுவதும் ஒன்று. இவர்கள் தயவு செய்து தீக்குழி பாய்பவன் அதற்கு முன் மஞ்சள் நீர் குடித்துக் கொண்டும், மஞ்சள் நீர் தோய்த்த ஆடை உடுத்திக்கொண்டும் செல்வதைச் சற்று ஊன்றி யோசித்துப் பார்க்கட்டும். 'அம்மன் கொண்டாடி' அக்கினிச் சட்டி கையில் கொண்டு வருவதெப்படி? மஞ்சள் உடையும், மஞ்சள் நீர்ப்பானமும் அவனுக்கு இன்றியமையாதவை என்பதை எல்லோரும் கண்ணாரக் கண்டிருப்பார்களே!

ஆகவே, நெருப்பொடு பழகுவார், தங்கள் சூடு தணியும் பொருட்டு மஞ்சள் உபயோகிப்பது அவசியம் என்று இப்பொழுதேனும் புலப்படுகின்றதா?

சகோதரீ, நீ உன் நாதனுக்கும், குழந்தை குட்டிகளுக்கும், வந்த விருந்தினர்க்கும் ருசியாகப் பண்டங்கள் சமைத்திடும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாயே! அதற்குத் தினசரி குறைந்தது மூன்று நாலு மணி நேரங்கள் நெருப்பெதிரில் நிற்க வேண்டியது அவசியமாகிறதே. இவ் வெரிச்சலை நீக்குவதற்கு மஞ்சளன்றோ பெரிதும் உதவுகின்

றது? அதை விட்டொழிப்பாயாயின் உனது சரீரம் உலர்ந்து போமல்லவா?

அன்றியும் மஞ்சள் அழகையும் மங்கள கரத்தையும் தருவது உனக்குத் தோன்றவில்லையா? மிகப் பூசாது, இலே சாகப்பூசுவார் மேனி, பொன் போல அழகு பெற்றிருப்பதை நீ கண்டு களித்திருக்கலாமே.

இன்னொன்றும் கேள்: சிறு குழந்தைகளுக்கு—அப்பொழுது தான் பிறந்த சிறு குழந்தைகளுக்கு—குறைந்தது ஒரு வருஷம் வரை, அது ஆண் பெண் என்ற பேதமின்றி, நம்மவர் மஞ்சள் பூசிக் குளிப்பாட்டி வருவது வழக்கமாயிருக்கிறதே. இதனாலே அக்குழந்தைகளுக்கு உண்டாகும் பல வகைச் சிரங்குகளும் நீங்குவதை, நீயே உன் அநுபவத்தில் கண்டறிந்திருக்கலாம்.

ஆதலின், இத்தகைய உத்தமமான வழக்கத்தை நீ உல்லங்கனம் செய்யாதே. அது உஷ்ணத்தைத் தணித்து, மேனிக்கு அழகளித்து, சிறங்கு முதலிய சிறு ரோகங்களினின்றும் காப்பாற்றுகின்றது.

இப்படியே பொட்டிடுதலும். இது அழகு பயக்குகின்றதென்பதோடு, தீயவர் செய்யும் வஞ்சனையான வசியம் முதலி கேட்டினின்று காப்பாற்றும் ரக்ஷை போலவும் உதவுகின்றது நெற்றியில் நாம் பொட்டிடும் ஸ்தானத்தில் சகல நரம்புகளும் வந்து கூடிக் குவிந்து நிற்கின்றன. இங்ஙனமே பேட்டரியிலும். ஒருவரை, வசியம் செய்ய விரும்புபவன், அவரது நெற்றியை, 'இவர் நான் சொன்னபடி கேட்க வேண்டும்' என்ற ஒரே சிந்தனையோடு, சில நிமிஷங்கள் வரை பார்ப்பதும், பின் அவர் பார்க்கிறவன்— (அம் மந்திரக்காரன்) சொன்னபடியே கேட்பதும் இன்றைக்கும் நாம் பார்த்துத் தெரிந்து கொள்ளத்தக்க காட்சிகள். ஆயின், அந் நெற்றியில்



கூட்டங்கள் குவிந்த அந்த ஸ்தானத்தை ஏதேனும் ஒரு பொருளால் மறைத்து வைத்திருந்தால் இம் மாயாவிகள் ஜெபம் சாயாது என்பது ஒரு சாரார் கொள்கை. இதை எண்ணியே பெரியோர் அவ்விடத்தில் பொட்டிடச் சொன்னார்கள்.

அன்றியும், அழகையே கண்டு களிக்கும் கவிகளும், மதுரை பாண்டி நாட்டுக்குத் திலகம் என்றும், பரதகண்டம் பூமகள் திலக மென்றும், கம்பர் கவிகள் திலகம் என்றும் கூறி, திலகம் அழகு தருவது என்பதை வற்புறுத்தி யிருக்கின்றனர்.

மேலும், யோகியரும் ஞானியரும் அது அறிவுக் கிடமென்றும்; அறிவைத் தனது அரங்காகக் கொண்டு நடிக்கும் பெருமான் (சித் அம்பலம்) அங்கேயே எழுந்தருளி யிருக்கின்றனரென்றும் சொல்லிக் கொண்டாடுகின்றனரே!

இப்படிப் பலவகையில் எல்லோரும் பெருமைப்படுத்திக் கொண்டாடும் அறிவுக்கிடமாகிய அந்த லலாட ஸ்தானத்தைக் குங்குமத்தாலோ, சந்தனத்தாலோ, வேறெதனாலோ அழகுபடுத்துதல் கூடாதென்று சொல்லுதல் பொருந்துமா? நிற்க.

தற்காலத்தில் மாதவிடாயான மூன்று நாட்களைத் தீண்டா நாட்களாக நம்மவர்களில் சிலர் கருதுவதில்லை. அந் நாட்களில் அவர்கள் வீடுபுகுந்து வேலைசெய்தலும் தகுதியேயென்று எண்ணிச் சம்மதிக்கின்றனர். தீண்டலான காலங்களில் பெண்களுக்குண்டாகும் துர்ப்பலத்தைச்சற்றும் கவனிக்கின்றாரில்லை. இக்காலங்களில், வேலை செய்தற்காவது வீடு புகுதற்காவது நாயகரைக் காண்பதற்காவது அவர்கள் அருகரல்லர். மாதமுழுதும் சரீரத்தில் திரண்டு நின்ற கெட்ட ரத்தம் வெளிப்பட்டு, மர்மேந்திரியங்களைச் சுத்தமாக்கி, புத்திரப்பேற்றுக்கு அவர்களைத் தகுதியாக்கும் இக்காலத்தில், பெண்கள் அடை

யும் அசத்தியையும், அசுசியையும், சோர்வையும் கவனித்துப் பார்ப்பார்க்கு வேறு காரணம் எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படாது. இந்நாட்களிலே சோம்பரும் தூக்கமுமே இவர்களுக்கு இயல்பாய் அமைந்தவை. ஆதலின், இவர்கள் ஒரு தனியறை தேடி ஒய்ந்திருப்பதைத் தவிர வேறென்ன செய்ய இயலும்?

அன்றியும், தங்கையே, நவீன சம்பிரதாயங்களிலே பழகிய சிலர் தீட்டு, தீண்டல் என்ற இப்பதங்கள் அர்த்தமற்றவை; தொட்டால் என்ன செய்யும்? புத்தியற்ற அநாகரீகமான மூடப்பிடிவாதங்கள்-இவை யென்று குறை கூறுகின்றனர். இவர்கள் தூரஸ்திரீ அருகில் சென்றால் வாடிச் சாகும் கருவேப்பிலை போன்ற செடிகளை ஒருமுறை தயவுசெய்து பார்ப்பார்களாக. மேலும், தைரியமுள்ள ஒருவரைச் சகவாசியாகப் பெறும் ஒருவர் தைரியம் பெறுவதும்; துர்ப்பலர், பயங்காளி, நோயாளி என்ற இவர்களைத் துணையாகப் பெறுபவர், துர்ப்பலராய், பயங்காளியாய், ஊக்கமின்றி வாடுவதும் நாம் இன்றும் நேரேபார்த்துத் தெரிந்து கொள்ளத் தக்க உண்மைகள்.

இன்னும் ஒன்று. தண்ணீர் சமமான இடத்தில் சமதளமாய் நிற்றல்போல மாந்தர் சக்திகளும் பழகின இருவருக்குள் சமநிலையில் அமைகின்றன. அறிவாளி, மூடன் என்ற இருவர் கூட்டாளிகளாயின், நாளடைவிலே தம்மை அறியாமலே இவர்கள் இருவரும் குணங்களில் ஏறித்தாழ்ந்து, ஒருவரிடம் இருந்த குணம் குற்றங்கள் மற்றவரிடத்திலும் அமைந்து நிலைத்துவிடுகின்றன. சக்தியும் இவ்வாறே. மின்சார சக்தி தன்னருகில் இருக்கும் எதனிடத்தில் எந்த அளவில் தங்கி நிற்கின்றதோ அந்த அளவிலேயே தன்னிடத்திலும் தங்கி நிற்கின்றது. ஆயின், பலத்திலே குறைந்தவரை அண்டுபவர் தமது பலம்



அத் துர்ப்பலரால் உறிஞ்சப்பெற்று, தாம் துர்ப்பலராவது இயல்பே யாகும். மேட்டிலிருக்கும் நீர் பக்கத்திலே பள்ளத்தைக் கண்டால் பாய யோசிக்கும். துர்ப்பலரோ, அசுசியான எண்ணங்க ளுடையவரோ, சக்தியுள்ளோரும் நல்லெண்ணமுள்ளோரும் தம்மண்டை வந்த சமயத்தில் அறிந்தோ அறியாமலோ தங்கள் குறைகள் நிறையப் பெறுகின்றனர்.

இவ்வாறு நாம் கெட்டவர்களையோ, தொத்து நோயாளரையோ துர்ப்பலரையோ. அணுகியதால் அடையும் நஷ்டத்தை ஈடுபண்ணவே ஸ்நானம் செய்வது. ஸ்நானம் பலத்தையளித்து, சரீரத்தைச் சுத்தம்பண்ணி, மனத்தையும் தூய்மையாக்கிச் சமநிலையில் நிறுத்துகிறதென்பதை முன்னரே விஸ்தாரமாகச் சொல்லியிருக்கிறோம்.

மேலும், துர்ப்பலமுடையார் மனத்தைக் கட்டி நல்லவழியிலே நிறுத்த அருகராகார்கள். நோய் கொண்டவர், முன்னெல்லாம் கண்ணாலே பார்க்கக்கூடச் சம்மதியாத பண்டங்களைக்கண்டு ஆவலடைவதும், துர்ப்பலகாலமான கர்ப்ப சமையத்திலே மண், சாம்பல்போன்ற அற்பமான சாமான்களின் மேல் அடக்க முடியாத இச்சைவருவதும் இயல்புதானே. ஆயின், பலமற்று வாடும், மாதவிடாய் காலங்களில் தம் நாயகரைக் கண்ணாலே பார்ப்பதும், அருகில் செல்வதும், ஓர் ஆசனத்தில் இருப்பதும் நியாயமாகுமா? நன்மை பயக்குமா? ஒரு வேளை இக்காலங்களில் அகஸ்மாத்தாய்க் குழந்தை ஜனிக்குமேல் அது எத்தனை தமோகுணம் மிஞ்சியதாய்ச் சுசிபேதமின்றி, அசத்தியும் சோம்பலும் நிறைந்து தன் வாழ்நாளெல்லாம் அல்லற்படுமென்பதையும், கருவேப்பிலை போன்ற மெல்லிய செடிகளைக் கொன்ற அவ்விஷ ரத்தம் இருவர்க்கும் எக்கேடு விளைக்கும் என்பதையும் பிறர் சொல்லிக் காட்டவும் வேண்டுமோ?

இப்படிப் பல கேடுகள் சற்று யோசனைக் குறையால் ஏற்படக் காத்துக்கொண் டிருக்கின்றன.

ஆதலின், அக்காலங்களில் நம் பெரியோர் கூறியிருக்கும் நியமப்படி, யோசித்துக் காரணம் கண்டு நடந்து, உனக்கும் உன் நாதனுக்கும், உன் சந்ததிக்கும் நல்வாழ்க்கை அளிக்கப் பாடுபடு. உனக்குத் தெரியாததாலேயே, அவை பயனற்றவை யென்றெண்ணிப் பிறர் போதனையில் இறங்கிவிடாதே. தீட்டு, தீண்டல் என்ற இவையெல்லாம் பொய்; அறியாதார் கோட்பாடு என்று சொல்லி நம்மவரைப் பழிக்கும் மேனாட்டு வைத்தியர், குஷ்டரோகி, காசநோய்க்காரன், வாந்திபேதிக்காரன் போன்ற மனிதரைக் காணக்கூடச் சகிக்கின்றாரில்லையே! அந்தோ! அவர்கள் ஊருக் கப்புறம் பிரத்யேகமாகக் கட்டியுள்ள சேரி போன்ற ஒதுக்கிடங்களிலேதான் வசிக்க வேண்டுமென்று ராஜாங்கத்தாருக்கு ஆதாரங்கள் எடுத்துக் காட்டி அதற்கென்று சட்டமும் செய்யத் தூண்டுகின்றனர்! இது ஏன் இப்படி? இவற்றை யெல்லாம் யோசித்துப்பார். அவர்களுக்கு,அம்மா, கண்ணினாலே பார்த்துத்தெரிந்துகொள்ளும் சரீரத்தைப் பற்றிய நோய்களும், அசுசியும் மட்டும் பிரதானம். நம்மவருக்கோ மனத்தைப் பற்றிய நோய்களும் முக்கியமானவை. ஆம், இவை தாம் நமக்கு முக்கியம். மனத்தின் எண்ணங்களுக்குத் தக்கபடி தானே சரீர அமைப்பு ஏற்படுகிறது. மனம் தானே சரீரத்தை உண்டு பண்ணும் பிரமா?

## 9. நகைத் துன்பம்.

தங்கையே,

இது மாதர்களைப் பிடித்த ஒரு பேய். எந்த நாட்டிலும் பெண்டிர் இப்பேயின் வசப்பட்டுத் தம் புருஷரை மிகப் பாடுபடுத்துகின்றனர்.



ப்பியர், காதையும் மூக்கையும் குத்தி வளையங்கள் தொங்கவிட்டுக் கொள்வதில்லை யாயினும், இடுப்பை ஒடுக்கி, மார்பை விரித்து, கழுத்தைச் சுருக்கி, அடியை வில்லைத்துப் பரப்பித் தைக்கும் ஆடைகளுக்குச் செலவிடுவது கொஞ்சமல்ல. இவ் வாடைச் செலவுக்குக் கொடுக்கச் சக்தியில்லாமையால் எத்தனையோ புருஷர் தம் மனைவியரை விலக்கிக் கொள்ள நேரிடுகின்றது. இப்படிப் பல வம்புகள் மேல் நாட்டில்.

இங்கேயோ, அநேக வீடுகள் இப் பாழும் நகைப் பேச்சால் ஓய் வொழிவற்ற சண்டைக் களமாகவே யிருக்கின்றன. கணவன் மனைவி என்ற இவர்க்குள் இருக்கவேண்டிய அன்பும் நாளடைவில் இதனால் தேய்ந்து விடுகின்றது.

இவையெல்லாம் என்ன? ஏன் இப்படி? நகை காய்த்த மரம்போல் இருக்க வேண்டியவர்தாமா பெண்கள்? இது தான் மாதர்க்கு அழகு தருவதோ? இதுதான் அன்பர்க்கு இன்பமோ? இது பெண்டிர்க்கு நலமளிப்பதா, கேடு பயப்பதா? சிலர், நகையாயிருந்தால் ஏதேனும் ஓர் ஆபத்துச் சமையத்துக்கு உதவுகின்றது. பணமாக இருந்தால் செலவழிந்து போம். ஆதலின் நகை வேண்டும் என்று சொல்லுகிறார்கள்.

, இவர் மனத்தை உற்று நோக்கினால், இவர் சொல் யென்றும், எப்பாடு பட்டேனும் இந்நகைகளை மை அலங்கரித்து, தம்மையொத்த பெண்டிரோ வேறெவரோ தம்மை மதிக்க வேண்டும் என்ற ஒரே எண்ணமே இவரை இம்மாதிரி ஆட்டிக் கொண்டிருப்பதை நன்றாய் அறியலாம்.

பணமிருந்தால் செலவழிந்து போம்; அதற்காக நகை செய்யவேண்டும் என்று சொல்லும் இவர் நகையாகவோ பவுனாகவோ அப்பணத்தை மாற்றிப் பெட்டியில் வைத்துப் பத்

திரம் பண்ணலாகாதா? அதைவிட்டுத் தம்மை அலங்கரித்துக் கொண்டு தெருத்தெருவாய் அலைவானேன்? ஐயோ, இவர் தம் அருமை நாதரை ஏன் இவ்வாறு ஏமாற்றுகின்றனர்? இல்லையாயின், அப்பணத்தைக் கேடற்ற விர்த்தி வழிகளில் இட்டுப் பலனடைவதுதானே?

ஆதலின், இது பொய். பிறர் தம்மைப் பார்த்துப் பெருமைப்படுத்த வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் இவரை இவ்வாட்டம் ஆட்டிவைப்பது. உள்ளது, இவர்க்கு ஆரம்பத்தில் மணம் செய்யும் பொழுது அமைந்ததோடு திருப்தியடைதல் கூடாதா? ஏன் புருஷரைச் செல்லைப்போல் அரித்துக் கஷ்டப்படுத்துகின்றனர்!

இனி, இந்நகைப் பேயால் விளையும் கேடுகள் ஒன்றிரண்டல்லவே. இதன் வாய்ப்பட்ட சிலர் தம் நாயகர்க்குத் தெரியாமல், சிறுவாடு தேட ஆரம்பித்து, வீட்டிலுள்ள சாமான்களை ஒன்றுக்குப் பாதியாகவோ, எப்படியோ விற்கப் பழகிவிடுகின்றனர். இப்பழக்கம் மிகுதிப்பட்டால் அவர்களுக்குப் பேராசை உதித்து விடுகின்றது. பிறகு இன்னதுதான் செய்வது என்ற கட்டு, காவல் இவர்களைவிட்டு விலகி விடுகின்றது.

ஐயோ, எத்தனை மாதர் இவ்வாசை பிடர்பிடித்துத் தள்ள, ரகஸ்யத்திலே வியபிசாரம் செய்யத் தலைப்பட்டு, நாயகன் தெரிந்து கண்டிக்க அவரை விட்டுப் பிரிந்து தனியே சென்று அயலூர்களில் அதையே தொழிலாக வைத்துப் பிழைக்கவும் துணிந்து விடுகின்றனர்!

அன்றியும் இவ்வாறு தம்மை அலங்கரித்துக் கொண்டு இவர்கள் அலைவது, இவர் மனத்தில் கெட்ட சிந்தையோடு இல்லையாயினும் நாளடைவில் தாம் கெடுவதற்குக் காரணமாய் அமைகின்றது. பார், மிகப் பரிசுத்தமானவள், நாயகன்மீது அந்தரங்க பக்தியுள்ளவள், நகையின்மீது ஆசை



கொண்டு, அணிந்து தன்னை அலங்கரித்துக் கொள்கிறாள். நாலு பேர் பார்க்கிறார்கள். ஏற்கெனவே, இவர்-மாதர்- உருவம் அறிவற்ற காமுகர்க்கு ஆசையை மூட்டுவதாகின்றது. அதோடு இந்நகையும் சேர, அவர்க்கு அவ்வாசை மேன்மேலும் பெருக ஆரம்பிக்கிறது.

இதுபற்றியே, பெரியோரும்,

அரும் பெறற் கற்பின் அயிராணி யன்ன
பெரும் பெயர்ப் பெண்டிர் எனினும்—விரும்பிப்
பெறும் நகையாற் பின்னிற்பா ரின்மையே பேணும்
நறு நுதலாள் நன்மைத் துணை.

என்று உத்தமிகள் லக்ஷணம் கூறினர்.

இதனாலேயே பதிவிரதைகளெல்லாம் தம் நாயகர் ஊரில் இருக்கும்போதும், அவருடன் பேசி மகிழும்போதும் அவர் கண்டுகளிப்பதற்காகத் தம்மை அலங்கரித்து, அவர் இல்லாத போதும், அவரை மகிழ்விக்க இயலாத காலத்தும் தம் அணிகளைக் கழற்றி வைக்கின்றனர்.

அம்மா! நகைகளிலே எத்தனை விதங்கள்! எத்தனை இழிவு! காலிலே மெட்டியோ, மிஞ்சியோ, ஒரு வகையான நகை! இது போட்டுக்கொண்டு தாம் வருவதற்குமுன்னரே தண்டோரா போட்டுக்கொண்டு செல்வதைப்போல தமது வரவை ஊரார்க்குத் தெரிவித்துக் கொண்டுவரும் சில பெண்களின் அறியாமைதான் என்னே!

அருமையாகிய கற்பில் அயிராணியாயிருப்பினும், தம்மை எங்கே அன்னியன் விரும்பிப் பார்த்து விடுகிறானோ என்று அஞ்சி, நடையுடை பாவனைகளில் தம்மை அலங்கரித்துக்கொள்ளாது செல்லும் பெண்டிரல்லவோ உத்தமி, கற்புக்கரசி. கலீர், கலீர் என்று செல்வது தானோ மாதர்க்குப் பெருமை! சீ, மிகக் கேவலம்!

மேலும், தம்மை அலங்கரித்துக் கொள்ளவேண்டுமென்ற ஆசை வசப்பட்ட பெண்கள் பலர் இன்றும் பச்சை குத்திக் கொள்கின்றனரே! அடடா! ஊசிகொண்டு, திருடர்களுக்கு நகக் கண்களிலே உண்மை கக்கும்படி இறுத்துவது போல இறக்கவும் பொறுத்துக்கொண்டு, கூலியும் கொடுத்து வருகின்றார்களே.

இவர்கள் தமக்கு ஆபரணம் செய்து அணிந்து கொள்ளப் போதிய பணம் இல்லையாயின், அன்னியரிடத்து இரவலாய் வாங்கியும் தம்மை அலங்கரித்துக் கொள்கின்றனர். இவ்விரவல் ஆபரணங்களோடு நில்லாமல் ஆடைகளிலும் நுழைந்து விடுகின்றது. பின் காலக்கிரமத்தில் நகரங்களிலுள்ள சில பெருமான்கள் பெருமாட்டிகளைப் போல வண்ணானிடம் வாங்கி உடுக்கும் ஸ்திதிக்கும் வந்து விடுகிறார்கள். சிவசிவா! இது கேவலமென்றும் அசுத்தமென்றும் சிறிதாவது இவர்கள் மனத்தில் படலாகாதா? ஒருவர் கட்டிய ஆடையை ஒருவர் உடுத்துவதா! அதிலும், இன்ன ஊரார், இன்ன ஜாதியார், இன்ன நோயார் என்பதொன்றும் இல்லையா? அட, பாவமே! இத்தனை தூரத்துக்கும் இறங்கவேண்டுமா!

தங்கையே, இன்னும் கேள், இவர்கள் செய்கையை! தங்கம் போன்ற விலையுயர்ந்த லோகங்களிலே நகையணிந்து கொள்ள வழியில்லாத இவர், போலித் தங்கப் பூச்சு நகைகளைக் கழுத்திலோ கையிலோ அழகாக அணிந்து கொள்கின்றனர். போலிவேலை மிகுந்து விட்டது! யதார்த்த நாட்டமே மறைந்து விட்டது.

இவர்தம் கொடுமையை எண்ணினால் நெஞ்சம் எரிகின்றது. தற்காலத்திலே வாசனை என்ணெய், ஸோப் முதலியவைகள் நாகரீகத்தின் பலன்களாக வந்திருக்கின்றனவே! இவற்றை இவர் தலையிலோ அங்கத்திலோ திமிர்ந்துகொண்டு

தெருவழியாக நடக்கவும் துணிந்து விடுகின்றனர். இது தெருவில் போகும் மனிதர் மூக்கில் நுழைந்து இவரைத் திரும்பித் திரும்பிப் பார்க்கும்படி கட்டாயப் படுத்துகின்றது. இவையெல்லாம் என்ன? தம்மைப் பிறர் பார்த்துக் கொண்டாடவேண்டுமென்ற அந்தக் கெட்ட சிந்தனையல்லவா இத்தனைக்கும் அஸ்திவாரம்! 'அன்னிய மாதர் முன்னிலையில் தன் பெருமையை விளக்கும் ஒருவார்த்தை கூடப் பேசலாகாது. அது தவறும்' என்ற மஹான்களின் சந்ததிகளா இவர்கள்? இவர்கள் குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புகள்!

தங்கையே, இப்படிப் பல பல கேடுகள்! பல பல தீசர்கள். இவர் தொலையட்டும். நீ இவர் மார்க்கங்களைச் செம்மையென்று மறந்தும் எண்ணிவிடாதே; கனவிலும் கொள்ளாதே. உன் நாதர் சக்திக்கு இயன்ற வகையில் உன்னை அலங்கரித்துக் கொள். பிறர் பார்க்க என்றும் உன்னை அலங்கரியாதே. அவர் மதிப்பு, உனக்கு வேண்டியதே யில்லை. உன் நாதனுக்கு ஆநந்தம் அளிக்கும் வகையில் உன்னை அலங்கரி. உனக்கென்ற சிங்காரத்தையும் விட்டுவிடு. அவர் பொருள் நீ; அவருக்கு இதம் செய்ய வந்தவள் நீ.. அவர் எப்படி ஆணையிடுவரோ, எப்படி அலங்கரிப்பரோ அதோடு திருப்தியடை. ஆபரணம் ஒன்று மின்றி உன்னைக் கொண்டாட அவருக்கு இச்சை ஜனிக்குமேல் அவ்வாறுசெய். வீணே உன்னை உனக்காகவோ, உன் தோழிகளுக்காகவோ பிறர்க்காகவோ அலங்கரித்து மதி கெட்டு நடக்கவேண்டாம்.

## 10. வீண் செலவு.

தங்கையே,

உலகில் பலர் தமது நிலைமையை அறிவதில்லை. தமக்கு இல்லாமல் முடியாத காரியங்களோ பொருள்களோ இவை யென்று மதிப்ப தில்லை. மாசம் பத்து ரூபாய் சம்பாதிக்கும்

நாயகருக்கு வாழ்க்கைப்பட்ட பெண்கள் நூறு ரூபாய் வருமானமுள்ள பக்கத்து வீட்டுக்காரர் செய்யும் செயல்களும், உண்ணும் உணவும், உடுத்தும் உடையும், அணியும் நகையும் வேண்டுமென்று ஏங்கி, அதற்காகத் தமது நாயகரைச் செல்லரித்ததுபோல் அரித்துவிடுகின்றனர். இத்தகையோர் ஊண், உடை, அணி-இவை எதற்கு என்றே கவனிக்கின்றாரில்லை; உணவு தொழிலுக்குத் தக்கவாறு பேதப்படுகிறதென்பதை முற்றிலும் மறந்துவிடுகின்றனர்.

கூலிவேலை செய்யும் ஒருவன் கேழ்வரகுக் கூழும், கம்பஞ்சோறும் தின்றாலே அவ்வேலைகளை அலுப்பின்றிச் செய்ய இயலும். காப்பித் தண்ணீரும் வடித்த நெல்லரிசிச் சாதமும் அவனுக்கு என்ன பயனைத் தரும்? நெஞ்சு வற்றித் தன்னையொத்த வேலைக்காரனோடு போட்டி போட இயலாதுபோய்ச் சோற்றுக்குப் பிற்காலத்தில் திண்டாடவேண்டியது வருகிறது. இத்தகையார்க்கு உடை வெயர்வை படிந்து, தூசி முழுகி, கண்டபடி கையாளுதற்கு ஏற்றதாய் இருத்தல் வேண்டும். இவர்க்கு மெல்லிய 'மல்' வேஷ்டியும் பட்டுத் துண்டும் ஏற்குமா? இப்படியே ஆபரணம் முதலிய இவராளும் பண்டங்களும்.

இவற்றை யோசியாது எல்லோரும் ஒன்றுபோல உடுக்கவும் உண்ணவும் அணியவும் ஆரம்பிப்பதுதான் இவர் [illegible] தீராத தரித்திரத்துக்குக் காரணம்.

இப்பொழுது தரித்திரர் என்பவர் இவரென்று ஒருவரைச் சுட்டிக்காட்ட முடியவில்லை. மிகச் செல்வவான்; மாதம் நூறோ இருநூறோ வருகின்றது. ஆயினும் செல்வவான் பெறவேண்டிய திருப்தியை இவர்மனம் ஒருபோதும் பெறுவதில்லை. ஏன்? தற்காலத்திலே அநாவசியமான பண்டங்களும், அநாவசியமான போகங்களும் அவசியமானவை யென்று



ஜனங்கள் மதிக்கத் தலைப்பட்டனர். உதாரணமாக வீட்டை விளக்குவதற்குப் 'பவர் லைட்', 'காஸ் லைட்', 'மூன் லைட்' என்ற அநேக அநாவசியமான விளக்குகள் ஏற்பட்டுவிட்டன. இரவைப் பகலாக்க விரும்பும் இப்பெரியோர் கருத்து என்னவோ தெரியவில்லை. இப்படிச் செய்யும் இவர், மிகுந்தவெளிச்சம் கண்ணுக்குக் கேடென்று சொல்லி, மங்கின வெளிச்சமுள்ள மெழுகுவர்த்தி விளக்கைப் படிப்பதற்கோ எழுதுவதற்கோ துணையாகத் தேடுகின்றனர்!

சில பணக்காரர் வீட்டு மாடிகளிலே தூசி துடைக்கப் பெறாத எத்தனையோ மஞ்சங்களும், 'சோபா'க்களும் நாற்காலிகளும், 'சரலாந்தர்களும்' நிறைக்கப் பட்டிருக்கின்றன. பணம் அதிகம் தேடினால் விரையம் செய்ய இதுதானா வழி? உபயோகமான வழிகள் வேறில்லையா? அவற்றிலே செலவு செய்து அத்தொழிலாளிகளை ஆதரித்தல் கூடாதா?

உணவு வகைகளோ சொல்லவேண்டாம். அவ்வளவு சாரமற்றவைகள். ஆயினும் விலையேறப் பெற்றவைகள். சாதத்தை வடித்தால் சத்துக் குறையும் என்றெண்ணி, பொங்கிக் கொட்டி, சகல தான்யங்களின் ரஸமும் நிறைந்த பருப்பைச் சேர்த்துண்ணும் உணவன்றோ, இந்நாட்டிலே அறிவாளிகள் உண்டு களிப்பது? அதை உல்லங்கனம் செய்துவிட்டு, இரண்டு நிமிஷத்துக்கு வெறியேற்றி மூன்றாவது நிமிஷத்தில் உள்ள பலத்தையும் குறைக்கும் காப்பிபோன்ற பானங்களைக் கொள்ளும் பெரியோர், அவற்றால் விளையும் கேடுகளை வைத்திய நூலார் கூறியும், தாங்களே நேரில்கண்டும், என் விடமாட்டாது பரிதபிக்கிறாரோ தெரியவில்லையே.

உடையைப் பற்றிக் கேட்பானேன்? பறவைகளின் இறகை அணியாகக் கொள்ளும் காலம் இது! இதிலே அவ

சியம் அநாவசியம் என்ற பேச்சுக்கே இடமில்லை. இவை நிற்க.

தங்கையே, நீ இம்மாதிரி தட்டுக்கெட்ட மார்க்கங்களில் இறங்கி, வீண் செலவில் பழகி உனக்கும் உன் நாதனுக்கும் துன்பத்திற்குக் காரணமாகாதே.

உனக்கு உன் வேலைக்குத் தக்கவாறு, உன் தேச சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றபடி, உணவுவேண்டும். குளிரால் விரைக்கச் செய்யும் இடங்களில் வசிப்பவர்க்கு வேண்டிய பானவகைகளும் ஆகாரங்களும் உனக்கு ஏற்கா. அவற்றைப் பெருமையென்று கருதி ஏமாறாதே. அவை வீண்செலவுக்குக் காரணமேயன்றிப் பலம் தருபவையல்ல.

இனி இவற்றிற்கெல்லாம் மேலாக உன்நாதன் வரும்படியைக் கவனிக்கவேண்டும். அதற்கு இயன்ற விதங்களிலெல்லாம் நீ செலவு செய்யலாம். சந்தோஷத்திற்கும் திருப்திக்கும் எங்கேயும் இடமுண்டு; எங்கேயும் இடமில்லை. உள்ளதை வைத்துத் திருப்தியடையும் மனமுள்ளவர்க்கு மிகச் சிறு வருமானமும் போதும். திருப்தியற்ற மனமுடைய ஓநாய்களுக்கு உலகமெல்லாம் கிடைத்தாலும் பின்னும் தீராத் தாகமே.

சிலர் ஊரார் தம்மை மதிக்கவேண்டுமென்று எண்ணி உண்பது, உடுப்பது, அணிவதற்குக் கடன்படுவதோடு கலியாணம் போன்ற விசேஷ காலங்களிலும் தமது சக்திக்கு மிஞ்சிய செலவு செய்து துன்பத்துக்கு ஆளாகின்றனர். வருமானத்துக்கு மிஞ்சிக் கடன்வாங்கிச் செலவு செய்யும் இவர் எப்படி அக் கடனை நிவிர்த்தி பண்ணுவாரோ தெரியவில்லை. பிறர் மதிப்பைக் கருதி இவ்வாறு கடனுக்காளான இவர் நெஞ்சம் ஓயாத கவலையால் அரிக்கப்பட்டுத் தூங்குவதற்காக



அமைந்த இரவிலும் அயராது அதைப்பற்றியே எண்ணியெண்ணிப் புண்ணாகின்றது. அன்றியும் பின்பு கடனைத் தீர்க்க வழியில்லாமல் போகவே, கடன்கொடுத்தார் செய்யும் சங்கடங்களுக்கெல்லாம் உள்ளாகி மானம் கெடுகின்றனர். சிலர் இத் துன்பத்தை ஆற்றாது ஊரை விட்டு ஓடவும் தலைப்பட்டு, தமக்கென்ற ஊரையிழந்தும், தம்மீது பக்ஷமுள்ள உற்றார் உறவினரைப் பிரிந்து அலைந்து, கடலில் காற்றில் அடிபட்டு நிலையில்லாது அலமரும் கப்பலைப்போல அல்லாடிப் பரிதபிக்கின்றனர்.

தங்கையே, வீண்செலவால் இப்படிப் பலபல சங்கடங்கள் ஏற்பட்டு, முன்யோசனையில்லாத மாந்தரை வாட்டி வருத்திவிடுகின்றன.

ஆதலால், நீ இவற்றை எண்ணிப்பார்த்து வீணான ஆடம்பரங்களில் சிந்தை செய்யாது உன் கணவன் வரும்படிக்கேற்ப அளவறிந்து, அளித்துண்டு சுகமாகக் காலங்கழிக்க வழிபார்.

---

# மூன்றாம் பாகம்.

## மாமி-மருகி.

தாயே,

இதுவரை நீ குடும்பத் தலைவியாயிருந்து உன் நாதன் வருவாய்க்கேற்பச் செலவுசெய்து குடும்பத்தை நடத்திவந்தாய். குழந்தைகளுக்கு வேண்டிய கல்வி, ஒழுக்கம் முதலிய அவசியமான விஷயங்களில் அவர்களை நன்கு பயிற்றுவித்தாய். ஊரா ரெல்லாம், "இவனே பிள்ளை; பழிச்சொல் வாராதபடி நடக்கும் உத்தமன் இவன்; இவனைப் பெறுதற்குத் தாய் தந்தையர் என்ன தவம் பண்ணினரோ?" என்று உன் மக்களைக் கொண்டாடக் கேட்டு, பத்துமாசம் சுமந்தலுத்துப் பின் மடியில் குழந்தையைக் கண்ட அக்காலத்திலும் அதிகமான சந்தோஷத்தில் மூழ்கிக்கொண் டிருக்கிறாய். நீயும் அநுபவிக்க வேண்டிய லௌகிக இன்பங்களையெல்லாம் உன் சக்திக்கு இயன்றவரை அநுபவித்து முடித்தாய். உன்னை அறியாமலே எதிலும் வெறுப்பு உனக்கு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது. உன் நாதனும், 'இனி உலகில் நடக்கும் போட்டிப் போரிலே தலையிட்டு உணவு தேடுதல் ஏன்? ஏதோ இருப்பதை வைத்துத் திருப்தியடைவோம். எல்லாம் இனிக் குழந்தைகள் பாடுதான்" என்று எண்ணிப் பிரவிருத்திகளை ஒடுக்க உத்தேசித்து விட்டார்.

இனி நீ செய்யவேண்டிய தென்ன? இதுவரை வீட்டுத் தலைவியாயிருந்து அதிகாரம் செய்தது போதாதா? போதும். இனி அதற்கொரு ஆள்தேடி, அவள் தலையிலே அப்பொறுப்பெல்லாம் தூக்கிவைத்து நீ சுகமாயிருக்க வழிபார்.

அம்மா, உன் மகனுக்குச் சுமார் 25 வயதாயிற்று. படிக்க வேண்டியது படித்து, சம்பாதிக்கும் வழிகளும் தெரிந்து



கொண்டான். அவனுக்குத் தக்கதோர் துணை தேடிக்கொடுத்து, அவள் கையிலே குடும்பக்காரியங்களை ஒப்புவி.

ஆனால், இங்கே, நீ கவனிக்கவேண்டிய காரியங்கள் பல உண்டு. பிள்ளைகள் தமக்கேற்ற பெண்களையோ, பெண்கள் தமக்கேற்ற புருஷரையோ அறிந்து கொள்ளச் சக்தியற்றவர். அவரை அதில் தலையிடவிட்டால், விளக்கின் பிரகாசத்தைக் கண்டு மயங்கிவிழும் விட்டில்போலத் தமக்கே அழிவு தேடிக் கொள்வர். அது வேண்டாம். நீயும் உன் நாதனும் இதில் முழு மனதுடன் முயற்சி செய்தல்வேண்டும்.

முதலாவதாக, உங்கள் சொந்த லாபம் ஒன்றையும் இதில் நீங்கள் எதிர்பார்க்கக் கூடாது. உன் மகன் இன்பமாய்க் காலம் கழிப்பதற் கேற்ற குணவதியாய், அங்க வீனமற்ற, பழிப்பற்ற அழகுள்ளவளாய், நற்குலத்திற் பிறந்தவளாய், தாய் தந்தையர்க்கு அடங்கி நடப்பவளாய், வேறு குறைகளற்ற புண்யவதியாய்த்தேடி அவனுக்கு மணம் செய்துவைக்க வேண்டும். உங்களுக்குப் பணிவிடை செய்யவேண்டும் என்ற எண்ணத்தைப் பெண் தேடும்பொழுது அறவே விட்டுவிடுங்கள். நீ உன் சகோதரர் மகளாயிருந்தால் நல்லதென்றும், உன் நாதன் தன் சகோதரி மகளாயிருந்தால் நல்லதென்றும் எண்ணும் அந்தச் சுயநய குணத்தை ஒழித்துவிடுங்கள். அப்படி அமைந்தால் உத்தமந்தான். இல்லாவிட்டால் என்ன செய்வது? அதற்காக உன் மகன் சுகத்தையெல்லாம் கெடுத்துவிடுவதா? அவனல்லவோ கூடிக் கடைசிவரை வாழ்பவன்? ஆனால் வேறு எங்கேயோ மிகத் தூரமான சம்பந்தம் வேண்டுமென்று எண்ணாதே. சிலர் அவ்வாறு படித்தவனைத் தேடிப் பார்க்கிறோம் என்று, தமது குடும்ப மாதிரிகளுக்கு முற்றிலும் வேறுபட்ட அநுஷ்டானங்களுடைய குடும்பத்தில் மணந்து, பிள்ளையும் பெண்ணும் தமது சொந்தபாஷையில் பேசிக்

கொள்ளக் கூடச் சக்தியற்றவராகச் செய்துவிடுகின்றனர்! சற்று விலகின தூரபந்து சம்பந்தம் புத்திரோற்பத்திக்கு மிக நல்லது. இதை நோக்கியே, நமக்குள் உயர்ந்தோர் கோத்திரம் விட்டுப் பெண்கொள்வது. ஆயின், மிகத் தூரசம்பந்தம் வேண்டுமென்று எண்ணவேண்டாம். பெண் வழிச் சம்பந்தம் விலகாம லிருக்கலாம், ஆண்வழிச் சம்பந்தம் சற்று விலகியதா யிருக்கவேண்டும்.

ஜோசியர் சௌகரியத்தையும் உங்கள் சௌகரியத்தையும் ஒழித்துவிட்டு, ஜாதக ரீதியாக, கணம் முதலிய பொருத்தங்கள் மிகப் பொருந்தப் பெற்றதாயிருக்க வழிதேடுங்கள். ஜாதகத்தை இகழ்வார் இகழட்டும். நமக்கு அதுதான் இன்ப வாழ்க்கைக்குக் கூடியவரை முற்குறி. அது கிரமமாகக் குறிக்கப்பட்டதாயின், ஜோசியர் பலனை எள்ளுக்காய் பிளந்தது போலச் சொன்னால், வரும்படி கெட்டுவிடுமோ என்று எண்ணாத நடுநிலையரா யிருப்பாராயின், அந்த ஜாதகம், இதற்கு முன்னே இச்சரீர சம்பந்தமான பிராரப்த வினை இதுவென்று சுட்டிக்காட்டும் வல்லமை வாய்ந்தது. ராமசந்திர பகவான், புத்தர்போன்ற மஹான்கள் ஜாதகங்களெல்லாம் மெய்யாகக் காரணமென்ன? யேசுகிறிஸ்துவின் பிறப்பு இங்கே யென்று சாஸ்திரிகள் சொன்னதும், அதை நக்ஷத்திரம் காட்டியதும் புறமதத்தாரும் கூட ஒப்புக்கொண்ட உண்மைக ளல்லவா? ஆகலின் அறியார் சொல்லும் சொற்களுக்குச் செவிகொடுத்து ஜாதகத்தை உல்லங்கனம் செய்யவேண்டாம். கூடியவரை அதில் ஏற்பட்ட பொருத்தங்களெல்லாம் பொருந்தப் பாருங்கள். சுயலாபத்தைக் கருதாதேயுங்கள். பணம் பெரிதென்றும், படிப்புப் பெரிதென்றும், குலம் பெரிதென்றும் எண்ணி, உங்கள் பிள்ளையின் ஸ்திதிக்கு ஏற்றதல்லாத இடத்தில் மணஞ்செய்து விட்டால், பிற்காலத்தில் அவன் அவமதிக்கப்



பட்டு, மானமிழந்து பரிதவிப்பான். ஆதலால் பெண்தேடும் விஷயத்தில் மிக ஜாக்கிரதையா யிருங்கள். வஞ்சகம், பொறாமைபோன்ற தீக்குணங்களில் பழகிய வம்சத்தையும், காசம் போன்ற தொத்து வியாதிகளில் சிக்குண்டுழலும் குடும்பத்தையும் அறவே ஒழித்துவிடுங்கள்.

இனி, நீ அம் மருமகளை நடத்தும் மாதிரியைக் கேள்.

அம்மா, இனி உன்னுடைய சுகங்களைப் பெரிதென்று கொள்ளுதல் ஏற்றதல்ல. உன்னை அறியாமலே சுக இச்சை நழுவி, விரக்தி சிறிதேனும் இதற்குள் ஏற்பட்டிருக்கும். இதுவரை நீ அநுபவித்தது போதும்; 'இனி ஆசைப்படாதே யென்று கடவுளே உனக்கு ஆக்ஞை பிறப்பித்து விட்டார். தனக்கு வேண்டும் என்ற இந்தப் பேராசை உனக்கு ஒழிந்தால் எல்லாம் சரிப்பட்டுவிடும். பிறகு மாமிக்கு ஏற்ற மருமகள்தான் அவள்.

மேலும் உன் பெண்களெல்லாம் அடுத்த வீட்டுக்குப் போய் விட்டார்கள். அவர்களும் சுகமாக வாழவேண்டும். ஆதலால் இவளையே உன் மகளென்றெண்ணி, அவர்களிடத்து அன்பு கொள்வதுபோல் கொண்டு இவள் குற்றங்குறைகளை மன்னித்து, குணத்திலும் ஒழுக்கத்திலும் இவளை உயர்த்து. விரோதியென்று எண்ணிவிடாதே. அவளே இனி வீட்டு எஜமாட்டி; உன் மகள். நீ அவளுக்கு இதமானவை கற்பித்துக் கொடுக்க வேண்டிய தாய்.

அவள் வயதில் மட்டிலுமன்று; அறிவிலும் மிகச் சிறியவளாகவே யிருக்கிறாள். உன்னைப்போன்ற பெரியாரிடத்தும் மற்றவரிடத்தும் நடந்துகொள்ளும் மாதிரி ஒன்றும் அறியாள். சிறு பிள்ளைத் தனமாகக் காரியம் செய்வாள். அதற்காக அவள்மீது கோபம் கொண்டு வெறுக்க வெறுக்கப் பேசாதே. சிறியோர்—அறிவிற் சிறியோர் குற்றம் செய்தல்

இயற்கையே. குற்றம், குணம் என்று அறியத்தக்க உலக அநுபவம் அவளுக்கு இன்னும் ஏற்படவில்லை. ஆதலால் அவளுக்கு இதமான வழிகளில், இதமான வசனங்களால் புத்திகூறு. அவள் திருந்தி, உன் மகனோடு, தன் குடும்பத்தைச் செவ்வையாக நடத்தி வரவேண்டியது உன் நோக்கமல்லவா? அதற்கு மிகுந்த அநுபவம் வேண்டும்.

உன் மருகி படித்திருக்கலாம். ஆயின் படிப்பு அநுபவத்தைத் தூக்கிக் கொடுத்து விடாது. அநுபவமில்லாதார் 'அறிந்தோம்' என்று சொல்வது வெறும் வார்த்தை. ஆதலால் அவள் விரைவில் அநுபவ அறிவு பெறும்படி செய்து அவளைக் குணசாலியாக்கு. எத்தனை தடவை அவள் வீட்டுக் காரியங்களைச் செய்யத் தவறினாலும், அதற்காகக் கடிந்து சொல்லாமல், இன்சொல்லால் அவள் திருந்துமாறு, திருந்த வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு புத்திகூறு. சிறியோர் பிழைசெய்வதும், பெரியோர் பொறுப்பதும் இயல்புதானே.

ஆனால், அவளுடைய சகவாசத்தைப்பற்றி மிகக் கவனமாயிரு. ஒழிந்தநேரங்களில் ஒழுக்கங்கெட்டவரோடும், வீணரோடும், அற்பரோடும் சேரவிடாதே. சகவாசமே ஒருவரை உயர்த்துவது. சகவாசமே ஒருவரைத் தாழ்த்துவது. ஆதலால், இத்தகையாரோடு சேரவிடாமல் வேலை தீர்ந்த சமையம் உன்னருகே வைத்துக்கொண்டு, சீதை, சாவித்திரி, திரௌபதை போன்ற உத்தமிகளின் சரித்திரங்களைப் படிக்கச்செய்து, அவற்றின் ரகஸ்யார்த்தங்களை உள்ளத்திலே பதியுமாறு விளக்கு. மனிதசுபாவம் கேட்டையே நோக்கிச் செல்கின்றது. கெடுமதியும் கெட்டார் நேசமும் காந்தத்தின் முன் ஊசி போல விரைந்து பற்றும். ஆதலால் அவரைக் காண்பதற்கும், அவரோடு சம்பாஷிப்பதற்கும் இடமில்லாதபடி செய்ய வேண்டியது உன்னைப் பொறுத்த கடமை. கேட்டிற்கும்,



[illegible]க்கும் இடமில்லாதபடி செய்வதுதான் உண்மையாக ஒருவரை நல்லவராக்க விரும்புவார் செய்யவேண்டிய முதல் வேலை.

இதனாலேதான் ஓயாது வேலைசெய், கர்மம்செய் என்று பெரியோர் சொல்வது. வேலைசெய்வதை நிறுத்தினாலோ சோம்பல் மெதுவாக நுழைந்துவிடும். சோம்பேறியின் உள்ளம் தீய சிந்தனைக்குப் பிறப்பிடமல்லவா? உலகத்தில் தீயவர் பலரும் சோம்பேறிகளாயிருப்பது உனக்குப் பிரத்தியக்ஷமல்லவா? ஆதலால் உன் மருகியோ நீயோ இத்தகைய சோம்பருக் கிடங்கொடாமல், ஒழிந்த நேரங்களில் நல்ல உத்தமிகளின் சரித்திரத்தைப் படிக்கவோ கேட்கவோ செய்யுங்கள். தூங்கும் பொழுதும் அவர்கள் சரித்திரத்தைப் பற்றியதாகவே உங்கள் கவனம் இருக்கட்டும்.

இனி, மிக முக்கியமான ஒருவிஷயம் கேள். உன் மருகியிடத்து அன்பு கொண்டுவிடு. எல்லாம் சரியாம். அன்பு சகல குற்றங்களையும் குணமாக்கும்; வெறுப்பு குணங்களையெல்லாம் குற்றமாகக் காட்டும். உதாரணமாக, ஒருத்தி பிள்ளை ஊராரோடு வலியச் சண்டை செய்துகொண்டு வரினும், பார்த்திருந்தவர் நடுநிலையாக அவன் குற்றத்தைச் சொல்லினும், அவளுக்கு அது ஏற்காமல், பிறர்மேலுள்ள கோபம் காரணமாக அவரை அடிப்பதற்குப் பதிலாக, தன் மகனை அடித்து "ஓ, கழுதை, உன்னையென்றால் எல்லோரும் அப்படித்தானே சொல்வார்கள். இல்லாததும் நீயென்றால் இருக்குமே" என்று சொல்லி இழுத்துக்கொண்டு போவதைப் பார்த்திருப்பாயே. அன்றியும், எப்பொழுதேனும் ஒருசமையம் உனக்கும் உன் மருகிக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு, பின் அவள் வலியவந்து, மிகவும் மரியாதையோடு பேசினாலும் நீ அவையெல்லாம் 'கேலிவசனம்' என்று எண்ணியிருப்பாயல்லவா?

"மாமி, நான்செய்தது தவறு. மன்னியுங்கள்" என்று காலைப் பிடித்து வேண்டினும் சில நீலி மாமியார், "இப்படி வேறு அவமானப்படுத்துகிறாயோ? கள்ளி, எல்லாம் பாசாங்கு. விழுவார் காலில் போய் விழுபோ. என் காலில் ஏன் விழுகிறாய்?" என்று சொல்லி முகத்தைத் திருப்பிக்கொண்டு போவதை நீ எத்தனை முறையோ பார்த்திருப்பாயே. உனக்கும் உன் நாதனுக்கும் எத்தனையோ முறை குடும்ப மேற்பார்வை முதலிய விஷயங்களில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டுக் கொஞ்சம் ஒருவரை யொருவர் வெறுத்தும் பார்த்திருப்பீர். பின் உங்களுக்குள் பரஸ்பரம் ஏற்பட்டிருக்கும் அன்பால், அவ்வம்புகள் உடனே மறக்கப்பட்டு, பின் ஒருவரை யொருவர் பார்க்கும் அடுத்த நிமிஷமே இந்த விவாதம் ஏற்படாதவரைப்போலக் கூடிக்கொண்டீர்க ளல்லவா?

இப்படி அன்பில்லாதார் சொல்லும் நல்ல வார்த்தைகளும் தீயனவாகி விடுகின்றன. அன்புள்ளார் கூறும் கடுமொழியும் இனியமொழி என்று கருதப்படுகின்றது.

ஆதலால், உன் மருகியை, உன் மகளினும், உன் மகளினும் நெருங்கியவள் என்று எண்ணிவிடு; உன் வாழ்க்கை மிக இன்பமயமாகி மிருந்த நன்மை பயக்கும். அவள் அறியாமையால் செய்யும் தவறுகள் உன் கண்ணிற் படவேமாட்டா.

அம்மா,

நம் நாட்டுக்குரிய புராதனமான சில வழக்கங்கள் மனித ஜாதிக்கே இன்ப வழிகளாக, அறிஞர் எவரும் கொண்டாடத்தக்க மஹோன்னத நிலையில் இருக்கின்றன. சொல்கிறேன் கேள். உன்னைப் போன்ற பருவத்திலுள்ளார் இல்லறதர்மத்தை இனிக்குறைவின்றி நடத்தற்கேற்ற சக்தியற்றுத் தள்ளாடுகின்றனர். உன் நாதன் இனி உலக விவகாரங்களிலே



[illegible]பாலத் தலையிட வலிமையின்றி, இளைப்பாற வேண்டுமென்றெண்ணி ஏங்குகின்றனர். இம் மன நிலையிலுள்ள உங்களுக்கு ஏற்றதான வானப் பிரஸ்தம் என்ற வாழ்க்கைபேதம் ஒன்று உண்டு. இதைக் கைக்கொண்ட பெரியர் காட்டிற் போய், காய்கனி கிழங்குகளை யுண்டு, ஈசுவரனை அடைவதற்கான வழியை அப்பியசிப்பது வழக்கம். நாட்டில் இருப்பாராயின், உலக சிந்தனைகள் இவரது உயர் நோக்கங்களை வளரவொட்டாது கெடுக்கும். அவர் நோக்கம் வளர்வதற்கு ஏற்ற நிலம் காடுதான். அன்றியும் இதுவரை அன்பு என்ற அருளின் ஆரம்பநிலையிலேயே இவர்கள் இருந்து வந்தனர். தம்மைச் சார்ந்தவர்க்குப் பணத்தாலோ, இனத்தாலோ உதவிசெய்து வந்த இவர், இனி எல்லோர்க்கும் தமது அருளைவிரிக்க அவாவுகின்றனர். இது பணத்தாலும் இனத்தாலும் ஆகாது. ஒரு குடும்பத்தோடு தம்மைக் கட்டுப்படுத்தும் எவரும், விரிந்த உலகத்திற்கு உதவிசெய்ய இயலாது போவர். இதனாலேயே பெரியோரும் தமது குடும்பப்பற்றை உதறிச் சந்யாசம் மேற்கொள்கின்றனர்.

மேலும் பணவுதவியும் இன வுதவியும் ஒரு சிலர்க்கே உடயோகமாகும். பரந்த உலகத்திற் கெல்லாம் இவற்றால் உதவல் இயலாது. ஆயின், அறிவாலே உலகம் முழுமைக்கும் உதவிபுரியலாம். இதற்கான அறிவுச்செல்வம் வேண்டாமா? அதைத் தேடித்திரட்டிய பின்தானே செலவு செய்யத் துணியலாம்? கையிருப்பில்லாதார் எதைச் செலவுசெய்வர்? அதற்காகவே, அத்தேட்டத்தைப் பூரணமாக்கும் பொருட்டே, காட்டிற்குச் சென்று, தனியிடம் தேடி, ஏகாக்கிரசித்தனாய், மனைவி பணிவிடைசெய்ய, தான் யோகத்தமர்வது. இவ்வாறு தேடிக்குவித்த திரவியத்தைப் பங்கிடவிரும்பியே அடுத்த ஆச்சிரமமாகிய சந்யாசத்தை மேற்கொள்வது. இதைத்

தலையிலே கொண்டு தனக்கென்ற ஊரென்றில்லாது தனக்கென்ற இனமென்றில்லாது எவ்வூர்க்கும் சென்று எவ்வினத்தார்க்கும் ஞானோபதேசம் செய்வர். இப்படிச் செய்த பெரியரே புத்தர் முதலியவர். இவ்வாறு அன்பை விரித்து அருளாக்கி, அந்நிலையே நிலையாகச் சிந்தையற நின்ற பெரியோர் நம் நாட்டில் கணக்கிறந்தோர் உண்டு. இப் பெருநிலைக்கு இரண்டாம் படியே இல்லற தர்மம்.

பார்த்தாயா, இதிலுள்ள நன்மையும் உயர்வும். முதலில் இச்செய்கை வயது சென்ற உன்போன்றாரைக் குடும்பக் கவலையினின்று நீக்குகின்றது. இரண்டாவதாக, சொற்ப வரும்படியும், புது அநுபவ இச்சையுமுள்ள பால்யர்களுடைய சௌகரியத்துக்கு இடறு கட்டைகளாகக் குறுக்கே நின்று அவர்களால் இகழப்பட வேண்டியதில்லை. மூன்றாவதாக பூமிக்குப் பாரமும் சோற்றுக்குச் செலவுமாக நடத்தும் கேவல வாழ்க்கை ஒழிந்து தொலைகிறது.

தற்காலத்திலே பெரிய பெரிய அறிவாளிகளெல்லாம், "ஐயோ! ஜனங்கள் இப்படிப் பூமியில் பல்கிக்கொண்டுவந்தால் உணவுக்கு என்ன செய்வது? உணவுப் பொருள்கள் காணாமல் அருமையாய்ப்போய் விடுமே; என்ன செய்யலாம்? பிள்ளைகள் அதிகம் பல்காதபடி சிசுஹத்திகள் செய்ய நூதனமான வழிகள் கண்டு பிடித்து உலகத்தாரைக் கையாளச் சொல்லலாமா? இல்லையேல், ஒவ்வொருவரும் இத்தனை பிள்ளைகளுக்கு மேல் பெறுதல் கூடாது என்று சட்டம் ஏற்படுத்தலாமா? அதுவும் இல்லையேல், இக்கிழடுகளை ராஜாங்கத்தார் கையிலே ஒப்புவித்து, அநாதைகளுக்கு உதவுவதுபோல இவர்க்கும் ஏதேனும் உபகாரச் சம்பளம் உதவும்படி கேட்கலாமா?" என்று இப்படி எண்ணாத தெல்லாம் எண்ணி ஒன்றும் வழிகாணாது எங்கும் இவர்கள் ஏக்கமும் ஒழியும்.



இவற்றிற்கெல்லாம், மேலாக, மெய்வாழ்க்கையாகிய தன்னை அறிதலுக்கும் இது தக்க வழியாகும்.

இதுபோன்ற பல நன்மைகளுக்குக் காரணமாயிருந்த வானப்பிரஸ்த ஆச்சிரமம் தற்காலத்தில் அடியோடு தொலைந்தது. சந்யாச ஆச்சிரமமோ கஞ்சியில்லார்க்கு மேற்போர்வையாயிற்று. பிரமசரியம் குழந்தைகளுக்கும், நபும்ஸகர்க்கும் தமது சரீரத்தின் பலத்தையும், தசையழகையும் காட்டிச் சம்பாதிக்கும் 'பயில்வான்'களுக்கும் உரிமையாயிற்று. அந்த நல்ல உயர்ந்த வழக்கங்களெல்லாம் மறைந்து மடிந்தன. நிற்க.

அம்மா, இப்பொழுது இவற்றையெல்லாம் பிரமாதமாக எண்ணிப் பேசவருபவரைப் பித்தர் என்று கொள்ளும் காலம் இது! நாடோப்பன செய்ய வேண்டியதுதான். ஆனாலும் இளம்பருவம் அமைந்த உன் மருகியோடு நீ போட்டி போடுதல் தகாது. அதை அடியோடு நிறுத்திவிடு. ஆதலால் உனக்கான சில காரியங்களை மட்டும் கவனித்துக் கொண்டு, கிருஷ்ணா, ராமா என்று ஈசுவர நாம பஜனையே செய்து கொண்டிரு.

ஆயினும் உன்னாலே ஆகும் இரண்டொரு வேலைகளும் சொல்லுகிறேன், கேள்.

உனக்கு உலக அநுபவம் மிகுதியாய் உண்டு. குழந்தைகளை நீயும் பெற்றிருக்கிறாய். மற்றவரும் பெறப் பார்த்திருக்கிறாய். அச் சிசுக்களுக்கு அடிக்கடி ரோகங்கள் வந்து வாதனை செய்ய அவற்றைக் குணப்படுத்தியு மிருக்கலாம். இவை வாராதபடி செய்யவல்ல வழிகளும், வந்தபின் இவற்றை எளிதிலே குணமாக்கவல்ல மருந்துகளும் உனக்குத் தெரிந்திருக்கின்றன. இதை உன் தொழிலாக வைத்துக்கொள். சுருக்கமாக, நீ இப்பொழுது வீட்டு வைத்தியர். குழந்தைகளுக்கோ பெரியோர்க்கோ வரும் வியாதிகளைக் கூடியவரை ஆகார

பேதத்தாலேயே குணப்படுத்தத்தக்க வழிகளெல்லாம் உனக்கு வாய்ப்பாடமா யிருக்கும். ஆகையால் அது செய்.

ஆனால், இதில் ஒன்று மிக முக்கியமானது. நீயும் அறிவாய். ஆனாலும் சொல்கிறேன். சிசுக்களுக்கு 'ஆமணக்கு நெய்' அல்லது விளக்கெண்ணெய் கொடுப்பது நமது நாட்டில் எவரும் அறிந்த ஒரு சாதாரணமான வைத்தியம். இதைச் சாதாரணமென் றெண்ணி மற்றக் காரியங்களைப்போல அசட்டை பண்ணிவிடல் கூடாது. பெரிய பெரிய வைத்தியரெல்லாம் இப்பொழுதே இதனுடைய பெருமையைக் கண்டு வருகின்றனர். இதைப் பலவகையிலே வடிக்கின்றனர். ஆனாலும், ஒரு குணம் மாத்திரம் அதற்கு ஏறத்தாழ, பொதுவாக உண்டு. அது வயிற்றிலுள்ள கசடுகளை யெல்லாம் வெளிப்படுத்துவதோடு, தாய் வயிற்றிலிருந்த காலத்தில் சிசுவுக்கேற்பட்டுள்ள உஷ்ணத்தைக் குறைத்து ஆகாரமுமாகின்றது. அதனால் அதன் பெருமையைப்பற்றி என்ன சொல்வது!

ஆதலால், இப்படி அருமையான சில ஔஷதங்கள் உனது அநுபவத்துக்கு வந்திருக்கும். அவற்றை யெல்லாம், ஆற அமர யோசித்துப் பிரயோகஞ்செய்து, நோயற்ற சுகாலயமாக வீட்டைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது உனது பொறுப்பு.

இனி, அக்குழந்தைகளுக்கு அதிபால்யத் தோழியாயிருப்பவளும் நீயே. அக்காலத்தில் உனது குணங்களே நன்றாய் அமையுமாகலின் நீ கொள்ளவேண்டிய குணங்களைப்பற்றி மிகவும் ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்.

மாந்தர்க்குப் பொறாமை, ஆசை, கோபம் முதலிய சில இழிகுணங்கள் உடன் பிறப்பாய் அமைந்திருக்கின்றன. அவற்றால் வரும் கேட்டைப் பெரியோர் பலவகையிலே விளக்கியிருக்கின்றனர்.



ஆயினும், பொறாமையில்லாத மாந்தரே யில்லை யென்று பெரியோர் சொல்வது உண்மையானால், மனித ஜாதிக்கு அது எவ்வளவு கேவலமாகும் என்பதை நீயே யோசித்துப்பார். சுவாமி விவேகாநந்தர் பொறாமை மனித ஜாதியையே பிடித்ததோர் பீடை, சாபம் என்கின்றனர். அதிமேதாவிகள், மிக்க குணவான்கள் என்று சொல்லும் பெரியோரிடத்திலும் இக்குணம் மிக மென்மையாய், நீர்மேல் பாசிபோல் படர்ந்திருக்கின்றது. அவருக்கும் அவரை யொத்த பெரியோரைப் புகழ்ந்துபேசக் கேட்கப் பொறுக்கவில்லை. தம்மிலும் ஒரு விஷயத்தைத் தெளிவாக எடுத்துப் போதிக்கும் ஒரு பெரியரைக் கண்டால், பொறாமல், அவர் நடத்தையிலோ பேச்சிலோ ஒரு குற்றம் கற்பிக்க அவர் மனம் அவாவுகின்றது. இத்தகைய பொறாமையாலேயே சில மாமியரும், தமது அதிகாரப் பதவியைத் தம் மருகியர் கையில் கொடுக்க வருந்துகின்றனர்.

இக் குணவசப் பட்டார் மனம் புழுங்குவதை ஒருமுறை உற்று நோக்கிய எவரே இதனை வைத்திருக்கச் சம்மதிப்பர்? வைத்திய நூலார், இப்பொழுதுதான் குன்மம் முதலிய பல "கர்ம வியாதிகள்" இக் கேடு கெட்ட குணத்தால் விளைகின்றன என்று கண்டு தெளிந்திருக்கின்றனர். முன்னெல்லாம் இக் கெடுகுணங்களுக்குப் பலனாக மறுமையிலே, அடுத்த ஜென்மத்திலே அநுபவிக்க வேண்டியதுவரும் என்று சொன்ன நீதியாளர்கள் வாக்கை உல்லங்கனம் செய்து வந்ததுபோல இனி அசட்டை செய்தல் கூடாது. இப்பொழுதே, இந்த க்ஷணத்திலேயே, மனத்தை இக் கெடுகுணங்கள் வாட்டிச் சரீரத்திலும் பல விகாரங்களை விளைத்து விடுகின்றன என்று நீயே கண்கூடாகக் கண்டு தெளியலாம்.

இப்படியே கோபமும். கோப வசப்பட்டார் மனம், சில சமையங்களில் சில நாட்களுக்கும் தமது சமநிலை பெறாமல்,

விஷயங்களை விசாரிக்கும் திறனை அறவே இழந்துவிடுகின்றது. சரீரமோ, கோபச்சூட்டினால் ரத்தத்திலுள்ள நீர் ஆவியாக மாறிக் கண்ணிலும் மூக்கிலும் புகையாய் வர, உலர்ந்து, இரத்த ஓட்டம் மந்தமடைய, பல நோய்களுக்குள்ளாய் வருந்துகின்றது. ஐயோ, சந்தோஷத்திற்காகவே இரவு பகல் ஓயாது பாடுபடும் மாந்தர், பிறரைக் கோபிப்பதால் தமது சந்தோஷத்தை அறியாமல் இழக்கின்றனரே! முகம் சிவந்து விடுகின்றது; கண் ரத்தம் நிறைந்து கொவ்வைப் பழம்போலாகின்றது. உதடு துடிக்கின்றது. நெஞ்சின் பறையடிப்பு வேகப்படுகின்றது. பேச நாவெழவில்லை. அங்கமெல்லாம் நடுங்குகின்றது. இவைதாமோ கோபத்தினால் இவர் அடைந்த பேறுகள்! சந்தோஷம் வேண்டினோர் இப்பேயின் வசப்படலாமா? சீசீ! இது ஒருவருக்கு இதசத்துருவாக வந்து இல்லாத கேடுகளையெல்லாம் ஈட்டித் தருகின்றது. இதை நோக்கியே வள்ளுவரும்

"நகையும் உவகையும் கொல்லும் சினத்தில்
பகையும் உளவோ பிற?"

என்றார். இனி காமம், ஆசை; இது ஒருவரை இருப்புக்கொள்ளவே விடுவதில்லை. மக்களுக்கு விஷயத்தின் உண்மை காண உதவியாயிருக்கும் நடுநிலைமையான அறிவை இதுவும் கொள்ளையிட்டுவிடுகிறது. காமவசப்பட்டார் மனம், தம் நினைப்புக்கு எதிர்ப்பக்கம் ஒன்றுண்டு என்ற எண்ணத்தையே மறந்துவிடுகின்றது. இது சந்தேகத்தை மனத்தில் எழுப்பி, இவர் சாவதற்குமுன் எத்தனையோ முறை யமவாதனை அநுபவிக்குமாறு தண்டனை விதித்து விடுகிறது. உதாரணமாக, உனக்கு உன் பேர்த்திமீது அதிக ஆசையிருக்குமல்லவா? நீ தூங்குகிறாய்; அக்குழந்தையும் உன் பக்கத்தில் படுத்து அயர்ந்து நித்திரை செய்கிறது. என்றாலும், உன் ஆசை ஒரு கனவை எழுப்ப,



[illegible] அக்குழந்தை திண்ணையிலிருந்து கீழே விழுந்ததைப் போலக் கண்டு, அடிவயிற்றில் ஏதோ ஒன்று 'பகீர்' என, நீ திடுக்கிட்டெழுந்து, குழந்தையைக் கையினால் தடவிப் பார்த்து, ஒருவாறு சமாதானமடைகிறாய். இப்படிப் பலபல சமையங்கள். இக் காலங்களிலெல்லாம் ஆசை மனத்தைத் திடுக்கிடச்செய்து, அடிவயிற்றுப் பிரதேசமெல்லாம் 'அமளிகுமளி' யாக்க, இவற்றின் விளைவாகப் பின் 'ஈரல் குலைவலி' போன்ற பல ரோகங்கள் உண்டாகின்றன.

அன்றியும் ஆசை புத்தியை மட்டுப்படுத்தி எந்த ஒரு காரணத்தால் மனிதன் மற்ற ஜீவராசிகளினும் உயர்ந்தவனென்று கருதப்படுகிறானோ, அந்தக் காரணத்தை சூனியமாக்கிவிடுகிறது. இதனாலேயே பெரியோரும்

"ஆசையெனும் பெருங்காற்றூடிலவம் பஞ்செனவு மனதலையுங் காலம், மோசம் வரும். இதனாலே கற்றதும் கேட்டதும் தூர்ந்து முத்திக்கான, நேசமும் நல்வாசமும் போய்ப் புலன் நாயின் கொடுமைபற்றி நிற்பர் அந்தோ"
என்று பிரலாபிக்கின்றனர்.

இவ்வாறு பல தீக்குணங்களால், மனிதர் படும் பாட்டையும், கெடும் கேட்டையும் நீ பிரத்தியக்ஷமாய்க் கண்டும், சுவாநுபவமாக அநுபவித்தும் இருப்பாய். ஆதலால் இனியேனும் இப்பகைவரை விட்டு விலக வழிபார். உனது தோழர்களாக வரும் பேரன் பேர்த்தி முதலியவர்களுடன் இக்குணங்களை வைத்து விளையாடுவாயாயின், அக்குழவிப் பருவத்திலேயே அவை அவர்கள் உள்ளத்தில் பதிந்து வாழ்நாள் முழுதும் துன்பத்தையே அவர்களுக்குப் பலனாக அளிக்கும்.

ஆதலால், நீ இன் சொல்லும், ஈர நெஞ்சும், குளிர்ந்த முகமும் உள்ளவளாக அவர்களோடு கலந்து விளையாடு. கடு

மொழியும், சுடு முகமும், கோப மனமும் இப்பருவத்தில் உன்னிடம் அண்டவிடாதே. இவை விட்டு 'உபாத்தியாயி'ருக்கேற்ற அம்சங்க ளல்ல.

இனி, குழந்தைகளுக்கு ஞாபகசக்தி மிகுதியாயிருக்கும். இப்பருவத்திலே அவர்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி. குறள்போன்ற நீதி நூல்களை விளையாட்டுப்போலப் பாடம்பண்ணி விடுவார்கள். பொருள் விளங்காது போனால் போகட்டும். வயதுவந்து, அநுபவமும் கைகூடும்பொழுது அது அவர்களுக்குத் தானே விளங்கும்.

இப்பொழுது பெரியோராய் இந்நூல்களைப் பாடம் செய்வோரெல்லாம் பொருள் அறிந்தே அவ்வாறு செய்கின்றனரோ? எங்கேயோ சிலர் தாமே தமது அநுபவத்தோடு அவற்றை ஒத்துப் பார்த்து உண்மை காண்கின்றனர். அதுபோல இக்குழவியரும் வயது வந்து, அநுபவ அறிவும் கைகூடும் பொழுது பொருள் காணட்டும். இப்பொழுது வீணே போகாமல் விளையாட்டாக அவைகளை மனப்பாடம் பண்ணும்படி செய். இது ஞாபக சக்தியை விருத்தி செய்வதோடு, காலத்தை வீணாக்கவிடாமலும் காக்கின்றது. சுவாமி விவேகாநந்தருக்கு அவர் மூதாதையார் அதி பால்யத்திலேயே, எழு வயது நிறைவதற்கு முன்பே, ஸம்ஸ்கிருத பாஷை அகராதி சொல்லி வைத்து விட்டனர். அது அவரது ஞாபக சக்தியை வளர்த்து, ஒருமுறை படித்த எந்தப் புஸ்தகத்தையும் திரும்பப் பாராது ஒப்புவிக்கும் ஆற்றலை அளித்ததோடு, பிற்காலத்தில் வேதம்போன்ற முடிவான நூல்களுக்கு மெய்ப்பொருள் காணுமாறும் உதவிபுரிந்தது.

இவ்வாறு அது பல நன்மைகளுக்கும், விருத்திகளுக்கும், கால லாபத்திற்கும் காரணமா யிருத்தலின், ஒழிந்த



நேரங்களில், உனது இப்பருவம் முழுதும் இவ் வாத்திமைத் தொழிலைச் செம்மையாகச் செய்துவா.

அம்மையே, இப்படிப் பிறர் போட்டிக்கு இடமில்லாத கர்மமும் தர்மமுமாகிய உனக்கியன்ற காரியங்களில் நீ தலையிட்டு, குழந்தைகளைப்போல சதா களித்துக்கொண்டிரு. ஞானிகளும் முடிவிலே 'பாலர்' குணம் வரப்பெற்றே, சென்றது கருதாமலும், வருவது நினையாமலும் இன்பத்திருப்பர். உனக்கும் அதற்கேற்ற பருவமும் சந்தர்ப்பமும் கிடைத்திருக்கின்றன. நழுவவிட்டு விட்டுப் பின் ஏங்காதே.

கடைசியாக, இவ்வுலகமெல்லாம் படைத்து ஓதற் கரியவனாய், தன்மீது ஒரு பாரத்தையும் போட்டுக்கொள்ளாது, அவரவர் வினைக்குத் தக்கவாறு அவரவர் அநுபவிக்க, சாக்ஷிமாத்திரமாய்ப் பார்த்து நிற்பவனாய், சகல குணங்களுக்கும் அதீதனாய், எவரெவர் என்னென்ன ரூபத்திலே எப்படி எப்படி வணங்கினாலும், அவரவர்க்கு அந்த அந்த உருவத்தில் அப்படி அப்படி அருள்பவனாய், தனது கருணை காரணமாக உலகத்திலே காலத்துக்குத் தக்கவாறு கோலங்கொண்டு உண்மை உணர்த்துபவனாய், ஆதாரம் ஒன்றுமில்லாது, மகாபதிவிரதையாகிய திரௌபதையைப் போல வேறொரு பற்றுக்கோடும் அற்றவர்க்கு, அந்த க்ஷணத்திலே அவர் வேண்டியவாறு உதவவல்ல அற்புதச்சித்தனாய், தமது பொய்மனத்தை மௌனமாக்கிய பெரியார்க்கு எப்பொழுதும் தரிசனம் தந்துகொண்டிருப்பவனாய், எங்கும் நிறைந்தும் மனம்கடந்த நிலையிலேயே விளங்குபவனாய் நிற்கும் கடவுளை, மனத்தைக் காணிக்கையாக இட்டு, ஒழிந்த நேரங்களிலே பஜனைசெய்; பாடி யாடிப் புகழ்ந்து கொண்டாடு.

உன் நாதன் செய்யும் இக் கடவுள் வழிபாட்டிலே இன்னும் துணைவியா யிருந்து, பெரும்பாலும் பூஜைவீடே வாச

மாய், நித்யானந்த நிலையத்தில் இருப்பதற்கு ஓயாது தியானம் செய். எம்பெருமானும் தன் பக்தர்க்கு வேண்டியவாறெல்லாம் தூணிலும் துரும்பிலும் வெளிப்பட்டு அருள்வதைப் போல, உன் சித்தப்படி அருளிப் பேரானந்த நிலையத்தில் இருத்துவான்.

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

சென்னை-600 0

PRINTED AT THE INDIA PRINTING WORKS, MADRAS.